கொண்டார்கள். இஸ்லாமியப் பிரச்சாரப் பணியை மேற் கொண்டார்கள். '' மதீனத் அல்-றசூல்'' (நபியின் நகர்) என யத்ரிப் பிரசித்த மடைந்தது.

இஸ்லாம் நாளுக்கு நாள் வளர்ச்சியுறத் தொடங்கியது. மக்காவில் குறைஷிகளின் கொடுமைக்கும் அநீதிகட்கும் ஆளான முஸ்லிம்கள் இல்லங்களையும், உடைமைகளையும் துறந்து படிப்படியாக மதினாவுக்கு இடம்பெயரத் தொடங்கினார்கள். விளக்கை நாடும் விட்டில்கள் போன்று நபியின் பால் ஈர்க்கப்பட்டார்கள். இக்குழுவினர் '' இடம் பெயர்ந்தவர்கள்'' (முஹாஜிரின்) என அழைக்கப்பட்டனர். யத்ரிபில் நபிகளாருக்கு உதவியொத்தாசை புரிந்தவர்கள் '' உதவியாளர்கள்'' (அன்சாரிகள்) எனப் பெயர் பெற்றனர்.

இஸ்லாம் துரித வளர்ச்சிகண்ட அதேவேளை குறைஷிக்காபிர்களும், ஹிஜாஸ் பிரதேச யூதவட்டத்தினரும் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகளும் எல்லைமீறின. முஸ்லிம் சமூகத்தினுள் ஊடுருவியிருந்த மதினாவைச் சேர்ந்த நயவஞ்சகர்களின் உதவியுடன் நாடோறும் புதுப்புது தொல்லைகளை விளைவிக்கத் தொடங்கி அவை யுத்தத்துக்கு வழிகோலின. முஸ்லிம்களுக்கும் குறைஷிக் காபிர்களுக்கும் யூதர்களுக்குமிடையே பல போர்கள் மூண்டன. பெரும்பாலான போர்களில் முஸ்லிம்களே வெற்றியீட்டினர். பெரிதுஞ் சிறிதுமாக மொத்தம் எண்பதுக்கும் அதிகமான போர்கள் நிகழ்ந்தன. பத்று, உஹுத், கந்தக், கைபர், ஹுனைன் போர்களில் பெருமானார் நேரடியாகக் கலந்துகொண்டு போர்முனை சென்றார்கள். பிரதான பெரும்போர்களிலும், பல சிறுபோர்களிலும் விசேடமாக அலீ (அலை) வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்தார். இப்போர்கள் ஒன்றிலிருந்தும் விலகிக் கொள்ளாத ஒரே வீரர் அலீ (அலை) யாவார். மக்காவிலிருந்து மதினாவுக்கு ஹிஜ்ரா நிகழ்ந்ததன் பின்னர் பத்தாண்டுகளாக நடந்த போர்களில் இரு நூறு முஸ்லிம்களும் ஆயிரத்துக்குச் சற்றுகுறைவான காபிர்களும் கொலையுண்டனர்.

பெருமானாரின் அரும் பணியாலும், முஹாஜிரீன்கள் அன்சாரீன்களின் தன்னலமற்ற தியாகங்களினாலும்

இப்பத்தாண்டு காலத்தினுள் அராபியத் தீபகற்பம் முழுவதும் இஸ்லாம் பரவியது. பாரசீகம், பைஸாந்தியம், அபிசீனியா போன்ற நாடுகளின் அரசர்களுக்கு இஸ்லாத்தில் சேருமாறு அழைப்பு விடுத்து நிருபங்கள் அனுப்பப்பட்டன. இக் காலத்தில் பெருமானார் வறுமையில் செம்மை காண்பவராக எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். பெருமானார் பொழுதை ஒருபோதும் வீணாகக் கழிக்கவில்லை. தங்களின் நேரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒருபகுதியை இறை வணக்கத்திலும் தியானத்திலும் கழித்தார்கள்; இன்னொரு பகுதியை குடும்பத் தேவைகளைக் கவனிப்பதில் கழித்தார்கள்; மற்றைய பகுதியை மக்களுக்காகச் செலவளித்தார்கள். இப்பகுதி நேரத்தை இஸ்லாத்தைப் போதிப்பதிலும், இஸ்லாமிய சமூகத்தின் தேவைகளைக் கவனிப்பதிலும், சமூகத் தீமைகளைக் களைவதிலும், முஸ்லிம்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் உள்நாட்டிலும், அயல்நாடுகளோடும் உறவுகளை வலுப்படுத்துவதிலும் இவை போன்ற இன்னபிற பணிகளிலும் செலவிட்டார்கள்.

மதினாவில் பத்தாண்டுகள் வாழ்ந்த பின் சுகவீனமுற்று சில நாள் சுகவீனத்தின் பின் நபிகள் (ஸல்) இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்கள். காணப்படும் பாரம்பரியங்களின் படி கடைசித் தறுவாயில் பெருமானார் வாயிலிருந்து புறப்பட்டவார்த்தைகள் அடிமைகளையும் பெண்களையும் பற்றியதாகும்.

நபி பெருமானும் திருமறையும்

ஏனைய நபிமார்களைப் போன்று அற்புதம் நிகழ்த்திக் காட்டவேண்டுமெனப் பெருமானாரிடம் எதிர்பார்க்கப்பட்டது. திருமறையில் தெட்டத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, அற்புதங்கள் புரிவதற்காக நபிமார்களுக்கிருந்த சக்தியை நபிகள் பிரானும் உறுதிப்படுத்தியுள்ளார்கள். நபிகள் பெருமான் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்கள் பல விவரிக்கப்பட்டுள்ளன. இவை பற்றிய அறிவிப்புகள் சில நிச்சயமானவையும், நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளக் கூடியவையுமாகும். என்ற போதிலும் இன்றும் ஜீவனுடன்

மிளிரும் நிலையான அற்புதம் இஸ்லாத்தின் சத்தியத்திருமறையான அல்-குர்ஆன் ஆகும். திருக்குர்ஆன் ஒரு புனித நூல், சிறிதும் பெரிதுமான நூற்றிப்பதினாலு அத்தியாயங்க (சூராக்கள்) ளாகப் பிரிக்கப்பபட்ட ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு திருவசனங்களை (ஆயத்) க் கொண்டது. நபிகளாரின் இருபத்தி மூன்று வருட நபித்துவப் பணியின் போது திருமறை வசனங்கள் படிப்படியாக அருளப்பட்டன. ஒன்றுக்கும் குறைவான வசனத்திலிருந்து முழு அத்தியாயம் வரை பல்வேறு சூழ்நிலைகளில், பகலிலும் இரவிலும், பிரயாணத்தின் போதும் இல்லத்தில் வைத்தும், சண்டையின் போதும் சமாதானகாலத்திலும், கடுமையான சோதனைக் காலத்திலும் ஓய்வு நேரங்களிலும் மறைவசனங்கள் அருளப்பட்டன.

புனிதத் திருமறை அதன் பல்வேறு வசனங்களிலும் தெட்டத் தெளிவாகத் தன்னை ஓர் அற்புதமாகவே அறிமுகப்படுத்திக் கொள்கிறது. அதற்கொப்பான சத்தியமும் சௌந்தர்யமும் ஒளிரும் எழுத்துக்களை உருவாக்கிக்காட்டுமாறு அது அக்கால அரபிகளுக்குச் சவால் விட்டுப் போட்டிக்கழைத்தது. வரலாற்றுச் சான்றுகளின் படி அரபிகள் சொல்லினிமையிலும், மொழிப்புலமையிலும், நாவன்மையிலும்உன்னத நிலையை யெய்தியவர்களாய் விளங்கினர். இது பெருமானாரால் உருவாக்கப்பட்ட மானிடப் பேச்சாக இருப்பின் அல்லது இன்னொருவரிடமிருந்து கற்றுக் கொள்ளப்பட்டதாக இருப்பின் இது போன்ற ஒன்றை[23] அல்லது இதைப்போன்ற பத்து சூராக்களை[24] அல்லது இத்திருவசனங்களைப் போல் ஒரு வசனத்தையேனும்[25] தமது அனைத்து சக்திகளையும் பிரயோகித்து அரபிகள் உருவாக்கிக் காட்டட்டும் எனத் திருமறை சவால்விடுகின்றது. இவ்வேண்டுகோளுக்குப் பதிலளிக்குமுகமாக அரபு மொழிப் புலவர்களும் பண்டிதர்களும் குர்ஆன் மந்திரத்தால் ஆனது; எனவே அது போன்ற ஒன்றைப் படைப்பது சாத்தியமில்லை என்றனர்.[26]

அல்குர்ஆன் அதன் அற்புதமான மொழிவளத்துடன் போட்டியிட மக்களை அழைத்தது மட்டுமன்றி முடியுமானால் பொருட்சிறப்புடன் போட்டியிட்டுப் பார்க்குமாறும் சவால்

விடுத்தது. இது மனிதர்களதும் ஜின்களதும் சிந்தனையாற்றலுக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்.[27] ஏனெனில் அல்குர்ஆன் மனித வாழ்வுக்கான சம்பூரணதிட்டத்தையும் உள்ளடக்கிய நூலாகும்.[28] இவ்விடயத்தை நாம் கவனமாக நுணுகியாராய்ந்தால், இறைவன், மனித இனத்தின் எண்ணற்ற நம்பிக்கைகள், ஒழுக்க முறைகள், செயல்கள் பற்றிய அனைத்து அம்சங்களையும் தழுவிய, அவற்றின் விவரங்கள் யாவையும் உண்மை (ஹக்) எனக் கணக்கெடுத்துக் கொண்டுள்ள, சத்திய மார்க்கம் (தீனே ஹக்) என அழைக்கப்படத்தக்க விரிவானதொரு பாரிய திட்டத்தை உருவாக்கியிருப்பதனைக் கண்டு கொள்வோம். இஸ்லாமிய சட்டதிட்டங்கள் யாவும் சத்தியத்தையும் மனித இனத்தின் நல்வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டவை. அவை பெரும்பான்மை மக்களின் மனச்சாய்வுகளையோ, இச்சைகளையோ, அல்லது அதிகாரம் படைத்த ஓர் ஆட்சியாளனின் சபலங்களையோ அடிப்படையாகக் கொண்டவையல்ல.

அல்லாஹ்வின் ஏகத்துவத்தில் நம்பிக்கையென்னும் மகத்தான அவனது வார்த்தை இப்பாரிய திட்டத்தின் அடித்தளமாக அமைகின்றது. அனைத்து அறிவியற் கொள்கைகளும் ஏகத்துவம் (தவஹீத்) என்ற கொள்கையிலிருந்தே பெறப்படுகின்றன. அதன் பின்னர், மத அறிவின் மிகவும் போற்றுதற்குரிய அறிவொழுக்க நெறிகள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. அப்புறம் மனிதச் செயலின் எண்ணற்ற கொள்கைகளும், விவரங்களும், தனி மனித, சமூக நிலைமைகளும் விசாரணைக்குட் படுத்தப்பட்டு அவை சம்பந்தமாக ஏக இறைவணக்கத்திலிருந்து உற்பவிக்கும் கடமைகள் விரிவாக்கஞ் செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்படுகின்றன. இஸ்லாத்தில் விதி (ஊஸூல்) அவற்றின் பிரயோகம் (ஃபுரூ) இரண்டுக்கு மிடையிலான தொடர்பும் தொடர்ச்சியும் எத்தகையதெனில் எந்தவொரு விவகாரத்திலும் குறிப்பிட்டவொரு பிரயோகம், அது அதன் ஆதார மூலத்துக்குத் திருப்பிக் கொணரப்பட்டால், அது ஏகத்துவக் கோட்பாட்டை வந்தடைகிறது. ஏகத்துவம்

பிரயோகிக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்பட்டால் அது, சம்பந்தப்பட்ட பிரச்சினையின் குறிப்பிட்ட கட்டளைக்கும் சட்டத்துக்கும் அடிப்படையாக மாறுகின்றது.

உண்மையில், இத்தகைய ஐக்கியப்பாடும் பரஸ்பரப் பிணைப்புகளும் கொண்டவோர் விரிவான வீச்சினையுடைய மதத்தின் இறுதியான விரிவாக்கத்தை வழங்குவதோ அல்லது அதற்கான அடிப்படை அட்டவணையைத் தயாரித்தளிப்பதோ கூட உலகின் மிகச் சிறந்த சட்ட விற்பன்னர்களின் சாதாரண சக்திகளுக்கு அப்பாற்பட்ட விஷயம். ஆனால் இங்கு தமது குறுகிய வாழ்நாளில் உயிருடல் உடைமை சம்பந்தமான ஓராயிரம் தொல்லைகளுக்கு ஆளான, கடும் போர்களில் ஈடுபடநேர்ந்த, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முட்டுக்கட்டைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்த, முழு உலகின் முன்னால் தன்னந்தனியராய் நின்ற ஒரு மனிதரைப்பற்றி நாம் பேசுகின்றோம். மேலும் அவர் கல்வி கற்றிருக்கவில்லை. எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை.[29] நபித்துவம் அருளப்படுமுன் தம் வாழ்நாளின் மூன்றிலிரு பகுதியைப் படிப்பற்ற நாகரீகப் பண்பாட்டு ரசனையற்ற மக்கள் மத்தியில் கழித்தவர் இவர்: நீர்வளமோ பயிர்வளமோ அற்ற அனல் கக்கும் வெம்பாலையில், அண்டையிலிருந்து அந்திய அரசியல் சக்திகளுக்கு அடங்கிப் போய், தாழ்வுற்றுக் கிடந்த மக்கள் மத்தியில் வாழ்ந்த மனிதர் இவர்.

மேற்கூறியவை ஒரு புறத்திருக்க, திருமறை இன்னொரு விதத்தில் மனிதர்களுக்குச் சவால் விடுகின்றது.[30] இருபத்தி மூன்றாண்டு காலமாக, முற்றிலும் மாற்றமான வெவ்வேறு நிலைமைகளில் - கஷ்டமான காலத்திலும் சௌகர்யமான நாட்களிலும் சண்டையின்போதும் சமாதானத்தின் போதும், வலிமையுடனிருந்த போதும், வலிமையற்றிருந்தபோதும் - படிப்படியாக அருளப்பட்டது இந்நூல். இது இறைவனிடமிருந்து வராமல் மனிதனால் உருவாக்கப்பட்ட தாயிருப்பின் இதனுள் எத்தனையோ முரண்பாடுகள் இடம் பெற்றிருக்க வேண்டுமே. பூரண நிலை யெய்துவதற்கான மனிதஜீவியின் வளர்ச்சியின் போது படிப்படியான முன்னேற்றம் தென்படுவது போன்று

ஆரம்பத்தை விடவும் இதன் முடிவு அதிக பூரணத்துவமானதாய்த் தென்படல் வேண்டுமே. இதற்கு மாற்றமாக, மக்காவில் அருளப்பட்ட ஆரம்ப வசனங்களுக்கும் பின்னர் மதினாவில் அருளப்பட்ட வசனங்களுக்குமிடையே தரவித்தியாசமின்றி மறை வசனங்கள் ஒரே விதமாய்க் காணப்படுகின்றன. குர்ஆனின் ஆரம்பத்துக்கும் முடிவுக்குமிடையே வித்தியாசத்தைக் காணோம். திருமறையின் ஒவ்வொரு பகுதியும் அதன் மற்றைய பகுதிகளை நிகர்த்ததாயுள்ளது. பிரமிக்க வைக்கும் அதன் வெளிப்பாட்டுத்தன்மை திருமறை முழுவதிலுமே ஒரே பாணியிலமைந்துள்ளது.

குறிப்புகள்

அத்தியாயம் V

1. வாழ்வினதும், படைப்பினதும் குறிக்கோள் நோக்கிய வழிகாட்டலை இது குறிக்கின்றது.

2. ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் நாடிச் செல்லும் குறிக்கோள் ஒன்றுண்டு.

3. படைப்புக்கு ஒரு நோக்கமும் குறிக்கோளும் உண்டு என்பதையே உண்மையாகப் படைத்தல் என்பது குறிக்கின்றது.

4. பதிப்பாசிரியர் குறிப்பு: ''கிராத்'' என்ற பாரசீகச் சொல்லை நூலாசிரியர் பயன்படுத்துகிறார். ''அக்ல'' என்பதைப் போலவே இச்சொல் அறிவு (சைதன்யம்) என்றும் பகுத்தறிவு என்றும் இருபொருள்தரும். ஆனால் இது வெறுமனே பகுத்தறிவையோ, பகுத்தறிவுக்குச் சமானமாக அறிவுபற்றிய நவீனப்புரிதலையோ குறிக்காது. அறிவுபற்றிய மரபுரீதியான அர்த்தம் பகுத்தறிவைக் கடந்த உடனடியான அகக் காட்சி (சைதன்யம்) யாகும்; எனினும் இது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்பதல்ல: பகுத்தறிவு அதனுள் அடங்குவதாகும்.

5. மனித சமுதாயம் சந்துஷ்டியும் சௌஜன்யமும் வாய்ந்ததாகச் சமாதானமாய் வாழவேண்டுமென, ஆழ்ந்த சிந்தனையற்ற சாதாரண மக்கள் கூட மனித ஜீவி என்ற முறையில் இயல்பாகவே விரும்புகின்றனர். தத்துவக் கண்ணோட்டத்தின் படி தேவை, காதல், கவர்ச்சி, பசி போன்ற விருப்பத்தையும் விரும்பப்படுவதனையும் இணைக்கும் உறவுத்தன்மை வாய்ந்தனவாகும். காதலிக்க ஒருவர் இல்லாவிடின் காதலென்பது அர்த்த மற்றுப் போகும். இவையாவும் பூரணத்துவம் என்ற அர்த்தத்தையுணர்ந்துகொள்ள உதவுகின்றது. பூரணத்துவமென்பது இல்லாவிடின் பூரணமின்மையென்பதற்கும் அர்த்தம் இராது.

6. ஒவ்வொரு தனிமனிதனும் வாழ்வின் ஒருபகுதிக்குப் பொறுப்பானவர் என்றும், நியாயமான அளவு ஜீவனத்தை அவர் பெறுகின்றார் என்றும் இதனால் அர்த்தமாகின்றது. மனிதர்கள் பல்வேறு அந்தஸ்துக் குரியவர்கள் என்பதன் அர்த்தம் மேஸ்திரி தொழிலாளிமீது அதிகாரஞ் செலுத்துகிறார். இயக்குனர். தன்கீழுள்ளவர்கள் மீது அதிகாரஞ் செலுத்துகிறார், சொந்தக்காரன் வாடிக்கைக்காரன்மீது அதிகாரஞ் செலுத்துகிறான். வாங்குவோன் விற்பவன் மீது அதிகாரஞ் செலுத்துகிறான்.

7. கவலை யென்பது இங்கு மனிதனின் பொருளாசையைக் குறிக்கிறது.

8. தீர்க்கதரிசனமும் இறையறிவிப்பும் (வெளிப்பாடு) இன்றிப் பகுத்தறிவு போதாததாகிவிடும் என்பதை இவ்வசனம் தெளிவாக்குகின்றது. இறைவனின் இருப்புக்கான வாதத்தை முன்வைப்பதற்குப் பகுத்தறிவு மட்டும் போதுமாயின் தீர்க்கதரிசிகளுக்குத் தேவையேற்பட்டிராது.

9. நபிமார்கள் நேரான வழியில் நடத்திவைக்கப்பட்டனர் என்பதன் அர்த்தம் அவர்கள் இறைவனை நோக்கியும் அவனை வழிபடுவதற்கும் நெறிப்படுத்தப்பட்டனர் என்பதாகும்.

10. முன்னால் ஒரு காவலர், பின்னால் ஒருகாவலர் என்பது இறையறிவுப்புக்கு

முன்னாலும் பின்னாலும் உண்டான நிலைமைகளை, பெருமானாரின் வாழ்வுக்கு முன்னாலும் பின்னாலும் உண்டான நிலைமைகளைக் குறிக்கின்றது.

11. பதிப்பாசிரியர் குறிப்பு: அரபியிலும், பாரசீகத்திலும் ''தீன்'' என்ற சொல் அனைத்தும் தழுவிய அர்த்தங் கொண்டதென்பதையும் இச்சொல்லை மற்றவை மத்தியில் ஒன்று என்ற அர்த்தத்தில் அல்லாமல், முடிந்தளவு பரந்த அர்த்தத்தில் உலகு கடந்த கொள்கைகளின் அடிப்படையில் அதுவொரு முற்று முழுதான வாழ்க்கைத் திட்டம், அல்லது அவ்வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் அதுவோர் மரபு என நாம் புரிந்துகொண்டால்தான் அச்சொல் மதம் என மொழிபெயர்க்கப்படல் வேண்டும்.

12. பதிப்பாசிரியர் குறிப்பு: அதன் வாதத்துக்கு மனிதனது படிமுறை வளர்ச்சியை அடிப்படையாகக் கொள்கிறது. எனவே இன்னொரு கண்ணோட்டத்தில் அது நபிமார்கள் அனைவரையும் சமமானவர்களாகக் கருதுகின்றபோதிலும், அடுத்தடுத்து வந்த இறையறிவிப்புகள் '' பூரணத்துவம்'' அடைதல் பற்றிப் பிரஸ்தாபிக்கின்றது. என்ற போதிலும் நவீன பரிணாமக்கொள்கையோடும் நிச்சயமற்ற வரலாற்று வளர்ச்சிபற்றிய நம்பிக்கையோடும் இதனைக் குழப்பிக் கொள்ளக் கூடாது. காலம், வரலாறு பற்றிய இஸ்லாமியக் கோட்பாட்டுக்கு இவை நேர்மாற்றமானவை.

13. இவ்வசனத்தின் தொடக்கத்தில் வேதநூல் என்றசொல் திருக்குர்ஆனைக் குறிக்கின்றது. இரண்டாவது வேதநூல், தௌராத்தையும் சுவிசேஷ நூல்களையும் குறிக்கும்.

14. ''எதிர்க்கப்படமுடியாத வேதநூல்'' திருக்குர்ஆனாகும்.

15. அல்-குர்ஆன் மாற்றப்படமுடியாத இறுதிவேதநூல் என்ற கருத்தும் நபிகளார் '' தீர்க்கதரிசனத்தின் முத்திரை'' என்பதும் அத்தியாவசியமாய் ஒரே உண்மையின் இரு அம்சங்களாம்.

16. இஸ்லாமியக் கண்ணோட்டத்தின் படி திருக்குர்ஆனில் சகல அறிவினதும் அடிப்படைகள் அடங்கியுள்ளன. அதன் மூலம் எந்த அறிவுத்துறையையும் விளக்கவும், விவரிக்கவும் முடியும்.

17. பதிப்பாசிரியர் குறிப்பு: அற்புதம் என்பது அரபியிலும் பாரசீகமொழியிலும் ''காரிக் அல் ஆதாஹ்'' எனப்படும். அதாவது இவ்வுலகில் காரணிகளுக்கும் அவற்றின் விளைவுகளுக்கு மிடையே காணப்படும் வழக்கமான உறவை மீறுவது என்பதாகும். அவை மீண்டும் மீண்டும் விடாமல் நிகழ்வதால் காரணத்துவம் என்ற அறுத்தெறிய முடியாத வலைக்குள் அவை மூடுண்டு கிடப்பதாக நமக்குத் தோன்றுகிறது. அற்புதம் என்பது இன்னொரு உலகிலிருந்து அல்லது இருப்பு நிலையிலிருந்து ஒரு காரணி வழக்கமான இவ்வுலகினுள் ஊடுருவல் செய்வதைக் குறிக்கின்றது. எமது அன்றாட அனுபவத்தால் எமக்குப் பரிச்சயமானதிலிருந்து இயல்பாகவே வித்தியாசமான தாக்கத்தை இது உண்டுபண்ணுகிறது. எனவே வழக்கமாகிப் போனதன் '' வழக்கு மீறலாக'' இது அமைகின்றது.

18. இத்திருவசனம் ஓர் உறுதிப்பாடாக அமைகின்றது. இவ்விடயத்தில், குறிப்பிடப்பட்ட ஐவரைத்தவிர புதிய வொரு ஷரீஅத்தைக் கொணர்ந்த வேறு நபிமார்கள் இருந்திருப்பின் அவர்களும் குறிப்பிடப்பட்டிருப்பர்.

19. புதிய ஷரீஅத்தை உலகுக்குக் கொணர்ந்த அதே நபிமார்கள் மீண்டும் குறிப்பிடப்படுகின்றனர்.

20. பதிப்பாசிரியர் குறிப்பு: பாரசீக மொழியிலும், மற்றும் முஸ்லிம் மொழிகளிலும் பெருமானாரின் பெயருக்கு முன்னால் ஹஸ்ரத் என்ற அடைமொழி பயன்படுத்தப்படுகின்றது. பெயரின் இறுதியில் ''அன்னார் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக'' (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்று தொடர்ந்து குறிப்பிடப்படும். ஹஸ்ரத் என்பது ஏனைய நபிமார்களுக்கும், ஷீஆ இமாம்களுக்கும் , மற்றுஞ்சில பிரபல மத அறிஞர்கட்கும் பயன்படுத்தப்படுகின்றது.

21. தொகுப்பாசிரியர் குறிப்பு: இஸ்லாமிய கலண்டர் நபி பெருமானார் (ஸல்) மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரா மேற்கொண்டதிலிருந்து தொடங்குகிறது. எனவே ஹிஜ்ரா கலண்டர் என அழைக்கப்படுகின்றது. ஹிஜ்ரா என்ற அரபிச் சொல்லின் அர்த்தம் '' இடம் பெயர்வு'' என்பதாகும்.

22. ''வறுமை (ஃபக்ர்) எனக்குப் பெருமை'' என்பது பிரபல நபி மொழி. இப்பகுதியில் எடுத்தாளப்பட்டுள்ள விடயங்குறித்து இப்னு ஹாஸிமின் சீறா, கெய்ரோ, 1355-56 ஹலபியின் ஷீரு, கெய்ரோ, 1320: பிஹார் அல்-அன்வார், வல்- VI, , மற்றும் பெருமானார் சரிதைபற்றிய பாரம் பரிய நூல்களைப் பார்க்கவும்.

23. அவன் கூறுகிறான்: '' அப்படியாயின், அவர்கள் சொல்வது உண்மையென்றால் இதைப் போன்ற வொரு செய்தியைக் அவர்கள் கொண்டுவரட்டும்'' (குர்ஆன், 52, 34).

24. இறைவன் கூறுகிறான்: '' இதனைப் பொய்யாகக் கற்பனை செய்துக் கொண்டாரென அவர்கள் கூறுகின்றனரா? அவ்வாறாயின் நீர் கூறும்: இதைப் போன்ற பத்து அத்தியாயங்களையேனும் நீங்கள் கற்பனை செய்து கொண்டு வாருங்கள். அல்லாஹ்வையன்றி உங்களுக்குச் சாத்தியமான யாவரை இதற்காக அழைத்துக் கொள்ளுங்கள் மெய்யாகவே நீங்கள் உண்மை சொல்பவர்களாயிருந்தால். (குர்ஆன், 11:13)

25. அவன் கூறுகின்றான்: ''அல்லது அவர்கள் கூறுகின்றனர்: அவர் அதைக் கற்பனை செய்துள்ளார் (என்று) ? கூறுவீராக: அப்படியாயின் இதைப் போன்ற ஒரு சூராவைக் கொண்டுவாருங்கள் (என்று) . . . '' (குர்ஆன், 10:38)

26. அரபுப் பண்டிதனொருவனின் வாசகம் இங்கே நினைவுறுத்தப்படுகின்றது, ''இன்னும் கூறப்படுகின்றது: இது பழங்கால மந்திரமேயன்றி வேறல்ல; இது மனிதனின் மொழியேயன்றி வேறல்ல'' (குர்ஆன், 74:24-25)

27. பதிப்பாசிரியர் குறிப்பு: குர்ஆனில் குறிப்பிடப்படும் ஜின் ஆதமின் வீழ்ச்சிக்கு முன்பு இவ்வுலகில் குடியேறியிருந்த பிரக்ஞை கொண்ட ஆத்ம சக்திகள் என்றும் இப்பொழுதும் இவை சூட்சும உலகில் இருக்கின்றன என்றும் மரபு ரீதியான விளக்கம் தரப்படுகின்றது. ஜின், இன்ஸ் (மனித இனம்) ஆகிய பதங்கள் இவ்வுலகில் மனோசக்தி பெற்ற பிரக்ஞை கொண்ட ஜீவன்களை குறிப்பதற்காக இஸ்லாமிய நூல்களில் ஒன்றாகச் சேர்த்து உபயோகிக்கப்படுகின்றன. அனுபந்தம் நான்கைப் பார்க்கவும்.

28. அவன் கூறுகிறான்: '' கூறுவீராக: நிச்சயமாக, திருக்குர்ஆனைப் போன்ற ஒன்றை உண்டாக்குவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று கூடி ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொண்ட போதிலும் இது போன்ற ஒன்றை அவர்களால் உண்டாக்க

முடியாது'' குர்ஆன், 17:88)

29. நபியின் வாய்மொழியாக இறைவன் நினைவுறுத்துகிறான்: . . .''அது (எனக்கு வருவதற்கு முன் நான் வாழ்நாள் முழுவதும் உங்கள் மத்தியில் வாழ்ந்தேன். அப்படியாயின் நீங்கள் அறியமாட்டீர்களா? (குர்ஆன், 10:17) அவன் கூறுகிறான்: இன்னும் (முஹம்மதே) நீர் இதற்கு முன் எந்த வேதநூலையும் வாசிப்பவராயிருக்கவில்லை. இதனை நீர் உமது கையால் எழுதியவரும் அல்ல . . .'' (குர்ஆன் 29:48) மேலும் அவன் கூறுகிறான். எமது அடியாருக்கு (முஹம்மதுக்கு)நாம் அருளியதைப் பற்றி உங்களுக்குச் சந்தேகமாயிருப்பின், இதனைப் போன்ற ஓர் சூராவை உண்டாக்குங்கள், நீங்கள் உண்மையாளர்களாயின் அல்லாஹ்வைத்தவிர உங்கள் சாட்சிகளை அழையுங்கள்'' (குர்ஆன், 2:23)

30. அவன் கூறுகிறான்: ''அப்படியாயின் அவர்கள் குர்ஆனைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க மாட்டார்களா? அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருப்பின் இதில் அதிகம் பேதத்தை அவர்கள் கண்டிருப்பார்கள்'' (குர்ஆன் 4:82)

அத்தியாயம் VI

இறுதித் தீர்ப்பு

மனிதன் ஆன்மாவும் உடலும் அமைந்தவன்

இஸ்லாமிய அறிவுத்துறையோடு பரிச்சயமுள்ளவர்கள், திருமறையினதும், பெருமானாரதும் போதனைகளுக்கமைய ஆன்மாவையும் உடலையும் பற்றி அநேக குறிப்புகள் இருப்பதை அறிவர். உடலை, ஸ்தூல தேகத்தைப் பற்றிய -புலன்களால் அறிந்து கொள்ளக் கூடியவை பற்றி கருத்தாக்கம் எளிதாயிருந்தபோதிலும் உயிர் அல்லது ஆன்மா (ரூஹ்) பற்றிய கருத்தாக்கம் கடினமானதும் சிக்கலானதுமாகும்.

அறிவு பூர்வமான விசாரணையிலீடுபட்ட ஷீஆ, சுன்னத் ஜமாஅத் இரண்டையுஞ் சேர்ந்த - மத அறிஞர்களும் தத்துவாசிரியர்களும் உயிர் அல்லது ஆவி (ரூஹ்) யின் யதார்த்தம் பற்றி வித்தியாசமான கருத்துக்களைத் தெவித்துள்ளனர். எனினும், உயிர் அல்லது ஆன்மா (ரூஹ்) எனப்பட்டதும் உடலும் ஒன்றுக்கொன்று மாற்றமான இருவேறு யதார்த்தங்கள் என இஸ்லாம் கருதுகின்ற தென்பது ஓரளவுக்கு நிச்சயம். மரணத்தின் மூலம் உடல் அதன் குணாம்சங்கள் அழிந்து சிதைவடைகின்றது. ஆனால் ஆன்மாவுக்கு அவ்வாறு நேர்வதில்லை. வாழ்க்கை அதன் மூலஸ்திதியுடனும் கொள்கையுடனும் உயிரை அல்லது ஆன்மாவைச் சார்ந்துள்ளது. உயிர் உடலைப் பிரிகையில் - உடலுடன் அதன் பிணைப்பைத் துண்டித்துக் கொள்கையில் - மரணம் எனப்படும் நிகழ்வு உண்டாகையில் - உடலின் இயக்கம் ஓய்கின்றது. ஆனால். உயிர் அல்லது ஆன்மா தொடர்ந்தும் வாழ்கிறது.

திருமறையையும், நபிகுடும்பத்தைச் சேர்ந்த இமாம்களின்

உபதேசங்களையும் உன்னிப்பாகத் கவனித்தால், அரூபமான (சித்து) ஆன்மா அசித்தான (சடப்பொருள்) உடலுடன் ஒருவகை உறவுத் தொடர்பு கொண்டுள்ளதென அறியலாம். எல்லாம் வல்ல இறைவன் தன் திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்: ''நிச்சயமாக நாம் மனிதனை களிமண்ணின் சத்திலிருந்து படைத்தோம், பின்னர் அதனை இந்திரியமாக்கி ஒரு பத்திரமான இடத்தில் வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாக்கினோம். பின்னர் அவ்விரத்தக் கட்டியை மாமிசப் பிண்டமாகச் செய்தோம். பின்னர் அம்மாமிசப் பிண்டத்திலிருந்து எலும்பை உற்பத்தி செய்து, அவ்வெலும்புக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர் அதனை மனித சிருஷ்டியாக அமைத்தோம். (குர்ஆன், 23:12-14) இத்திருவசனங்களின் ஒழுங்கமைப்பிலிருந்து முதலில் சடப்பொருளின் படிமுறையான உருவாக்கம் விவரிக்கப் படுகின்றதென்பதும், உயிர் (ஆன்மா) பிரக்ஞை, சித்தம் முதலியவையின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் போது, முன்னைய சிருஷ்டியமைப்பிலிருந்து வித்தியாசமான இன்னொரு வகை சிருஷ்டியமைப்பு பற்றிப் பிரஸ்தாபிக்கப்படுகின்றதென்பதும் தெளிவாகின்றது.

இன்னோரிடத்தில், மரித்தபின் சிதைவுற்று, மூலகங்கள் திலமடைந்து இல்லாமற் போகும் மனித உடம்பு மீண்டும் உருப்பெற்று மனிதனாக மாறுவது எப்படியெனக் கேட்கும் சமுதாய வாதிகளுக்கு விடையிறுப்பது போல் கூறப்படுகின்றது: ''ஆகவே (நபியே) நீர் கூறும்: உங்கள் மீது சாட்டப்பட்டிருக்கும் 'மலக்குல் மவ்த்' (என்பவர்) தான் உங்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறார். பின்னர் உங்கள் இறைவனிடமே நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள்.'' (குர்ஆன், 32:11) மரணத்துக்குப் பின்னால் உடல் அழிந்து மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகிறது. ஆனால் நீங்கள் அதாவது உங்களது உயிர்கள் (ரூஹுகள்) உங்களது உடலிலிருந்து வாங்கப்பட்டு எம்மிடம் பாதுகாப்பாய் இருக்கின்றன என்று மேற்கூறிய திருவசனம் அர்த்தந்தருகிறது.

இன்னுமோர் இடத்தில் திருமறை மேலும் ஆன்மா

அருபமானது (சித்து) என்பதை உறுதிப்படுத்துகிறது. ''(நபியே) 'ரூஹைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள்.' அது இறைவனின் கட்டளையால் ஏற்பட்டது' எனக் கூறுவீராக''. . . (குர்ஆன், 17:85).

பிறிதோரிடத்தில் அவனது (அம்ர்' எனும்) கட்டளையை விளக்கும் போது அவன் கூறுகிறான்: '' அவன் யாதொரு பொருளை (ப்படைக்க)க் கருதினால் அவன் கட்டளையிடுவதெல்லாம் ''ஆகுக'' எனக் கூறுவதுதான். உடனே அது ஆகிவிடுகின்றது. சகலவற்றின் அதிகாரம் எவனிடமிருக்கின்றதோ அவன் பரிசுத்தமானவன் (குர்ஆன், 36,82-83) இத்திருவசனங்களிள் மூலம், வஸ்துகளைப் படைப்பதில் அல்லாஹ்வின் கட்டளை, படிமுறையானதல்ல வென்பதும் காலத்துக்கும் இடத்துக்கும் கட்டுப்பட்டதல்ல வென்பதும் அர்த்தமாகின்றது. எனவே, அல்லாஹ்வின் கட்டளைக்கு அப்பாற்பட்டவொரு யதார்த்தத்தைக் கொண்டிராத ரூஹு அசித்து அல்ல. அதன் இருப்பில் சடத்துவமான குணாம்சங்கள் கிடையாது. அதாவது ரூஹூ கூறுபடுதல், மாறுதல், காலத்திலும் வெளியிலும் நிலைகொள்ளுதல் முதலிய குணாம்சங்களைக் கொண்டதல்ல.

ரூஹு பற்றி மற்றொரு கண்ணோட்டத்தில் கருத்தாடல்

ரூஹு பற்றிய திருமறையின் கருத்தை அறிவார்ந்த விசாரணை உறுதிப்படுத்துகின்றது. ஒவ்வொருவரும் தனது 'நான்' என்ற யதார்த்தம் பற்றி இடையறாத பிரக்ஞை கொண்டுள்ளார். சிலவேளை தனது தலை, கை, கால் போன்ற உறுப்புகள் பற்றிக் கூட மனிதன் மறந்துவிடுகிறான். ஆனால் அவனது அகம் இருக்கும் வரை 'நான்' என்ற பிரக்ஞை அவனை விட்டகல்வதில்லை. இச்சைதன்யம் பிரிக்கவோ பகுக்கவோ பட முடியாது. மனிதனது உடல் தொடர்ந்து மாற்றத்துக்குட்பட்டு தனக்கென வெளியில் வெவ்வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ,காலத்தின் வெவ்வேறு கணங்களினூடு செல்கின்றது. என்றபோதிலும் '' நான் '' என்ற யதார்த்தம் ஸ்திரமானதாகும். அது மாற்றமெதுவும் அடைவதில்லை. ''நான்'' என்பது

ஜடமாயின் அது கூறுப்படுதல், மாற்றமடைதல், காலத்திலும் வெளியிலும் நிலைகொண்டிருத்தல் முதலிய சடப்பொருளின் குணாம்சங்களை அது ஏற்றிருக்கும்.

உடல் சடப்பொருளிற் காணப்படும் உறவுகாரணமாய் இக்குணாம்சங்கள் உயிரைச்சார்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் காலத்தில் இக்கணமும் மறுகணமும், வெளியில் இம்முனையும் வேறு முனையும் இவ்வடிவும் வேறு வடிவும், இயக்கத்தின் இத்திசையமைவும் வேறு திசையமைவும்- இவை யாவும் உடலின் குணாம்சங்களே யென்பது நாம் சற்றே கவனிப்பினும் பிரத்தியட்சமாய்விடும். ஆன்மா உயிர் (ரூஹு) இவற்றிலிருந்து சுயாதீனமானது. இத்தீர்மானங்கள் யாவும் உடலின் மூலமாகவே ஆன்மாவை அடைகின்றன. ஆன்மா அல்லது உயிரின் குணாம்சங்களில் ஒன்றான பிரக்ஞை அல்லது அறிவு சம்பந்தப்பட்ட மட்டில் இத்தர்க்க நியாயத்தை தலை கீழாக மாற்றிப் பிரயோகிக்கலாம். அறிவு என்பது சடப்பொருள் பண்பாக இருப்பின், சடப்பொருளின் நிலைமைகளுக்கேற்ப அது கூறுபடுதலையும்,பகுப்பாய்வையும் ஏற்பதாகவும், காலத்தாலும் வெளியாலும் தீர்மானிக்கப்பட்டதாகவும் இருக்கும் என்பது பிரத்தியட்சம்.

இவ்வறிவு விசாரணை நீண்டு கொண்டே போகலாம் என்பதும் இப்போது கவனிக்கப்பட முடியாத அநேக கேள்விகளும் விடைகளும் உளவென்பதும் சொல்லத் தேவையில்லை. இங்கே தரப்பட்டுள்ள சுருக்கமான கருத்தாடல் உடலும் ஆன்மாவும் சம்பந்தமான இஸ்லாமிய நம்பிக்கையைச் சுட்டுவதாக மட்டுமே அமைகின்றது. இது சம்பந்தமாய் முழுமையான விசாரணையை இஸ்லாமிய தத்துவ நூல்களில் காணலாம்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் மரணம்

மேலோட்டமாய்ப் பார்க்கும் போது மரணம் என்பது மனிதனின அழிவாகவும், மனித வாழ்வென்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட அற்பமாய் முடிவதாகவும் தெரியும். ஆனால் இஸ்லாமோ, மரணம் என்பது மனிதன் ஒரு

நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு இடம் பெயர்தல் எனக் கூறுகின்றது. இஸ்லாத்தின் படி மனிதன் முடிவற்ற நித்திய ஜீவியம் கொண்டவன். உடலிலிருந்து உயிர் பிரிதலாகிய மரணம் மனிதனை, மரணிப்பதற்கு முன் அவன் செய்த நன்மை தீமைகளுக்கேற்ப, ஈடேற்றமோ கைசேதமோ தரவல்ல இன்னொரு வாழ்நிலைக்கு இட்டுச் செல்கிறது. பெருமானார் (ஸல்) மொழிந்தார்கள். '' நீங்கள் ஜீவிப்பதற்காகப் படைக்கப் பட்டிருக்கிறீர்கள்: அழிந்து போவதற்காக வல்ல. என்ன நடக்கின்ற தென்றால் நீங்கள் ஒரு மனையிலிருந்து இன்னொன்றுக்கு இடம் மாற்றப்படுவீர்கள்''[2]

இடைப்பட்ட நிலை (பர்ஸக்)

திருமறையிலிருந்தும் பெருமானாரின் ஹதீஸ்களிலிருந்தும் பெறப்படுவதன்படி, மரணத்துக்கும் மீண்டும் உயிருடன் எழுப்பப்படுவதற்கும் இடையே வரையறுக்கப்பட்ட ஒரு தற்காலிக வாழ்வு மனிதனுக்கு உண்டு. 'பர்ஸக்' எனப்படும் இவ்விடைப்பட்ட நிலை இம்மைக்கும் மறுமையின் நித்திய வாழ்வுக்குமிடையே ஓர் இணைப்பையுண்டு பண்ணுகிறது. மனிதன் மரணித்த பின் அவனது நம்பிக்கை பற்றி இவ்வுலகில் அவன்புரிந்த நன்மை தீமை பற்றி விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறான். அத்தீர்ப்புக் கேற்ப சுகானந்த நிலையை அல்லது வேதனையையனுபவிக்கின்றான். பொதுவாக மீண்டும் உயிருடன் எழுப்பப்படும் நாள் வரை புதிதாக அடைந்த இந்நிலை தொடர்கின்றது. இவ் விடைப்பட்ட (பர்ஸக்) நிலையில் மனிதனது நிலைமை, விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ள ஒருவனின் நிலைபோன்றதாகும். கோப்பு பூரணப்படுத்தப்படும் வரை அவன் விசாரிக்கப்படுகிறான். அப்புறம் அவன் தீர்ப்புக்காக காத்திருக்கின்றான்.

இவ்வுலக வாழ்வில் மனிதன் பெற்றிருந்த அதே வகையான ஆன்மாவையே இடைப்பட்ட (பர்ஸக்) நிலையில் மனிதன் பெற்றிருப்பான்.[3] அவன் ஒழுக்க சீலனாக விருப்பின் இறை சந்நிதானத்ததைக் சமீபித்துத் தூயவர்களையண்மி அவன் இன்ப

நிலை காண்பான். அவன் தீயவனாக விருப்பின் '' வழி தப்பியவர்களின் நாயகர்களான சாத்தானியச் சக்திகளுடன் சேர்ந்து அவன் வேதனையனுபவித்துக் கொண்டிருப்பான்.[4]

சுகானந்த நிலையில் வாழும் கூட்டத்தினரைப் பற்றி மாபெரியோனான இறைவன் பின்வருமாறு கூறுகின்றான்: ''அல்லாஹ்வின் பாதையில் வெட்டப்பட்டோரை, இறந்து விட்டவர்களென நீங்கள் ஒருபோதும் கருதவேண்டாம். அவர்கள் நிச்சயமாக உயிரோடிருக்கிறார்கள். அவர்களது இறைவனிடமிருந்து அவர்களுக்கு ஆகாரமும் அளிக்கப்பட்டு வருகிறது. அல்லாஹ் தன் அருளால் அவர்களுக்கு அளித்தவற்றைக் கொண்டு ஆனந்தமடைந்தவர்களாக இருக்கின்றார்கள். தங்களுடன் சேராமல் தங்களுக்குப்பின் (இவ்வுலகில் உயிரோடு) இருப்பவர்களைப் பற்றியும் 'அவர்களுக்கு எவ்வித பயமும் ஏற்படாது; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்' என்று மகிழ்ச்சியடைந்த வர்களாகவும் அல்லாஹ்வின் (அருளினால் தாங்கள் அடைந்த) பாக்கியத்தைப் பற்றியும் மேன்மையைப் பற்றியும் நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளின் கூலியை வீணாக்கிவிடுவதில்லை என்பதைப் பற்றியும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருப்பார்கள்'' (குர்ஆன், 3,169-171). உலகில் தம் செல்வத்தையும் சொத்துகளையும் நியாயமான முறையில் பயன்படுத்தாத இன்னொரு கூட்டத்தினர் பற்றி விவரிக்கையில் அவன் கூறுகிறான்: ''அவர்களில் எவனுக்கும் மரணம் வந்தாலோ 'என் இறைவனே! என்னை (உலகத்திற்கு)த் திரும்ப அனுப்பிவிடு நான் விட்டு வந்த அதில் நல்ல காரியங்களையே செய்து கொண்டிருப்பேன்,' என அவன் கூறுவான். (எனினும் அது ஆகக் கூடிய காரியம் அன்று) அவன் கூறக்கூடிய வெறும் வார்த்தையே (யன்றி வேறில்லை). அவர்களுக்கு முன் அதில் (உயிர் கொடுத்து) எழுப்பப்படும் நாள்வரையில் ஓர் அரண் (பர்ஸக்) ஏற்பட்டுவிடும்'' (குர்ஆன் 23,99-100).

இறுதித் தீர்ப்பு நாள் – மீண்டும் உயிருடன் எழுப்பப்படல்

புனித வேத நூல்களில் திருக்குர்ஆன் மட்டுமே இறுதித் தீர்ப்புநாள் பற்றி விவரமாகப் பேசுகின்றது. இந் நாளைப் பற்றித் தௌராத் குறிப்பிடாத போதிலும், விவிலிய நூலில் சுட்டுதலாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், நூற்றுக்கணக்கான இடங்களில் வெவ்வேறு பதப்பிரயோகங்களினூடாக திருக்குர்ஆன் இறுதித் தீர்ப்புநாள் பற்றிக் குறிப்பிடுகின்றது. இந் நாளில் மனித இனத்துக்கு நேரப்போகும் கதி பற்றி சில சந்தர்ப்பங்களில் சுருக்கமாகவும், மற்றைய சந்தர்ப்பங்களில் விரிவாகவும் திருமறை விவரிக்கின்றது. கைம்மாறு கிடைக்கும் நாள் (இறுதித் தீர்ப்பு நாள்) அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்தவரை இறை நம்பிக்கையின் மட்டத்தில் வைத்துக் கணிக்கப்படுவதாகவும் இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகளில் ஒன்றாகவும் உள்ளது. இதில் நம்பிக்கையில்லாதவன் அதாவது மீண்டும் உயிருடன் எழுப்பப்படுவதை மறுப்பவன் இஸ்லாத்தின் எல்லைக் கோட்டுக்கு வெளியே இருப்பவனாகவும் நித்தியமான கேட்டைத் தவிர அவனுக்கு வேறு கதி கிடையாது எனவும் கூறப்பட்டுள்ளது.

இதுவே உண்மை ஏனெனில் இறைவனின் செயல்களில் மதிப்பீடு இல்லாவிட்டால், நற்கூலியும் தண்டனையும் இல்லாவிட்டால், இறைவனின் கட்டளைகள் அவனது ஏவல் விலக்கல்கள் அடங்கிய வேதத் தூது தாக்கமற்றுப் போகும். அப்போது நபித்துவத்தினதும் வேதத்தூதினதும் இருப்பும் இல்லாமையும் வித்தியாசமற்றதாகிவிடும். வாஸ்தவத்தில் அதன் இருப்பை விட இல்லாமை விரும்பத்தக்கதாய்விடும். ஏனெனில், கட்டுப்பாடுகளையும் 'சுதந்திரம்' என்று தோன்றுவதன் இலக்கையும் ஏற்றுக்கொள்ளாமல் இறைவனது சட்டத்தின் விதிகளைப் பின்பற்றுதல் சாத்தியமன்று, இதற்குக் கீழ்ப்படிவதால் தாக்கம் எதுவும் ஏற்படாதெனின் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதற்காக வேண்டி தங்களின் இயல்பான சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். இவ்விவாதத்திலிருந்து, இறுதித்தீர்ப்பு நாளைக் குறிப்பிடுவதும்,

நினைவு கூர்வதும் மத அழைப்பு விடுக்கும் கொள்கைக்குச் சமமான தென்பது தெளிவாகின்றது.

இறுதித்தீர்ப்பு நாளில் நம்பிக்கை வைத்தல் என்பது மிகவும் வலுவான ஓர் அம்சமாகும். நன்னெறியை நாடுமாறும் ஒழுக்கக் கேட்டையும், பாவச் செயல்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் அது மனிதனைத் தூண்டுகிறது. அதே போன்று இறுதித் தீர்ப்பு நாளைப்பற்றி மறந்துவிடுவது அல்லது அதில் நம்பிக்கை வைக்க மறுப்பது எல்லாத் தீமைகளுக்கும் மூலகாரணமாகின்றது. எல்லாம் வல்ல இறைவன் தன் திருமறையில் இவ்வாறு கூறியுள்ளான்: "...நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் பாதையிலிருந்து தவறுகின்றார்களோ அவர்கள் (கேள்வி) கணக்குக் கேட்கும் நாளை மறந்துவிடுவதன் காரணமாக அவர்களுக்கு நிச்சயமாகக் கடினமான வேதனை உண்டு". (திருக்குர்ஆன், 38:26). இத்திருவசனத்திலிருந்து கேள்விகணக்கு கேட்கும் நாளை மறந்து விடுவதே எல்லா வழிகெடுகளுக்கும் மூலகாரணமாகுமென்பது தெளிவாகின்றது. இப்பிரபஞ்சமும் மனிதனும் படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றி நாம் சிந்தனை செய்தால் இறுதித் தீர்ப்பு நாளொன்று இருக்கும் என்பது பிரத்தியட்சமாகும்.

படைப்பைப் பற்றி நாம் சிந்தனை செய்யும் போது, அத்தியாவசியமாய் ஒருவகை இயக்கமாகவும் அமையும் எந்தவொரு செயலுக்கும் மாறாதவொரு குறிக்கோளும் நோக்கமும் இல்லாமலில்லை யென்பதைக் காண்கிறோம். செயல் சுவாதீனமாய் தன்னில் தானே முடிவதில்லை. செயல் என்பது எப்பொழுதும் ஒரு முடிவை நோக்கிய ஆரம்பமேயாகும். அம்முடிவு (குறிக்கோள்)காரணமாகவே அச்செயல் இருப்புப் பெறுகிறது. மேலோட்டமாகப் பார்க்கையில் குறிக்கோள் எதுவுமற்றதாய்த் தோன்றும் பிள்ளைகளின் விளையாட்டு போன்ற இயல்பூக்கச் செயல்களும் சம்பந்தப்பட்ட செயலுக்கு இசைவான குறிக்கோளைக் கொண்டிருப்பதனை, கவனமாக ஆராயும்போது நாம் கண்டுபிடிக்கலாம். ஒருவகை இயக்கமாக அமையும் இயல்பூக்கச் செயல்களில் முடிவை நோக்கி அவ்வியக்கம் நிகழ்கிறதோ அதுவே செயலின் குறிக்கோள்

எனலாம். பிள்ளைகளின் விளையாட்டில் கற்பனையான ஒரு குறிக்கோள் உண்டு. அக்குறிக்கோளையடைவதே அவ்விளையாட்டின் நோக்கம். உலகமும் மனிதனும் படைக்கப்பட்டது இறைவன் செயல். இச்செயல் எத்தகைய நோக்கமும் குறிக்கோளுமின்றி நிகழ்கிறதென்பது சாத்தியமில்லை. உலகையும் மனிதனையும் படைத்ததற்கு ஒரு நோக்கமும் குறிக்கோளும் இருக்கவேண்டும். எனினும் இதன் பலாபலன்கள் இறைவனைச் சேர்வதில்லை. அவன் எத்தகைய தேவையுமற்றவன். எனவே அவை படைப்பினங்களையே சேர்கின்றன. இவ்வாறு உலகமும் மனிதனும் அழிவையோ கெடுதியையோ அறியாத, பரிபூரண, நிலையான யதார்த்தம் நோக்கி நெறிபடுத்தப்பட்டுள்ளார்களெனக் கூற முடியும்.

மேலும், மதக்கல்வியினதும் பயிற்சியினதும் கண்ணோட்டத்தில் நாம் மனிதனின் நிலை குறித்து நன்கு கவனித்தால், மத வழிகாட்டலின் விளைவாகவும் மதப் பயிற்சியின் விளைவாகவும் மனிதர்கள் நல்லவர்கள் என்றும் தீயவர்கள் என்றும் இருவகுப்பினராகப் பிரிவதைக் காண்கிறோம். எனினும் இவ்வுலகில் அவர்களிடையே வித்தியாசம் பாராட்டப்படுவதில்லை. இதற்கு நேர்மாற்றமாகத் துன்மார்க்கர்களும் அநீதர்களுமே விருத்தியையும் வெற்றியையும் காண்கிறார்கள். நன்மை செய்யும்போது எதிர்ப்பையும் முட்டுக் கட்டையையும் சோதனைகளையும், ஒடுக்குமுறைகளையும் சமாளிக்க வேண்டியுள்ளது. நிலைமை இவ்வாறாக இருப்பதால் இறைநீதியைப் பொறுத்தவரை ஒவ்வொருமனிதரும் அவரது செயலுக்கேற்ப வெகுமதியைப் பெறுவதற்கு இன்னொரு உலகின் இருப்பு அவசியமாகின்றது.

இவ்வாறு, படைப்பினதும் இறை சட்டங்களினதும் நோக்கத்தைக் கவனமாக ஆராய்கையில் ஒவ்வொரு மனிதனும் இறுதித் தீர்ப்பு நாளை எதிர்கொண்டேயாக வேண்டுமென்று புலனாகும். உயரிறைவன் இதனைத் தெளிவுபடுத்துவதற்காக வேண்டிதனது திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான்: வானங்களையும் பூமியையும் அதற்கு மத்தியிலுள்ளவைகளையும் விளையாட்டுக்காக நாம் படைக்கவில்லை. நிச்சயமாகத் தக்க காரணத்திற்காகவே யன்றி, இவைகளை நாம்

சிருஷ்டிக்கவில்லை. எனினும், அவர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை''. (குர்ஆன், 44 38-39) மேலும் ''வானத்தையும் பூமியையும் இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் வீணுக்காக நாம் சிருஷ்டிக்கவில்லை: இது (வீணென்பது நிராகரிப்போரின் எண்ணமேயாகும். நிராகரிக்கும் இவர்களுக்குக் கேடுதான். இவர்களுக்கு (நரக) நெருப்பே கிடைக்கும். விசுவாசங்கொண்டு நற்கருமங்கள் செய்பவர்களைப் பூமியில் விஷமம் செய்பவர்களைப் போல் நாம் ஆக்கிவிடுவோமா? அல்லது பயபக்தியுடையவர்களை (அஞ்சாது குற்றம் புரியும்) பாபிகளைப் போல் நாம் ஆக்கிவிடுவோமா? (குர்ஆன், 38 28) இன்னோரிடத்தில் அவன் கூறுகிறான்: ''எவர் தீவினைகளைத் தேடிக் கொண்டார்களோ அவர்கள் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்தவர்களைப் போலத் தாமும் ஆகிவிடுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனரா? அவர்கள் உயிருடன் இருப்பதும் இறந்துவிடுவதும் சமமே. அவர்கள் செய்து கொண்ட முடிவு மகாகெட்டது. வானங்களையும் பூமியையும் அல்லாஹ் தக்க காரணத்தின் மீதே சிருஷ்டித்திருக்கிறான். எனவே ஒவ்வொரு ஆத்மாக்களுக்கும் அவர்கள் தேடிக்கொண்ட வினைக்குத் தக்க கூலியே கொடுக்கப்படும். அவை அநியாயம் செய்யப்படமாட்டா.'' (குர்ஆன், 45, 21-22).

இன்னொரு விளக்கம்

திருமறையின் புறவயமான அர்த்தத்தையும் அகவயமான அர்த்தத்தையும் ஆராய்கையில், திருமறையில் இஸ்லாமிய அறிவியங்கள் வெவ்வேறு வகைகளில் விளக்கப்படுகின்றன வென்றும், இவை வெளிப்படையானவை அந்தரங்க மானவையென இருபரிமாணங்கள் கொண்டனவாகப் பொதுவாகப் பிரிக்கப்படுகின்றன வென்றும் நாம் சுட்டினோம். வெளிப்படையானவை யென்பது பெரும்பான்மையோரின் சாதாரண சிந்தனை மட்டத்தைச் சேர்ந்தவையாகும். இதற்கு நேர்மாற்றமாக அந்தரங்கமானவையென்பது, அறிவுடைய சான்றோர்களுக்கு மட்டும் உரியது. ஆன்மீக வாழ்க்கைப் பயிற்சியால் வரும் அறிவு விளக்கத்தால் மட்டுமே இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

புறவயக் கண்ணோட்டத்தில் வெளியாகும் விளக்கப்படி சிருஷ்டியுலகம் இறைவனது ராஜ்யமாகும். அவனே அதன் முழு அதிகாரம் கொண்ட ஆட்சியாளன். சிருஷ்டியின் ஒவ்வொரு அம்சத்துக்கும் அவன் விடுக்கும் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக அவன் எண்ணற்ற மலக்குகளைப் படைத்துள்ளான் சிருஷ்டியின் ஒவ்வொரு பகுதியோடும் சம்பந்தமான மலக்குகளின் குழுக்கள் உண்டு. அவர்கள் அப்பகுதிகளின் பாதுகாவலர்களாவர். மனித ஜீவிகள் இறைவனின் அடிமைகளாவர். அவர்கள் அவனது ஏவல் விலக்கல்களுக்கு கீழ்ப்படியவேண்டும். தீர்க்கதரிசிகள் அவனது தூதைக் கொணர்பவர்கள். இறைவன் மனிதர்களுக்கு அனுப்பிவைத்துள்ள, மனிதர்கள் கீழ்ப்படியுமாறு அவனால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை அவர்கள் அறிவிக்கின்றனர். மனிதர்களது இறை நம்பிக்கைக்கும் நற்செயல்களுக்கும் நற்கூலியை - வெகுமதியை அவன் வாக்களித்துள்ளான். அதே போன்று இறை நிராகரிப்புக்கும், பாபச் செயல்களுக்கும் தண்டனையையும் கொடிய வேதனையையும் வாக்களித்துள்ளான். அவன் தனது வாக்குறுதியை மீறமாட்டான். அவன் நீதியாளனாகிய படியால் அவனது நீதி, இவ்வுலகில் தத்தம் நன்மை தீமைகளுக்கேற்ற வாழ்க்கைப் பேறை அனுபவியாதவர்கள் நல்லவர்களாகவும் தீயவர்களாகவும் பிரிக்கப்பட்டு, நல்லோர்கள் இன்ப வாழ்வையும் தீயவர்கள் கொடிய வேதனையையும் அனுபவிக்கக் கூடிய இன்னொரு இருப்பு அவசியமென வலியுறுத்துகின்றது.

இவ்வாறு இறைவன், அவனது நீதிக்கும் வாக்குறுதிக்கும் ஏற்ப, இவ்வுலகில் வாழும் மனிதர்கள் மரித்தபின் அவர்கள் மீண்டும் உயிர் பெற்றெழச் செய்து, விதிவிலக்கின்றி அவர்களின் நம்பிக்கைள் செயல்கள் குறித்து விசாரணை செய்வான். சத்தியத் தீர்ப்புக் கூறி ஒவ்வொருவருக்கும் அவரவருக்குச் சேர வேண்டியதை வழங்குவான். ஒடுக்கப்பட்டோருக்கு அவன் நீதி வழங்குவான். ஒவ்வொருவருக்கும் அவரது செயலுக்குரிய வெகுமதியை அளிப்பான். ஒருகூட்டம் நித்தியமான சுவன பதியை அடையும். மறுகூட்டம் சபிக்கப்பட்ட நரகில் தள்ளப்படும். இதுவே சத்தியத்

திருமறையின் புறவய விளக்கம். இது சரியானதும் நிச்சய உண்மையும் ஆகும்.ஆனால் அதன் மொழிநடை மனிதனது சமூக வாழ்விலும்,சிந்தனையிலுமிருந்து பிறக்கும் உவமைகளாலும் சொற்பிரயோகங்களாலும் அமைந்துள்ளது. அது மிகவும் பொதுப்படையானதாகவும், அதன் செயல்வீச்சு மிகவும் பரந்ததாகவும் அமைய வேண்டுமென்பதே இவ்வாறமைந்ததன் நோக்கம்

பொருள்களின் ஆன்மீக அர்த்தத்தை ஊடுருவிப்பார்த்தவர்களும், திருக்குர்ஆனின் அந்தரங்கமான மொழியில் ஓரளவு பரிச்சயமுள்ளவர்களும், சாதாரண, ஜனரஞ்சக விளக்கங்களின் மட்டத்துக்கு அப்பால் இத்திருவசனங்களின் அர்த்தங்கள் உள்ளதெனப் புரிந்து கொள்கின்றனர். திருமறை அதன் எளிய சிக்கலற்ற விளக்கங்களுக்குமத்தியில் இருந்திருந்து அதன் சேதியின் அந்தரங்க நோக்கங்களையும் குறிக்கோள்களையும் குறிப்பிடுகின்றது. சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகம் மனிதன் உட்பட அதன் அனைத்து பகுதிகளோடும் '' இருப்பு நிலைச் சிறப்பு''[5] கருதி இறைவனை நோக்கிப் பூரணத்துவத் திசையில் எப்போதும் நகர்கின்ற தென்பதைத் திருக்குர்ஆன் அநேக குறிப்புகள் மூலம் உணர்த்துகின்றது. இந் நகர்வு முற்றுப்பெற்று இறைவனின் மகத்துவத்தின் முன்னால் அதன் தனித்த சுவாதீனமான இருப்பை முழுமையாக இழக்கும் ஒரு நாள் வரும். உலகின் ஓர் அங்கமான, பிரக்ஞையாலும் அறிவாலும் தனது விவேக பூரணத்துவத்தை நாடும் மனிதனும் இறைவனை நோக்கி விரைகிறான். இவ்வளர்ச்சியின் முடிவை எய்தும் போது ஈடிணையற்ற இறைவனின் சத்தியத்தையும் ஏகத்துவத்தையும் அவன் தெளிவாகக் காண்பான். ஆட்சி அதிகாரம் பூரணத்துவத்தின் ஏனைய பண்புகள் யாவும் இறைவனின் சுயத்துக்கு சொந்தமானவையென்பதை அவன் காண்பான். ஒவ்வொன்றின் இயல்பான யதார்த்தமும் அவனுக்கு தெளிவாக்கப்படும். சாசுவதமான உலகின் முதல் கட்டம் இது. மனிதன் தனது இறைநம்பிக்கை, இவ்வுலகில் அவன் புரிந்த நற்செயல்கள் காரணமாக இறைவனுடன் அவனை அண்மிய ஜீவன்களுடனும் தொடர்பும், நட்பும், உறவும் பூண முடியுமாயின், அப்போதவன் மனிதவார்த்தைகளால் விவரிக்க

முடியாத பேரின்ப நிலையெய்தி இறைவனைச் சமீபித்தவனாக மேலுலகைச் சேர்ந்த பரிசுத்தவான்களின் கூட்டுறவில் வாழ்வான். ஆனால் அவன் உலக வாழ்க்கையில் கட்டுண்டுபோய் அழிந்து போகக் கூடிய அற்பசுகங்களில் ஆசை வைத்து உழன்றானாகில் மேலுலகிலிருந்து அவன் துண்டிக்கப்பட்டுவிடுவான். இறைவனின் அறிமுகமோ நேசமோ அவனுக்குக் கிட்டாது. இறைவனின் சந்நிதானத்தைச் சேர்ந்த பரிசுத்தவான்களின் நட்புறவும் அவனுக்குக் கிட்டாது. அவன் கொடிய வேதனைக்காளாவான். அவனைக்கேடு சூழும். மனிதன் இவ்வுலகில் புரியும் நற்செயல்களும் தீயசெயல்களும் மாறக் கூடியவை, அழிந்து போகக் கூடியவை என்பது உண்மைதான். ஆனால் இந்நற் செயல்களினதும் , தீய செயல்களினதும் வடிவங்கள் ஆன்மாவில் படிந்து போய் அவனோடு உடன் செல்கின்றன. இன்பந்தருவதாக இருப்பினும் துன்பந்தருவதாக விருப்பினும் அவை அவனது வருங்கால வாழ்க்கைக்கான மூலதனமாகும்.

பின்வரும் திருவசனங்களிகனால் இது உறுதியாகின்றது. அவன் கூறுகிறான்: '' நிச்சயமான உமதிறைவன் பாலே (அவன்) மீளவேண்டியுள்ளது.'' (குர்ஆன், 96:8) மேலும் அவன் கூறுகிறான். '' சகல காரியங்களும் அவனிடம் வந்தே தீரும் என்பதை (நபியே, நீர்) அறிந்து கொள்வீராக. '' (குர்ஆன், 42:53) இன்னும், ''...அதிகாரம் அந்நாளில் முற்றிலும் அல்லாஹ்வுக்கே இருக்கும்.'' (குர்ஆன்,82:19) மேலும் இறுதித்தீர்ப்பு நாளில் மனிதரில் ஒரு கூட்டத்தினருக்குக் கூறப்படும் உரையில் அவன் கூறுகிறான்: '' அவனைநோக்கி நிச்சயமாக நீ இதனைப்பற்றிக் கவலையற்றிருந்தாய். உன் பார்வையை மறைத்துக் கொண்டிருந்த திரையை உன்னை விட்டு நாம் நீக்கிவிட்டோம். இன்றைய தினம் உன் பார்வை கூர்மையாயிருக்கின்றது. (என்று கூறப்படும்). (குர்ஆன், 50:22).

திருமறையின் வியாக்கியான விற்பத்தி (த:.வீல்) குறித்து இறைவன் கூறுகிறான்: ''இவர்கள், (தங்களுக்கு எச்சரிக்கப்பட்டுவந்த) தண்டனை (நாள்) வருவதையன்றி, வேறெதனையும் எதிர்பார்க்கின்றனரா? அந்தத் தண்டனை நாள்

வந்தபோது, இதற்குமுன் அதனை மறந்திருந்த இவர்கள் ''நிச்சயமாக எங்கள் இறைவனின் தூதர்கள் (எங்களிடம்) சத்திய (வேத) த்தைக் கொண்டுவந்தனர். (இன்று) எங்களுக்குப் பரிந்து பேசுவோர் எவரும் உண்டா? அவ்வாறாயின் அவர்கள் எங்களுக்குப் பரிந்து பேசட்டும் அல்லது எங்களை (உலகத்திற்கு)த் திரும்ப அனுப்பப்படுமா? அவ்வாறாயின் (முன்னர்) நாங்கள் செய்து கொண்டிருந்தவைகளைத் தவிர்த்து வேறு (நன்மைகளைச்) செய்வோம்? என்று கூறுவார்கள். நிச்சயமாக இவர்கள், தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டனர். அன்றி இவர்கள் (தங்கள் தெய்வங்களெனப்) பொய்யாகக் கற்பனை செய்து கொண்டிருந்தவை யாவும், (அது சமயம்) இவர்களை விட்டு மறைந்து விடும். (குர்ஆன், 7:53). அவன் கூறுகிறான்: '' அந்நாளில் (அவர்களின் செயலுக்கு) நியாயமாகக் கிடைக்கவேண்டிய கூலியை அல்லாஹ் அவர்களுக்குப் பூரணமாகவே கொடுப்பான். நிச்சயமாக அல்லாஹ் உண்மையை வெளியாக்கக் கூடியவன்தான் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்''. (குர்ஆன் 24:25) இன்னும், ''மனிதனே! நீ உன் இறைவனிடம் செல்லும் வரையில் கஷ்டத்துடன் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றாய்: (பின்னர் மறுமையில்) அவனை நீ சந்திக்கின்றாய். (குர்ஆன் 84:6). மேலும் அல்லாஹ்வைச் சந்திப்போமென எவர்கள் ஆதரவு வைக்கிறார்களோஅவர்கள் (அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால்) (அதற்காக ஏற்படுத்தப்பட்ட) அல்லாஹ்வுடைய தவணை நிச்சயமாக வந்தே தீரும்.. .'' (குர்ஆன், 29:5). இன்னும் '' . . . . எவன் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகிறானோ அவன் நற்கருமங்களைச் செய்து தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கி வருவானாக! '' (குர்ஆன் 18:110) இன்னும், ''(எனினும் அந்நாளில் நல்லடியார்களை நோக்கி), திருப்திடைந்த ஆன்மாவே! நீ உன் இறைவன்பால் செல்! அவனைக் கொண்டு நீ திருப்தியடை! உன்னைப்பற்றி அவன் திருப்தியடைந்திருக்கின்றான். நீ என்னுடைய நல்லடியார்களில் சேர்ந்து, என்னுடைய சுவனபதியிலும் நீ நுழைந்து விடு (என்றும் கூறுவான்)'' (குர்ஆன், 89:27-30) மேலும் அவன் கூறுகிறான்: '' (மறுமையின்) பெரும் அமளிவந்தால் மனிதன் செய்த தெல்லாம்

அந்நாளில் அவனுடைய ஞாபகத்திற்கு வந்துவிடும். பார்ப்போருக்குத் (தென்படும் விதத்தில்) நரகம் முன்கொண்டு வந்து வைக்கப்பட்டுவிடும். எவன் வரம்புமீறி, (மறுமையைப் புறக்கணித்து) இவ்வுலக வாழ்க்கையைத் தெரிந்தெடுத்துக் கொண்டானோ, அவன் தங்குமிடம்நிச்சயமாக நரகம் தான். எவர் தன் இறைவனின் சந்நிதியில் (விசாரணைக்காக நிற்பதைப் பற்றிப்) பயந்து (கீழ்த்தரமான சரீர) இச்சையை விட்டுத் தன்னைத் தடுத்துக் கொண்டாரோ அவர் செல்லுமிடம் நிச்சயமாகச் சுவனபதிதான்.'' (குர்ஆன் 79:34-41).

செயல்களுக்கான கூலி சம்பந்தமாக இறைவன் கூறுகிறான்! ''(அந்நாளில் நிராகரிப்போரை நோக்கி) ''நிராகரிப்போரே! இன்றைய தினம் நீங்கள் (வீண்) புகல் கூறாதீர்கள். நீங்கள் கூலி கொடுக்கப்பெறுவதெல்லாம், நீங்கள் செய்தவைகளுக்குத் தான்' (என்று கூறப்படும்). (குர்ஆன், 66:7)

படைப்பின் இடையறாமையும் தொடர்ச்சியும்

நாம் காணும் படைக்கப்பட்ட இவ்வுலகம் முடிவற்ற நித்திய வாழ்வு கொண்டதல்ல. திருமறை கூறுவதுபோல் இவ்வுலகமும் இதிலுள்ளவைகளும் அழிந்து போகக் கூடிய ஒருநாள் வரும். இறைவன் கூறுகிறான்: '' வானங்களையும் பூமியையும், அவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் தக்ககாரணமும், (அவைகளுக்குக்) குறிப்பிட்ட தவணையுமின்றி நாம் சிருஷ்டிக்கவில்லை...'' (குர்ஆன் 46:3).

இவ்வுலகையும், இந்த மனிதகுலத்தையும் படைப்பதற்கு முன் இன்னொரு உலகுக்கு இன்னொரு மனித குலமும் இருந்ததா அல்லது திருமறை அறிவிப்பது போல், இவ்வுலகமும் இதிலுள்ளவைகளும் அழிக்கப்பட்டுவிட்ட பின் இன்னொரு உலகமும் மனிதகுலமும் படைக்கப்படுமா என ஒருவர் கேட்கக் கூடும். இக்கேள்விக்கு நேரடியான பதிலைத் திருக்குர்ஆனில் காண முடியாது. படைப்பின் இடையறாமையும், தொடர்ச்சியும் பற்றிய குறிப்புகளை மட்டுமே ஒருவர் அதில் காணமுடியும். ஆனால் நபிகுடும்பத்தைச் சேர்ந்த இமாம்களின் பாரம்பரியங்கள் (றிவாயாத்) படி படைப்பென்பது

கண்ணுக்குத் தெரியும் ஸ்தூல உலகத்துடன் மட்டிடப்பட்ட தொன்றல்ல. கடந்த காலத்தில் பல உலகங்கள் இருந்திருக்கின்றன. வருங்காலத்திலும் பல இருக்கக்கூடும். ஆறாவது இமாம் பின்வருமாறு கூறியுள்ளார்: உங்களை விட வேறு மனித சாதியை இறைவன் படைக்கவில்லையென நீங்கள் நினைக்க கூடும்.இல்லை! ஆயிரக்கணக்கான மனித சாதிகளை அவன் படைத்துள்ளான் அவர்களில் இறுதியாக வந்தவர்களே நீங்கள் என்பதை நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.''[6]

இன்னும் ஐந்தாவது இமாம் பின்வருமாறு கூறியுள்ளார் ! '' மாபெரியோனான இறைவன், இவ்வுலகைப் படைத்தபின் ஏழுவகைகளைப் படைத்தான் அவற்றில் யாருமே ஆதத்தின் இனத்தைச் சேர்ந்தவர்களல்லர். பூமியின் மேற்பரப்பிலிருந்து அவர்களைப் படைத்து ஒவ்வொரு ஜீவனையும் ஒன்றன் பின்னொன்றாகப் பூமியின் மேல் விடுத்தான். அப்புறம் அவன் மனிதசாதியின் தந்தையான ஆதத்தைப்படைத்து அவரிலிருந்து அவரது சந்ததியினரை வரச் செய்தான்''[7] மேலும் ஆறாவது இமாம் கூறியுள்ளார்: '' இவ்வுலக விவகாரங்கள் ஓய்ந்து இறுதித்தீர்ப்பு நாளேற்பட்டு, நல்லடியார்கள் சுவனத்துக்கும், தீயவர்கள் நரகத்துக்கும் அனுப்பப்பட்ட பிறகு இறைவனை வணங்குவதற்கு எவரும் இருக்க மாட்டார் என நினைக்க வேண்டாம். இல்லை, ஒரு போதும் அப்படியிராது! இறைவன் அவனது ஏகத்துவத்தை அறிவதற்காகவும், அவனை வணங்குவதற்கும் வேண்டி, ஆண் பெண்ணின் மணவுறவின்றியே மீண்டும் நல்லடியார்களைப் படைப்பான்.''[8]

குறிப்புகள்

அத்தியாயம் VI

1. பதிப்பாசிரியர் குறிப்பு: விசேடமாக ஸத்ர் அல்-தீன் ஷிராஸி (முல்லா ஸத்ரா) உடையவும், ஆன்மாவின் வளர்ச்சி பற்றி முன்னைய தத்துவாசிரியர்களைவிடவும் நன்றாக அலசியாராய்ந்த பாரசீகத்தின் பிற்கால தத்துவாசிரியர்களுடையவும் எழுத்துக்களையே இங்கு நூலாசிரியர்குறிப்பிடுகிறார் எனலாம். எனினும், ஆன்மாவின் அல்லது உயிரின் சூட்குமத்தன்மை குறித்து இப்னு ஸீனா (அவிசின்னா) வின் எழுத்துக்களிலும் சாத்திரமான அறிவுபூர்வ ஆதாரங்கள் காணப்படுகின்றன.

2. பிஹார் அல்-அன்வார், வல் 3, பக் 16, ஸாதூக்கின் இ.்.திகாதாத்திலிருந்து.

3. பிஹார் அல்-அன்வார், வல். 4, பாப் அல்-பர்ஸக்.

4. அதே நூல்

5. பதிப்பாசிரியர் குறிப்பு: ஏலவே குறிப்பிடப்பட்டது போன்று, இப்பதப்பிரயோகங்கள் வழக்கமாகப் புரிந்து கொள்ளப்படுவதுபோல் பரிணாம (கூர்ப்பு) முன்னேற்றம் பற்றிய நவீன கோட்பாடுகளுடன் இதனைக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

6. பிஹார் அல்-அன்வார், வல். 14 பக். 79

7. அதே நூல்.

8. அதே நூல்.

அத்தியாயம் VII

இமாம் பற்றிய அறிவு (இமாமியல்)

இமாம் அல்லது தலைவர் எனும் பதவி குறிப்பிட்டவொரு சமூக இயக்கத்தில் அல்லது அரசியல் சித்தாந்தத்தில், அல்லது விஞ்ஞான, மத சிந்தனைகளில் சமூகத்தலைமையை ஏற்பவருக்கு வழங்கப்படுகிறது. தம்தலைமையை ஏற்றுக் கொண்ட மக்களுடன் அவருக்குள்ள உறவுத்தொடர்பு காரணமாக, முக்கிய விவகாரங்கள் அடுத்து வருகிற விவகாரங்கள் இரண்டிலுமே அவரது செயல்கள் யாவும் அவற்றின் ஆற்றல்களை உறுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

முன்னைய அத்தியாயங்களில் துலாம்பரமானது போல், புனித மார்க்கமான இஸ்லாம் சகல மனிதர்களதும் வாழ்வின் அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு அவை சம்பந்தமான விவரமான அறிவுறுத்தல்களை வழங்குகின்றது. ஆன்மீகக் கண்ணோட்டத்தில் மனித வாழ்வை விசாரணைசெய்து அதற்கேற்ப மனிதனுக்கு வழிகாட்டுகின்றது. சாதாரண சடத்துவ இருப்பின் மட்டத்தில் தனிமனித வாழ்க்கைக் கண்ணோட்டத்தில் அது தலையிடுகின்றது. அது போலவே சமூக வாழ்க்கையினதும் அதன் ஒழுங்குமுறைமையினதும் மட்டத்தில் (அதாவது அரசாங்கத்தின் மட்டத்தில்) அது தலையிடுகின்றது.

இவ்வாறு இஸ்லாத்தில் இமாமத்தும் மதத் தலைமையும் மூன்று கண்ணோட்டங்களில் ஆராயப்படலாம். அவையாவன: இஸ்லாமிய அரசின் கண்ணோட்டம், இஸ்லாமிய அறிவியல்களின் கட்டளைகளின் கண்ணோட்டம். ஆன்மீக

வாழ்வில் வழிகாட்டும் தலைமை பற்றிய கண்ணோட்டம் இம்மூன்று அம்சங்களிலுமே இஸ்லாமிய சமூகத்துக்கு வழிகாட்டல் அதிகமாகத் தேவைப்படுவதால், அவ்வழி காட்டலை வழங்கும் பணியை ஏற்றிருப்பவர், மத அக்கறை கொண்டுள்ள இப்பகுதிகளில் சமூகத்தின் தலைவராயிருப்பவர் இறைவனாலும், நபியாலும் நியமிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும்மென்பது ஷீஆ நம்பிக்கை. நபி கூட இயல்பாகவே இறைவனால் நியமிக்கப்பட்டவராவார்.

இமாமத்தும் அதன் தொடர்ச்சியும்

ஒரு தேசம், நகரம், கிராமம், மனிதக்குழு அல்லது குடும்பம் போன்ற எந்தவொரு சமூக அமைப்பும், சமூகத்தை இயக்கக் கூடிய தனது சித்தத்தின் மூலம் தனிமனிதர்களின் சித்தங்களைக் கட்டுப்பாடுறச் செய்து அவர்கள் தம் சமூகக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றச் செய்யும் ஒரு தலைவரின்றித் தொடர்ந்து நிலைத்திருக்க முடியாதென்பதை மனிதன் இறைவனால் தனக்கு வழங்கப்பட்டுள்ள இயல்பின் மூலம் சந்தேக மற உணர்கின்றான். இத்தகையவொரு தலைவரின்றிச் சமூகம் சின்னாபின்னமடைந்து சீக்கிரமே ஒழுங்கீனமும் தலைதூக்கிவிடும். எனவே ஒரு சமூகம் பெரிதாயிருப்பினும் சரி சிறியதாய் இருப்பினும் சரி அதனை ஆள்கின்ற தலைவர் தன்சொந்த நிலை கருதியும், சமூகத்தின் நன்மை கருதியும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தாம் இல்லாத விடத்து தம் பொறுப்புகளை ஏற்று நடத்தக் கூடிய ஒரு வாரிசை, பிரதிநிதியை நியமிப்பார். தமது ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களை அவர் அந்தரத்தில் விட்டுவிட மாட்டார். தம் சமூகம் வாழ்ந்தாலென்ன நாசமானாலென்ன என்ற மனோபாவம் கொண்டிருக்கமாட்டார். ஏதோ காரியமாய் குடும்பத்தைவிட்டுப் பிரியும் குடும்பத்தலைவன், தாம் திரும்பிவரும்வரை குடும்பப் பொறுப்புக்களை இன்னொருவரிடம் ஒப்படைத்துச் செல்வார். அல்லது ஒரு நிறுவனத் தலைவரோ, கல்லூரியதிபரோ, கடை முதலாளியோ, சில மணித்தியாலங்கள் வெளியே செல்ல நேரினும் திரும்பிவரும் வரை பொறுப்புகளை நிர்வகிக்க ஒரு பிரதிநியை நியமித்துச் செல்வார்.

அதேபோன்று இஸ்லாம் குர்ஆனின் படியும் சுன்னாவின் படியும், வஸ்துகளின் பூர்வ இயல்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மார்க்கமாகும். அண்மையிலும் தூரத்திலுமிருந்து அவதானிகள் அவதானித்துள்ளது போல் அது சமூக வாழ்க்கையில் அக்கறைகொண்டுள்ள மார்க்கமாகும். அல்லாஹ்வும் அவனது திருத்தூதரும் இம்மார்க்கத்தின். சமூகத்தன்மைக்கு கொடுத்துள்ள அழுத்தம் மறக்கப்படவோ புறக்கணிக்கப்படவோ முடியாதது. அது இஸ்லாத்தின் இணையற்ற அம்சமாகும். இஸ்லாம் பரவிய இடமெங்கனும் சமூகக்குழுக்களை உருவாக்கும் பிரச்சினையை நபிகளார் புறக்கணிக்கவில்லை. ஒரு நகரோ, கிராமமோ முஸ்லிம்களின் கைக்கு வந்த போது உடனே ஒரு அதிபதியை - கவர்னரை- நியமித்து முஸ்லிம்களின் விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளுமாறு பணித்தார்கள். புனித யுத்தம் (ஜிஹாத்)சம்பந்தமான இராணுவ நடவடிக்கைகளின் போது அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தளபதிகளை நியமித்தார்கள். மு∴தாஹ் போரின் போது பெருமானார் நான்கு தளபதிகளை நியமித்தார்கள்- முதலாவது தளபதி கொல்லப்பட்டால் அடுத்தவர், அவரும் போரில் மடிந்தால் அதற்கடுத்தவர் எனத் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்காகவே இந்த ஏற்பாடு [2]

வாரிசு பிரச்னையிலும் பெருமானார் மிகுந்த அக்கறை காட்டினார்கள். தேவையேற்பட்ட போதெல்லாம் ஒரு வாரிசை நியமிக்க அவர்கள் தவறவில்லை. மதினாவுக்கு வெளியே செல்ல நேர்ந்த போதெல்லாம் தங்களிடத்திற்கு ஒரு ஆளுனரை நியமித்துச் செல்வார்கள்.[3] மக்காவிலிருந்து மதினாவுக்கு ஹிஜ்ரா மேற் கொள்ள நேர்ந்தபோதும் என்ன நடக்குமென எத்தகைய அபிப்பிராயமும் இல்லாத நிலையில், மக்காவில் சில நாட்களுக்குத் தங்களது சொந்த விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளவும் அவர்களிடம் அமானிதமாக வைக்கப்பட்டிருந்த பொருள்களைத் திருப்பி ஒப்படைக்கவும் தங்களின் வாரிசாக அலீ (அலை) யை நியமித்துச் சென்றார்கள்.[4] அதே போன்று பெருமானார் காலமான போதும் அவர்களின் சொந்த விவகாரங்கள், கடன்கள் சம்பந்தமாக அலீ (அலை) வாரிசாக

நியமிக்கப்பட்டிருந்தார்கள்.[5] எனவே, முஸ்லிம்களின் விவகாரங்களைக் கவனித்துக் கொள்வதற்கு, இஸ்லாமியச் சமூகத்தின் சக்கரங்களைச் சுழலச் செய்வதற்கு ஒரு வாரிசை - வழிகாட்டியை- தலைவரைத் தெரிவு செய்யாமல் பெருமானார் (ஸல்) இவ்வுலக வாழ்வை நீத்திருப்பார்கள் என்பது ஷீஆக்களைப் பொறுத்த மட்டில் நினைத்துப் பார்க்க முடியாத தென்பது உறுதி.

ஒரு சமூகத்தின் உருவாக்கம் அச்சமூகத்தின் பெரும்பான்மைக் குழுக்களின் பொதுவான சட்டப் பிரமாணங்களிலும் பழக்க வழக்கங்களிலும் தங்கியுள்ளதோடு, அச்சமூகம் நீடித்திருப்பது இச்சட்டப் பிரமாணங்களை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஒரு நீதியான அரசில் தங்கியுள்ளது. என்ற உண்மையின் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் மனிதனின் பூர்வ இயல்பு சந்தேகிப்பதில்லை. மதிநுட்பம் வாய்ந்த எவரும் இவ்வுண்மையை மறப்பதோ புறக்கணிப்பதோ இல்லை. அதே வேளை இஸ்லாமிய ஷரீஅத்தின் விவரணத்தன்மையையும் வீச்சையும் அதில் பொதிந்துள்ளதாகப் பெருமானார் கருதிய முக்கியத்துவத்தையும் எவரும் சந்தேகிக்க முடியாது. அதனைப் பிரயோகிக்கவும் பேணிக்காக்கவும் பெருமானார் பல தியாகங்களைப் புரிந்தார்கள். பெருமானாரின் மேதமையையும், பூரண மதி நுட்பத்யையும் தூரதிருஷ்டியையும் தீட்சண்யமான சிந்தனையையும் எவரும் மறுக்க முடியாது. (இது வேத வெளிபாட்டினாலும், நபித்துவத்தாலும் உறுதிப்படுத்தப்பட்ட உண்மை).

சுன்னத் ஜமாஅத்தினதும் ஷீஆவினதும் ஹதீஸ் தொகுப்புகளில் (ஆசைகாட்டி ராஜதுரோகங்கள், இத்தியாதிபற்றிய அத்தியாயத்தில்) நிறுவப்பட்டுள்ள பாரம்பரியங்களின்படி, பெருமானார் (ஸல்) தங்களது மறைவுக்குப் பின் இஸ்லாமிய சமூகத்தில் நடக்கக் கூடிய துரோகச் செயல்கள், சமூகத்துக்கு ஏற்படக்கூடிய சோதனைகள், இஸ்லாத்தினுள் ஊடுருவக் கூடிய தீமைகள், சுயநலநோக்கங்களுக்காக மதத்தையே காவு கொடுக்கக்கூடிய பௌதீக ஆசை படைத்த ஆட்சியாளர்கள் பற்றியெல்லாம்

தீர்க்கதரிசனம் கூறிச் சென்றுள்ளார்கள். தங்களின் மறைவுக்குபின் - ஆயிரக்கணக்கான வருடங்களின் பின் நடக்கப் போகும் சம்பவங்கள் சோதனைகள் பற்றியெல்லாம் சொல்லி வைக்க மறக்காத மா நபி (ஸல்) தங்களின் மறைவால் ஏற்படக்கூடிய உடனடியான நிலைமையையிட்டு எப்படி அலட்சியமாய் இருந்திருக்க முடியும்? அல்லது ஒரு புறம் எளிமையாகவும் பிரத்தியட்சமானதாகவும் மறுபுறம் அந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்பட்ட இவ்விவகாரம் பற்றி பெருமனானர் அசிரத்தை கொண்டு அது முக்கிய மற்ற தெனக் கருதியிருக்க முடியும்? உண்ணல், குடித்தல், உறங்குதல் போன்ற மிக இயற்கையான நூற்றுக்கணக்கான செயல்கள் பற்றியெல்லாம் அக்கறை காட்டிய அண்ணல் (ஸல்) இம்முக்கிய பிரச்சினை குறித்து மௌனம் சாதித்து தங்களின் வாரிசாக ஒரு வரை நியமிக்காமல் இருந்திருப்பார்களா?

இஸ்லாமிய சமூகத்தின் ஆட்சியாளரை நியமிக்கும் பொறுப்பை ஷரீஅத் சட்டம் மக்களுக்கே வழங்குகிறது என்ற (ஷீஆயிஸம் ஏற்றுக் கொள்ளாத) கருத்தை நாம் அங்கீகரிப்பதாக இருந்தாலும் கூட இவ்விடயம் குறித்து நபிகளாரின் விளக்கம் அவசியமாகின்றது. இஸ்லாமிய சமூகத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் மத அநுட்டானத்துக்கும் அடிப்படையாக அமையும் பிரச்சினை குறித்து அவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் சமூகத்துக்குத் தேவையான அறிவுறுத்தல்களை அண்ணாலார் வழங்கியிருக்க வேண்டும் என்ற போதும், அத்தகைய நபித்துவ விளக்கம் பற்றிய, மத அறிவுறுத்தல்கள் பற்றிய தடயத்தைக்காணோம். அப்படியொன்றிருந்திருந்தால், பெருமானாருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் அதனை எதிர்த்திருக்க மாட்டார்கள். வாஸ்தவத்தில் முதலாவது கலீபா மரண சாசனத்தின் படி கிலாபத்தை இரண்டாம் கலீபாவுக்கு வழங்கினார். இரண்டாம் கலீபா தாமும் உறுப்பினராயமைந்த அறுவர் குழுவின் (இக்குழுவின் செயல் முறையை அவரே தீர்மானித்து ஆணையிட்டார்.) மூலம் மூன்றாம் கலீபாவைத் தெரிவு செய்தார். முஆவியாவோ, இமாம் ஹஸனைத் தன்னுடன் சமாதானஞ் செய்து கொள்ளுமாறு

பலவந்தஞ் செய்து அதன் மூலம் கிலாபத்தைக் கவர்ந்து கொண்டார். இச்சம்பவத்தின் பின் கிலாபத், முடியாட்சிப் பரம்பரையாக மாற்றப்பட்டது. படிப்படியாக, இஸ்லாமிய ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் நிலவிய மத அனுட்டானங்கள் (புனித யுத்தம், ஹலாலை ஏவுவதும் ஹராமைத் தடுப்பதும், மனிதச் செயல்களுக்கு வரம்பமைப்பது போன்றவை) பலவீனப்படுத்தப் பட்டன. அரசியல் வாழ்வில் இருந்து அவை மறைந்தன. இத்துறையில் இஸ்லாத்தின் திருநபியினது முயற்சிகள் பலவீன மாக்கப்பட்டன.

மனிதனது பூர்வ இயல்பு பற்றியும், மனிதர்கள் மத்தியில் நின்று நிலைத்துள்ள ஞானத்தின் தொடர்ச்சியான பாரம்பரியம் பற்றியும் ஷீஆயிஸம் கற்றாய்ந்துள்ளது. மனிதனது பூர்வ இயல்புக்குப் புனர் ஜீவனளிக்கும் இஸ்லாத்தின் அடிப்படை நோக்கத்தையும், சமூகத்துக்கு வழிகாட்டுவதில் நபிபெருமான் கையாண்ட முறைகள், இஸ்லாத்தையும் முஸ்லிம்களை பீடித்து அவர்களைப் பிரிவுக்கும் பிளவுக்கும் இட்டுச் சென்ற கஷ்டங்கள், கடுமையான மதக் கொள்கைகளின் உதாசீனம்-புறக்கணிப்பு முதலிய குணாம்சங்களைக் காட்டிய ஆரம்ப நூற்றாண்டுகளின் முஸ்லிம் அரசாங்கங்களது அற்பாயுள் முதலியவை களையும் ஷீஆயிஸம் துருவியாராய்ந்தது. இவ்வாய்வுகள் காரணமாக ஷீஆயிஸம், இமாமையும், நபியின் வாரிசையும் தீர்மானிக்கும் முறையைக் குறிப்பிட்டுப் போதியளவு பாரம்பரியங்களை நபி (ஸல்) விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு ஷீஆயிஸம் வந்துள்ளது. வலாயத் பற்றிய திருவசனம், கதிர்கும் ஸ.ஃபினா, தக்கலைன், ஹக், மன்ஸிலாஹ், தாவத்தி அசராயி அக்ரபீன்[6] போன்ற ஹதீஸ்களும் ஏனையவையும் - ஆதாரபூர்வமானவையென ஷீஆயிஸம் கருதும் திருமறை வசனங்களும், ஹதீஸ்களும் - இம்முடிவை ஆதரித்து நிற்கின்றன. ஆனால் பெரும்பாலானவை சுன்னத் ஜமாஅத்தினாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இந்த ஹதீஸ்கள் ஷீஆக்களாலும், சுன்னத் ஜமாஅத்தினராலும் ஒரே விதமாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. இல்லாவிடின் வாரிசு பற்றிய பிரச்சனையே எழுந்திராது. வாரிசு பற்றி பெருமானாரின்

உள்ளக்கிடக்கையைத் தெளிவாகக் காட்டுவனவாக இவ் ஹதீஸ்கள் ஷீஆக்களுக்கு தோன்றுகின்ற அதே வேளை சுன்னத் ஜமா அத்தினர் இவ்விவகாரத்துக்கு விடையளிக்காமல் விட்டுவிடுவனவாக இவற்றை வியாக்கியானஞ் செய்கின்றனர்.

அலீ இப்னு அபிதாலிப் உடைய கிலாபத்தை நிருபிப்பதற்காக வேண்டி ஷீஆக்கள் பின்வரும் திருமறை வசனங்களை ஆதாரங்காட்டுகின்றனர். '' அல்லாஹவும் அவனுடைய தூதரும், இன்னும் எவர்கள் (உண்மையாகவே) விசுவாசங்கொண்டு, தொழுகையைக் கடைப்பிடித்து, ஸக்காத்தும் கொடுத்து (அல்லாஹ்வின் கட்டளைக்கு எந்நேரமும்) தலைசாய்த்து வருகின்றரோ அவர்களும் தான் நிச்சயமாக உங்களுடைய தோழர்கள் (வலீ) ஆவர். (குர்ஆன் 5:55) இத்திருவசனம் அலீ இப்னு அபீதாலிப் சம்பந்தமாக அருளப்பட்டதென்பதை ஷீஆவையும் சுன்னத் ஜமாஅத்தையும் சேர்ந்தகுர்ஆன் விரிவுரையாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இக்கருத்தை ஆதரிக்கும் பாரம்பரியங்கள் ஷீஆக்கள் மத்தியிலும், சுன்னத் ஜமாஅத்தினர் மத்தியிலும் காணப்படுகின்றன. அபூதர் கி∴பாரி பின்வருமாறு, கூறியுள்ளார். ஒருநாள் மதியவேளை நாம் நபிகளாருடன் தொழுது கொண்டிருந்தோம். ஒருவறியவர் மக்களிடம் உதவிகேட்டுக் கொண்டிந்தார். ஆனால் எவரும் அவருக்கு எதையும் கொடுக்கவில்லை. அம்மனிதர் வானை நோக்கிக் கைகளை உயர்த்தி '' இறைவா! நீயே சாட்சி. நபியின் பள்ளிவாசலில் ஒருவரும் எனக்கு எதையும் தரவில்லை'' என முறையிட்டார். நடு இருப்பிலிருந்த அலீ இப்னு அபீதாலிப் அம்மனிதரை நோக்கி விரலை நீட்டினார். அதிலிருந்த கணையாழியைக் கழற்றி எடுத்துக் கொண்டு அம்மனிதர் அகன்றார். இதனை அவதானித்துக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் விண்ணைநோக்கித் தலை உயர்த்தி பின்வருமாறு மொழிந்தார்கள்: '' இறைவா! என் சகோதரர் மூஸா உன்னிடம் 'என்னுடைய சகோதரர் ஹாரூனோ என்னைவிடத் தெளிவாகப் பேசக் கூடியவர். அவரை நீ எனக்கு உதவியாக அனுப்பிவை' என்று கேட்டார்கள். நானும் உன்னுடைய நபி தான். என்னுடைய இருதயத்தை விரிவாக்கியருள். என் பணிகளை எளிதாக்கியருள்.

அலீயை எனது பிரதிநிதியாகவும், உதவியாளராகவும் ஆக்கியருள்'' அபூதர் தொடர்கின்றார்: ''நபிகளார் தம் வார்த்தைகளை முடிப்பதற்கு முன் மேலே குறிப்பிடப்பட்ட திருவசனம் வெளியாக்கப்பட்டது''[7]

அலீயின் கிலாபத்துக்கு அத்தாட்சியாக ஷீஆக்கள் கருதும் மற்றொரு திருவசனம் பின்வருமாறு: ''இன்றைய தினம் நிராகரிப்போர் உங்கள் மார்க்கத்தை (அழித்துவிடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டனர். அவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். எனக்கே பயப்படுங்கள். நான் உங்களுக்கு இன்றையதினம் உங்களுடைய மார்க்கத்தைப் பரிபூரணமாக்கி வைத்து விட்டேன். உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையும் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். . .'' (குர்ஆன், 5:3) இத்திருவசனத்தின் பிரத்தியட்சமான அர்த்தம் யாதெனில் அக்குறிப்பிட்ட தினத்துக்கு முன்பெல்லாம் காபிர்களோ இஸ்லாம் ஒரு நாள் அழிந்துவிடுமென எதிர்பார்த்திருந்தனர். ஆனால் குறிப்பிட்டவொரு சம்பவத்தின் நிகழ்வு மூலம் அவர்களது நப்பாசையை அல்லாஹ் முறியடித்து விடுகிறான். இச்சம்பவமே இஸ்லாத்தின் வலிமைக்கும் பூரணத்துவத்துக்கும் காரணமாயிற்று. மதக்கட்டளையொன்றையறிவிக்கும் சாதாரண சம்பவமாக இது இருந்திருக்க முடியாது. இஸ்லாத்தின் எதிர்காலம் அதில் தங்கியிருக்கும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் அது.

இத்திருவசனம் அதே அத்தியாயத்தின் இறுதிப்பகுதியில் வரும் மற்றொரு வசனத்துடன் தொடர்புடையதாகத் தெரிகிறது: ''தூதரே! உம் இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பெற்றதை அறிவித்துவிடும். நீர் (அவ்வாறு) செய்யாவிடில், அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக மாட்டீர். மனிதர் (களின் தீங்கு) களிலிருந்து , அல்லாஹ் உம்மைப் பாதுகாப்பான். . .'' (குர்ஆன், 5:67). நிறைவேற்றப்படாவிட்டால் இஸ்லாத்தின் அடிப்படைக்கும், நபித்துவத்துக்கும் ஆபத்து விளையக் கூடிய, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தூதை இறைவன் ஆணையிட்டதை இத்திருவசனம் சுட்டுகிறது. ஆனால்

அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தில் எதிர்ப்புண்டாகலாம் என அஞ்சி, தகுந்த சந்தர்ப்பம் வரும் வரை நபி (ஸல்) தாமதித்தபடியால், எத்தகைய தாமதமுமின்றி, எவருக்கும் அஞ்சாமல் உடனடியாக அறிவிக்குமாறு திட்டமான ஆணை வந்தது. இது ஒரு சாதாரண மதக்கட்டளையன்று. தனியொரு மதக்கட்டளை பிரச்சாரஞ்செய்யப் படாமல் விடப்பட்டால் அது மதத்தின் அழிவுக்கே வழிகோலும் என்பது போல் ஒரு அல்லது பல மதக் கட்டளைகளின் பிரச்சாரம் அவ்வளவு ஜீவாதாரமானதன்று. மேலும் மதக்கட்டளைகளையும் சட்டங்களையும் பிரச்சாரஞ் செய்வதில் நபி (ஸல்) எவருக்கும் அஞ்சவில்லை.

இத்திருவசனங்கள் அலீ இப்னு அபீதாலிபிடம் ஆன்மீக ஆட்சியொப்புவிப்பு (வலாயத்) சம்பந்தமாக காதிர் கும்மில் வெளியாக்கப்பட்டன வென்ற ஷீஆ பாரம்பரியங்களுக்கு இச்சுட்டுதல்களும் அத்தாட்சிகளும் வலிமையூட்டுகின்றன: மேலும் ஷிஆவையும் சுன்னத் ஜமா அத்தையும் சேர்ந்த பல விரிவுரையாளர்கள் இவ்விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அபூ ஸையித் குதாரி கூறுகின்றார்: '' காதிர் கும்மில் வைத்து நபிகளார் மக்களை அலீயின்பால் அழைத்து அவரது கையைப் பிடித்து, தங்களது கமக்கட்டிலிருந்த வெண்புள்ளி தெரியுமளவுக்கு அவ்வளவு உயரத்துக்குத் தூக்கினார்கள். அப்போது இத்திருவசனம் அருளப்பட்டது: '' இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்களுடை மார்க்கத்தை பரிபூரணமாக்கி வைத்து விட்டேன். உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையும் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.'' அப்புறம் நபிகளார் அல்லாஹ் பெரியவன் (அல்லாஹு அக்பர்) மார்க்கம் பரிபூரணமாக்கி வைக்கப்பட்டுவிட்டது என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் அருட்கொடை பூரணமாக்கி வைக்கப்பட்டுவிட்டது; அவனது திருப்தி கிடைத்து விட்டது; அலீயின் வலாயத் பெறப்பட்டுவிட்டது. பெருமானார் மேலும் கூறினார்கள்: 'யாருக்கு நான் அதிகாரமுள்ளவனாகவும் வழிகாட்டியாகவுமிருக்கின்றேனோ அவருக்கு அலீயும்

அதிகாரமுள்ளவரும் வழிகாட்டியுமாவார். இறைவா! அலீயின் தோழர்கள் மீது தோழமைகாட்டுவாயாக. அவரது எதிரிகளுக்கு எதிரியாயிருப்பாயாக அவருக்கு உதவுபவருக்கு உதவுவாயாக; அவரைக் கைவிடுவோரை கைவிட்டுவிடுவாயாக.''

தொகுத்துரைப்பதாயின், இஸ்லாத்தின் விரோதிகள் அதனை அழிப்பதற்கு முடிந்தனைத்தையும் செய்து பார்த்தார்கள். முயற்சி கைகூடும் என்ற நம்பிக்கையையிழந்ததும், ஒவ்வொரு எதிர்பார்ப்புமட்டும் அவர்களிடம் எஞ்சியிருந்தது. நபி இஸ்லாத்தின் பாதுகாவலராயிருந்தபடியால் அவரதுமறைவுடன் ஒரு வழிகாட்டியின்றி- தலைவரின்றி இஸ்லாம் நிச்சயமாக அழிந்து போகும் என அவர்கள் மனப்பால் குடித்தார்கள். ஆனால் காதிர் கும்மில் வைத்து அவர்களின் ஆசைகள் நிராசையாயின. அலீ (அலை)யை வழிகாட்டியாகவும் இஸ்லாத்தின் தலைவராகவும் நபி பெருமான் (ஸல்) அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அலீ (அலை)க்குப் பின் வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருக்கும் இக்கடினமான, அத்தியாவசியமான பொறுப்பு அவரது குடும்பத்தினரின் தோள்களில் சமத்தப்பட்டது.[9]

காதிர்கும் சம்பந்தமாகவும், அலீயிடம் ஆன்மீக ஆட்சிப் பொறுப்பு ஒப்புவிப்பு சம்பந்தமாகவும், நபி குடும்பத்தினரின் முக்கியத்துவம் சம்பந்தமாகவும் சில ஹதீஸ்கள் இங்கே உதாரணங்காட்டப்படுகின்றன:

ஹதீஸ்-இ- காதிர்: இஸ்லாத்தின் திருநபி இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டு திரும்பும் வழியில் காதிர்கும் என்ற இடத்தில் தங்கி நின்று, முஸ்லிம்களை ஒன்று கூட்டி, உபந்நியாசமொன்றை நிகழ்த்தியபின், முஸ்லிம்களின் தலைவராகவும், வழிகாட்டியாகவும் அலீயைத் தெரிவு செய்தார்கள்.

பாரா கூறுகின்றார்: '' இறுதி ஹஜ்ஜின் போது நான் நபிகளாருடனிருந்தேன். நாம் காதிர் கும்மையடைந்ததும் அவ்விடத்தைச் சுத்தஞ் செய்யச் சொன்னார்கள். அப்புறம் அலீயின் கரத்தை யெடுத்துத் தனது வலது புறம் வைத்துக்

கொண்டார்கள். அப்புறம் கேட்டார்கள்: நான் நீங்கள் கீழ்ப்படியும் அதிகாரம் கொண்டவனா?'' உங்கள் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிகிறோம்'' என அவர்கள் கூறினர் அப்புறம் அவர்கள் கூறினார்கள். யாருக்கு நான் தலைவனாக (மௌலா)வும், அவர் கீழ்ப்படியும் அதிகாரம் கொண்டவனாகவும் இருக்கிறேனோ அவருக்கு அலீ தலைவனாகயிருப்பார். இறைவா! அலீயின் தோழர்கள் மீது தோழமை கொள்வாயாக. அலீயின் எதிரிகளுக்கு எதிரியாயிருப்பாயாக.' அப்போது உமர் இப்னு கத்தாப் அலீயிடம் 'இப்பதவி உமக்குத் திருப்தி தருவதாக, ஏனெனில் இப்போது நீர் எனது தலைவன், அனைத்து முஸ்லிம்களின் தலைவனுமாவீர், என்று கூறினார்.[10] ஹதிஸ்-இ-ஸ.்.பீனா: இப்னு அப்பாஸ் கூறுகின்றார், ''எனது குடும்பம் நூஹுவின் கப்பல் போன்றதாகும்; யார் அதில் ஏறுகின்றாரோ அவர் காப்பாற்றப்படுவார்; யார் அதிலிருந்து விலகிச் செல்கிறாரோ அவர் அமிழ்ந்து போவார், என நபிகளார் நவின்றுள்ளார்கள்.''[11]

ஹதீஸ்-இ- தக்கலைன்: நபிபெருமானார் பின்வருமாறு கூறியதாக ஸைத் இப்னு அர்காம் நினைவுகூர்கின்றார்: ''இறைவன் என்னைத் தன்னிடம் அழைத்துவிட்டதாகத் தெரிகிறது. ஆனால் மாபெரும், பெறுமதி வாய்ந்தவைகள் இரண்டை நான் உங்கள் மத்தியில் விட்டுச் செல்கிறேன் - அவை அல்லாஹ்வின் திருமறையும் எனது குடும்பமும் ஆகும். அவற்றின் பால் நீங்கள் கவனமாக நடந்து கொள்ளுங்கள் (சுவனத்தில் உள்ள) கௌதரில் என்னைச் சந்திக்கும் வரை இவை ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்படமாட்டாது.''[12] ஹதீஸ் தக்கலைன் மிக வலுவாக நிறுவப்பட்ட ஹதீஸ்களின் ஒன்று. பல அறிவிப்பு வரிசைகளினூடு, வெவ்வேறு விதமாய் இது அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் ஹதீஸ் ஆதார பூர்வமான தென்பதை ஷீஆக்களும் சுன்னத் ஜமாஅத்தினரும் ஏற்றுக் கொள்கின்றனர். இவ் ஹதீஸிலிருந்து அநேக முக்கியமான விடயங்கள் பெறப்படலாம். அவை யாவன:

(1) இறுதித்தீர்ப்பு நாள்வரை திருக்குர்ஆன் இருப்பதுபோல்

அதே பிரகாரம் நபியின் சந்ததியனரும் எஞ்சியிருப்பர். ஷீஆயிஸம் இமாம் என அழைக்கும் உண்மையான தலைவரும் மக்களின் வழிகாட்டியும் ஒரு காலத்திலும்இல்லாமற் போக மாட்டார்.

(2) இவ்விரு அமானிதங்கள் மூலமாக நபி (ஸல்) முஸ்லிம்களின் சகல விதமான மதத் தேவைகளுக்கும் அறிவு ஜீவ தேவைகளுக்கும் வழிவகை செய்திருக்கிறார்கள். அறிவில் அதிகார பூர்வமானவர்களாக தம்குடும்பத்தினரை நபிகளார் முஸ்லிம்களுக்கு அறிமுகஞ் செய்து வைத்து அவர்களது சொல் செயல் இரண்டையும் அதிகார பூர்வமானவையெனப் பிரகடனஞ் செய்தார்கள்.

(3) ஒருவர் திருக்குர்ஆனை நபிகுடும்பத்தினரிடமிருந்து பிரிக்கக்கூடாது. அஹ்லுல் பைத்தை- நபியில்லத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் ''அறிவியல்களை'' நிராகரிக்கவோ, அவர்களது நெறியாள்கையிலும் வழிகாட்டலிலுமிருந்து தன்னை அப்புறப்படுத்திக் கொள்ளவோ எந்தவொரு முஸ்லிமுக்கும் உரிமை கிடையாது.

(4) நபி குடும்பத்தினரை பின்பற்றி அவர்களின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தால் மக்கள் ஒருபோதும் வழிதவற மாட்டார்கள். மனிதர்களது அறிவு ஜீவ, மதத் தேவைகளுக்கான விடைகள் நபிகுடும்பத்தினரின் கரங்களிலேயே உள்ளன. அவற்றைப் பின்பற்றுவோர் எவரும் தவறுகளில் விழாமல் உண்மையான ஈடேற்றம் காண்பர்: அதாவது நபி குடும்பத்தினர் தவறுகளும் பாவங்களும் அண்டாதவர்கள், தவறிழைக்க முடியாதவர்கள். '' நபிகுடும்பத்தின் உறுப்பினர்'' அல்லது '' சந்ததி'' எனும் போது நபிகளாரின் உறவினர்கள் சந்ததியினர்கள் அனைவரையும் அது குறிப்பதாகாது என இதிலிருந்து முடிவு செய்யமுடியும். மத அறிவில் பூரணத்துவம் எய்திய, பாவங்களிலும் தவறுகளிலுமிருந்து பாதுகாக்கப்பட்ட குறிப்பிட்ட மனிதப் புனிதர்களையே இது குறிக்கின்றது. அவர்களே மக்களுக்கு வழிகாட்டவும் தலைமைதாங்கவும் தகுதிபெற்றவர்களாவர். ஷீஆக்களைப் பொருத்தமட்டில், அலீ

இப்னு அபீதாலிபு அவருக்குப் பின்னால் ஒவ்வொருவராக இமாமத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட அவரின் சந்ததியினர் பதினொருவரும் இதில் அடங்குவர். ஷீஆக்களின் பாரம்பரியங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. உதாரணமாக, இப்னு அப்பாஸ் பின்வருமாறு கூறியுள்ளார்: ''(முஸ்லிம்கள்) நேசிப்பதற்குக் கடமையாக்கப்பட்ட உங்களின் சந்ததியினர் யார்? என நான் நபிகளாரிடம் வினவினேன். அலீ, ஃபாத்திமா, ஹசன், ஹுசைன், என அவர்கள் பதில்மொழிந்தார்கள்.''[13] ''எல்லா நபிமார்களுடைய பிள்ளைகளையும் அவர்களது முள்ளந்தண்டில் இறைவன் வைத்தான்: ஆனால் என் பிள்ளைகளை அலீயின் முள்ளந்தண்டில் வைத்தான்.'' என நபி (ஸல்) கூறியதாக ஜாபிர் அறிவிக்கின்றார்.[14]

ஹதீஸ் - இ - ஹக்: ''அலீ சத்தியத்துடனும் (ஹக்) குர்ஆனுடனும் இருக்கின்றார்: சத்தியமும் குர்ஆனும் அலீயுடன் இருக்கின்றன. கவ்தரில் என்னைச் சந்திக்கும் வரை இவர்களிடையில் பிரிவினையை ஏற்படுத்த முடியாது நபிகளார் சொல்வதை நான் கேட்டேன் என உம்மு ஸல்மா அறிவிக்கின்றார்.

ஹதீஸ் - இ - மன்ஸிலாஹ்: '' அல்லாஹ்வின் தூதர் அலீயிடம் கேட்டார்கள். மூஸாவுக்கு ஹாரூன் எப்படியோ அப்படி நீர் எனக் கிருப்பதையிட்டு நீர் திருப்தியடைய வில்லையா? வித்தியாசம் யாதெனில் எனக்குப் பின் இன்னொரு நபியிருக்க மாட்டார்.'' என சஅத் இப்னு வக்காஸ் அறிவிக்கின்றார். [16]

ஹதீஸ் - இ - தஃவத் - இ அசீராஹ்: ''நபிகளார் தம் உறவினர்களை விருந்துக்கழைத்து அவர்கள் ஆகார மருந்தியபின் அவர்களை நோக்கிக் கேட்டார்கள், '' நான் உங்களுக்குக் கொண்டுவந்ததை விடச் சிறந்த வொன்றைத் தம் மக்களுக்குக் கொண்டுவந்த எவரையும் நானறியேன். உங்களைத் தன் பால் அழைக்குமாறு இறைவன் எனக்குக் கட்டளையிட்டுள்ளான். இவ் விடயத்தில் எனக்கு உதவி செய்வதற்கும் எனது சகோதரராகவும், வாரிசாக (வஸி) வும்

பிரதிநிதியாக (கலீஃபா) வும் இருப்பதற்கும் உங்கள் மத்தியில் யார் இருக்கின்றார்? '' எல்லோரும் மௌனமாக விருந்தனர். ஆனால் அவர்களில் இளைஞரான அலீ ''நான் பிரதிநிதியாகவும் உதவியாளனாகவுமிருக்கிறேன்'' எனக் கூறினார். அப்புறம் நபிகளார் அவரைத் தம்கைகளால் அரவணைத்து ''இவர் எனது சகோதரரும், வாரிசும், பிரதிநிதியுமாவார். நீங்கள் இவரைப் பின்பற்ற வேண்டும்'' என்றார்கள். அப்பொழுது ஒரு கோஷ்டியினர் சிரித்துக் கொண்டு ''உமது தனயனுக்குக் கீழ்ப்படியுமாறு முஹம்மத் உமக்கு கட்டளையிட்டிருக்கிறார்'' என்று அபூதாலிபிடம் கூறியபடி அகன்றார்கள்.[17]

''அல்லாஹ்வின் தூதர் 'நீங்கள் அலீயை எனது பிரதிநிதியாகவும் வாரிசாகவும் ஆக்கினால்- நீங்கள் அப்படிச் செய்வீர்களென நான் நினைக்கவில்லை - அவர் உங்களை நேர்வழியின் பால் இட்டுச் செல்லக்கூடிய நுண்ணறிவு படைத்த வழிகாட்டியாக இருப்பதைக் காண்பீர்கள்!' என்று கூறினார்கள்'' என்று ஹுதய்ஃபாஹ் அறிவித்துள்ளார்.[18]

''தனது வாழ்வும் மரணமும் என்னுடையதைப் போல் இருக்க வேண்டுமென்றும் சுவனம் புகவேண்டுமென்றும் விரும்புகிறவர் எனக்குப் பின் அலீயை நேசித்து எனது குடும்பத்தினரைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில் அவர்கள் எனது சந்ததிகளாவர்: எனது களிமண்ணிலிருந்து படைக்கப்பட்டவர்களாவர். எனது அறிவும் புரிந்துணர்வும் அவர்களுக்கு அருளப்பட்டுள்ளது. எனவே அவர்களது ஒழுக்கப்பண்புகளை மறுப்பவர்களுக்குக் கை சேதமே. (இறுதித் தீர்ப்பு நாளில்) எனது பரிந்துரையில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்'' எனப் பெருமானார் (ஸல்) கூறியதாக இப்னு மர்தூயாஹ் அறிவித்துள்ளார்.[19]

முந்திய பகுதியை உறுதிப்படுத்தல்

நபியின் வாரிசு பொறுப்பு சம்பந்தமான ஷீஆக்களின் வாதம் பெரும்பாலும், நபியவர்கள் சுகவீன முற்றிருந்த நாட்களில் சில தோழர்கள் முன்னிலையில் தாளும் மையும்[20] கொணருமாறு கேட்ட சம்பவத்தில் தங்கியுள்ளது. முஸ்லிம்கள் வழி

கெடாதிருக்கும் பொருட்டு பின்பற்றுவதற்காக ஏதோ எழுதச் சொல்வதற்காக வேண்டியே நபிகளார் மையும் தாளும் கேட்டார்களென்பது ஷீஆக்களின் நம்பிக்கை. அச்சமயம் பிரசன்னமாயிருந்த சிலர் எதையும் கூறமுடியாத அளவுக்கு நபிகளார் சுகவீன முற்றிருக்கிறார்கள் எனக் கருதினர். ''அல்லாஹ்வின் (வேத) நூலே நமக்குப் போதுமானது'' என்றனர். இவ்விவகாரம் குறித்து அமளிதுமளி ஏற்பட்டது. நபியின் முன்னிலையில் சத்தமோ ஆரவாரமோ இருக்கக் கூடாதாகையால் அவர்களை அங்கிருந்து அப்பால் செல்லுமாறு நபிகளார் பணித்தார்கள்.

நபிக்குப்பின் வாரிசுரிமை சம்பந்தமாய் மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸ்களையும் நபிகளாரின் மரணத்தின் போது நிகழ்ந்த சம்பவங்களையும் - குறிப்பாக நபியின் வாரிசைத் தெரிவு செய்யும் விடயத்தில் அலீ (அலை) யின் ஆலோசனை பெறப்படவில்லை யென்பதையும் - கருத்தில் கொண்டு, நபி (ஸல்) தமக்குப் பின் வாரிசாக வரவேண்டியவரைப் பற்றித் திட்டவட்டமாக அறிவிக்கவே விரும்பினார்களெனினும் அவர்களால் அவ்வாறு செய்ய முடியாமல் போய்விட்டதென்பது ஷீஆக்களின் முடிவு.

அங்கே பிரசன்னமாயிருந்த சிலர் சொன்ன வார்த்தைகள் தடுமாற்றத்தையுண்டு பண்ணி, இறுதி முடிவு அறிவிக்கப்படுவதனைக் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. நபிகள் பிரான் பேசும் போது அவர்கள் இடையில் குறுக்கிட்டமை, ஜுரம் காரணமாய் பெருமானார் பொருத்தமற்ற வார்த்தைகளைப் பேசக் கூடும் என வெளிப்படையாகத் தோற்றம் தரக்கூடிய காரணத்தினாலல்ல. ஏனெனில், எல்லாவற்றுக்கும் முதலாவதாக நபிகள் (ஸல்) சுகவீன முற்றிருந்த நாட்களில் ஒருபோதும்அர்த்தமற்ற, பொருத்த மற்ற மொழிகளைப் பேசியதில்லை. நபிகளார் சம்பந்தமாய் அப்படி யெதுவுமே அறிவிக்கப்பட்டதில்லை. மேலும் இஸ்லாமியக் கொள்கைகளின் படி அர்த்தமற்ற, நினைவுத்தடுமாற்றமான வார்த்தைகளைக் கூறுவதிலிருந்து நபி பெருமான் (ஸல்) இறைவனால் பாதுகாக்கப்பட்டவர்களாவர், எனவே தவறிழைக்க முடியாதவர்களாவர்.

இரண்டாவதாக, அச்சமயம் அங்கு பிரசன்னமாயிருந்த சிலரின் அவ்வார்த்தைகள் திடமானவையாயிருந்திருப்பின் அதனையடுத்து 'இறைவனின் (வேத) நூலே எமக்குப் போதுமானது'' என்ற சொற்றொடருக்கு இடமிருந்திருக்காது. வழக்கத்துக்கு மாறான சந்தர்ப்பங்களில் நபிகளார் பொருத்தமற்ற வார்த்தைகளைக் கூறக்கூடும் என்பதை நிரூபிப்பதற்கு அவர்கள் சுகவீன முற்றிந்ததனை மட்டுமே பயன்படுத்தியிருக்கலாம். திருக்குர்ஆனிருக்க திருநபியின் சொல் தேவையில்லையென்று உரிமை கொண்டாட வேண்டியிருந்திராது. திருநபிக்குக் கீழ்ப்படிய வேண்டு மென்பது அத்தியாவசிய மென்றும் திருநபியின் சொல்லும் ஒருவகையில் அல்லாஹ்வின் வார்த்தையைப் போன்றதாகு மென்றும் அல்லாஹ்வின் திருமறை கருதுகின்றது என்ற உண்மையை எந்தவொரு முஸ்லிமிடமிருந்தும் மறைக்க முடியாது. திருமறையின் போதனைப்படி முஸ்லிம்கள் அல்லாஹ்வுடையவும் நபியுடையவும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும்.

மூன்றாவதாக, முதலாவது கலீபாவின் இறுதிநாட்களின் போதும் ஒருசம்பவம் நிகழ்ந்தது. சுகவீனமுற்றிருந்த முதலாவது கலீபா தமது மரண சாசனத்தில் இரண்டாம் கலீபாவைத் தமது வாரிசாகத் தெரிவு செய்தார். கலீபாவின் ஆணைப்படி உதுமான் அவ்வுயிலை எழுதிக் கொண்டிருந்தபோது முதலாவது கலீபா மயக்கமுற்றார். ஆனால் '' பேனையும் தாளும்''[21] என்ற ஹதீஸ்படி நபிகள் பெருமான் விடயத்தில் கூறப்பட்ட வார்த்தைகளை இரண்டாம் கலீபா இச்சந்தர்ப்பத்தில் சொல்லவில்லை. இப்னு அப்பாஸ் கூறியவொரு ஹதீஸ்படி இவ்வுண்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.[22] இரண்டாவது கலீபா பின்வருமாறு கூறியதாகப் பதிவாகியுள்ளது: ''அலியே கிலாபத்துக்குத் தகுதியானவர், ஆனால் குறைஷிகள் அவரது கிலாபத்தைத் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அவர் கலீபாவாகியிருந்தால் தூய்மையான சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும்படியும் நேர்வழியைப் பின்பற்றும் படியும் அவர் மக்களை பலவந்தப்படுத்தியிருப்பார். அவரது கிலாபத்தின் கீழ்

அவர்களால் நீதியின் வரம்புகளை மீற முடியாது போயிருக்கும் எனவே அவர்கள் அவருடன் யுத்தஞ் செய்ய முயன்றிருப்பார்கள்.''[23]

சத்தியத்திலிருந்து விலகிச் சென்றவரை ஒருவர் இஸ்லாமியக் கொள்கைப்படி சத்தியத்தைப் பின்பற்றுமாறு வலியுறுத்த வேண்டுமென்பது வெளிப்படை: சத்தியத்தைத் துறந்தவருக்காக வேண்டி ஒருவர் சத்தியத்தை துறக்கக் கூடாது. சில முஸ்லிம் கூட்டத்தினர் மத வரியைச் செலுத்த மறுத்தது பற்றி அறிவிக்கப்பட்டதும் முதலாவது கலீபா[24] அவர்கள் மீது போர்தொடுக்குமாறு கட்டளைபிறப்பித்துப் பின்வருமாறு கூறினார்: நபிகளாருக்கு அவர்கள் செலுத்திய தசபாக (வரியை) த்தை அவர்கள் எனக்கு வழங்காவிட்டால் நான் அவர்களுக்கெதிராய்ச் சண்டையிடுவேன்.'' என்ன நேர்ந்தபோதிலும் சத்தியமும் நீதியும் புனர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதையே இவ்வார்த்தைகள் மூலம் எல்லாவற்றுக்கும் மேலாக அவர் அர்த்தப்படுத்தினாரென்பது பிரத்தியட்சம். நிச்சயமாக கிலாபத்தின் சட்ட பூர்வ தன்மை பத்திலொரு பங்கு வரி செலுத்துவதை விடவும் அதிக முக்கிய மானதாகும். தசபாக வரி விடயத்தில் முதலாவது கலீபா பிரயோகித்த அதே கொள்கை, நபிபெருமானின் வாரிசு சம்பந்தமான பிரச்சனையில் ஆரம்பகால முழு சமுதாயத்தினாலும் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டுமென ஷீஆக்கள் நம்புகின்றனர்.

இமாமத்தும் தெய்வீக அறிவுத்துறைகளை விளக்குவதில் அதன் பங்கும்.

பொது வழிகாட்டலின் மாற்ற முடியாத அத்தியாவசிய விதிப்படி, ஒவ்வொரு படைப்பினமும் அதன் வகையான பூரணத்துவமும், விமோசனமும் நோக்கி, தோற்றம்-தலைமுறை ஆகிய பாதையினூடு வழிகாட்டப்படுகின்றதென, நபித்துவம் பற்றிய விசாரணையின் போது நாம் குறிப்பிட்டோம். மனித இனம் இப்பொது விதிக்கு விலக்கானதல்ல. மனிதனின் நல்வாழ்வு இம்மை மறுமையிரண்டிலும் உத்தரவாதஞ் செய்யப்படும் வகையில் யதார்த்தத்தைத் தேடும் 'இயல்பூக்கத்'

தினூடும், சமூகத்தில் அவனது வாழ்வு சம்பந்தமான சிந்தனையூடும் அவன் வழிகாட்டப்படல் வேண்டும். வேறுவார்த்தைகளில், மானிட இன்பத்தையும், பூரணத்து வத்தையும் எய்துவதற்காக வேண்டி மனிதன் சில கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் ஏற்றுக் கொண்டு அவற்றின் அடிப்படையில் தன்வாழ்வை அமைத்துக் கொள்வது அவசியமாகின்றது.

மேலும், மதம் என்று சொல்லப்படும் முழுமையான வாழ்க்கைத் திட்டத்தைப் பகுத்தறிவினாலன்றி வேத வெளிப்பாட்டினூடும், நபித்துவத்தினூடுமே புரிந்து கொள்ள முடியுமென ஏலவே குறிப்பிடப்பட்டுள்ளது. நபிமார்கள் என்றழைக்கப்படும் மனிதர்கள் மத்தியிலான சில பரிசுத்தவான்களால் இவை வெளியாகின்றன. மனித ஜீவிகள் என்ற முறையில் மனிதனது கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் பற்றிய அறிவை நபிமார்கள் வெளிப்பாடுகள் மூலமாக இறைவனிடமிருந்து பெற்று அவற்றை மனிதர்கள் விமோசனமடைவதற்காக அவர்களுக்கு அறிவிக்கின்றனர்.

அதேபோன்று நல்வாழ்வும் பூரணத்துவமும் நோக்கி மனிதனுக்கு வழிகாட்டுவதற்கான அறிவின் அவசியத்தை இவ்விசாரணை நிரூபிக்கின்றதென்பது வெளிப்படை. அவ்வறிவை முழுமையாகப் பேணிப் பாதுகாத்து, தேவையான போதெல்லாம் மனிதர்களுக்கு அதனை அறிவுறுத்துவதற்கு தனிமனிதர்கள் இருப்பது அவசியமென்பதையும் இவ்விசாரணை நிரூபிக்கின்றது. இறைவனின் தனிப் பெருங்கருணை, மனித இனத்தின் கடமைகளை வெளிப்பாட்டின் மூலம் அறிந்து கொள்ளும் மனிதர்களின் இருப்பை அத்தியாவசியப் படுத்துவது போன்ற தெய்வீக மூலத்திலிருந்து வெளியான இம்மனிதக் கடமைகளும், செயல்களும் உலகில் பாதுகாக்கப்பட்டு, தேவையேற்படும் போது மனிதகுலத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு விளக்கப்படல் வேண்டுமென்பதையும் அத்தியாவசியப் படுத்துகின்றது.வேறு

வார்த்தைகளில், இறைவனின் மார்க்கத்தைப் பாதுகாத்து, தேவையான போது அதனை விளக்கக் கூடிய தனிமனிதர்கள் எலலாக் காலத்தும் இருந்து வரல் வேண்டும் .

நபித்துவம் அருளப்பெற்று இறைவனிடமிருந்து இறைகட்டளையையும், சட்டங்களையும் பெறுகின்றவர் நபி எனப்படுவது போல, இறை கட்டளையருளப்பட்டபின் அவற்றைப் பேணிப் பாதுகாக்கும்பணிக்காக இறைவனால் தெரிவு செய்யப்பட்ட மனிதர் இமாம் எனப்படுகின்றார். இமாமத்[25] தும் நபித்துவமும் (நுபுவ்வத்) இரண்டுமே ஒரு மனிதரிடம் சேர்ந்திருப்பதும் அல்லது பிரிந்திருப்பதும் சாத்தியமே.

நபிமார்களின் தவறிழைக்க முடியாத தன்மைகுறித்து காட்டப்பட்ட அத்தாட்சிகள் இமாம்களின் தவறிழைக்க முடியாத தன்மையையும் காட்டும். ஏனெனில், தனது சத்திய மார்க்கம் எல்லாக் காலத்தும் மனுக்குலத்தவர் மத்தியில் பிரச்சாரஞ் செய்யப்படும் வகையில் அதனை இறைவன் பாதுகாத்திட வேண்டியதவசியம்: தவறிழைக்க முடியாமையும், தவறிழைப்பதிலிருந்து இறைவனது பாதுகாவலுமின்றி இது சாத்தியமன்று.

நபிக்கும் இமாமுக்குமுள்ள வித்தியாசம்

இறை கட்டளைகளையும் சட்டங்களையும் நபிமார்கள் பெறுவது பற்றிய முந்திய வாதம் நபித்துவத்தின் அடிப்படையை மட்டுமே குறிப்பாக, இறை கட்டளைகளைப் பெறுவதை- நிரூபிக்கின்றது. இந்நபித்துவக் கட்டளைகள் பாதுகாக்கப்பட்டுள்ளதே இயல்பாக அதன் உறுதியையும் தொடர்ச்சியையும் பற்றிய கருத்தையெழுப்பினும், இவ்வாதம் நபித்துவத்தின் உறுதியையும் தொடர்ச்சியையும் நிறுவுவதாய் இல்லை. எனவேதான், ஒரு தீர்க்கதரிசியாகிறவர் (நபி) எப்பொழுதும் மனிதர்கள் மத்தியில் இருக்க வேண்டியது அவசியமற்றிருந்த போதிலும், அதற்கு மாற்றமாக இறைவனது மார்க்கத்தின் பாதுகாவலராக மனிதகுலத்தவர் மத்தியில் ஓர் இமாம் எப்பொழுதுமே இருந்து வரவேண்டியது

அவசியமாகின்றது. அவர் அங்கீகரிக்கப்பட்டவராகவும் அறியப்பட்டவராகவும் இருப்பினும் இல்லாவிடினுஞ் சரி, ஷீஆக்களால் இமாம் என அழைக்கப்படும் ஒருவர் இல்லாமல் மனித சமுதாயம் இருக்க முடியாது. உயரிறைவன் தன் திருமறையில் கூறுகிறான்: ''. . . ஆகவே அதனை இவர்கள் நிராகரித்துவிட்டபோதிலும் அதனை நிராகரிக்காத மக்களிடம் (அதாவது இமாம்களிடம்) ஏலவே நாம் ஒப்படைத்துள்ளோம்'' (குர்ஆன் 6:89) [26]

ஏலவே குறிப்பிட்டதுபோல், நபித்துவப் பணி இமாமின் பணி இரண்டுமே ஒரே மனிதரிடம் இணைந்திருக்கலாம். அதாவது இறைகட்டளையைப் பெறுகின்ற பணியும் அதனைப்பாதுகாத்து அதற்கு விளக்கமளிக்கின்ற பணியும் ஒரே மனிதரில் இணைந்திருக்கலாம். சில வேளை அவை பிரிந்து மிருக்காலம். நபி யொருவர் இல்லாத காலங்களில் மக்கள் மத்தியில் இமாமொருவர் வாழ்ந்திருப்பது போன்று. நபிமார்களின் எண்ணிக்கை மட்டிடப்பட்டதாகும். அதாவது எல்லாகாலகட்டத்திலும், எல்லா சகாப்தத்திலும் நபிமார்கள் இருக்கவில்லை யென்பது வெளிப்படை..

இறைவனின் திருமறையில் சில நபிமார்கள் இமாம்களாக அறிமுகப்படுத்தப்படுவதும் முக்கியமாகக் கவனித்தற்பாலது. இப்றாஹீம் (அலை) அத்தகைய நபிமார்களில் ஒருவராவார். அவரைப் பற்றித் திருமறை பின்வருமாறு கூறுகின்றது: ''தவிர, இப்றாஹீமை அவருடைய இறைவன் பல கட்டளையிட்டு சோதித்த சமயத்தில் அவர், அவையாவையும் பரிபூரணமாகவே செய்தார். (ஆதலால் இறைவன்) '. . . நிச்சயமாக நான் உம்மை மனிதர்களுக்குத் தலைவராக (இமாம்) ஆக்குகிறேன்'' எனக் கூறினான். அதற்கு, (இப்றாஹீம்) என்னுடைய சந்ததிகளையுமா?'' எனக் கேட்டார். அதற்கு அநியாயக் காரரை என்னுடைய உறுதிமொழி சாராது' என அவன் கூறினான். (குர்ஆன் 2:124). மேலும் இறைவன் கூறுகின்றான்: ''அன்றி, நம் கட்டளைகளை ஏவி, நேரான வழியை அறிவிக்கக் கூடிய தலைவர் (இமாம்) களாகவும் இவர்களை ஆக்கினோம். . . '' (குர்ஆன், 21:73)

மதத்தின் ஆத்மீகப் பரிமாணத்தில் இமாமத்தின் பங்கு

இமாம் மனிதர்களது புறச் செயல்களில் வழிகாட்டியாகவும், தலைவராகவும் இருப்பது போன்றே மனிதர்களின் அகவய, ஆன்மீகத் தலைமையும் வழிகாட்டலும் இமாமின் வசமே உள்ளன. அகவயமாக, ஆத்மீகத் துறையில் இறைவனை நோக்கி நகரும் பயணக்கூட்டமான மானுடத்துக்கு அவரே வழிகாட்டியாவார். இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துவதற்கு பின்வரும் இரு அறிமுக விளக்கங்களின்பால் திரும்ப வேண்டும். முதலாவதாக, இஸ்லாத்தின் படியும் இறைவனால் அருளப்பட்ட மற்றைய மதங்களின் படியும், இறைவனது மதத்தின் மூலமாகவும், இறைவன் அருளிய பூர்வ இயல்பும் நுண்ணறிவும் மூலமாகவும், மனிதன் அறியவரும் நற்செயல்கள் அல்லது தீய செயல்களிலேயே அவனது இன்பமும் துன்பமும் ஈடேற்றமும் கைசேதமும் தங்கியுள்ள தென்பதில் சந்தேகமில்லை. இரண்டாவதாக, மனிதர்களது அவர்கள் வாழும் சமுதாயத்தினது மொழியில், வெளிப்பாடு மூலமாகவும், நபித்துவம் மூலமாகவும் இறைவன் மனிதனது செயல்களைப் பாராட்டியும் கண்டித்தும் உள்ளான்.

இறைவெளிப்பாட்டின் போதனைகளையேற்று நற்செயல் புரிபவர்களுக்கு அவன் நித்திய பேரின்ப வாழ்வை வாக்களித்துள்ளான். மனிதனின் பூரணத்துவத்துக்கு இசைந்த ஆசைகள் யாவும் இதனால் பூர்த்திசெய்யப்படும். தீயவர்களுக்கும் அநீதம் புரிவோருக்கும் அவன் நித்திய வேதனைபற்றி எச்சரித்துள்ளான். சகலவிதமான துன்பங்களும் கைசேதமும் இதனால் அவர்களுக்கு ஏற்படும்..

நாம் கற்பனை செய்யக்கூடிய அனைத்துக்கும் அப்பாற்பட்ட இறைவன் மனிதனைப் போன்று குறிப்பிட்டவொரு சமூக அமைப்பால் உருவாக்கப்படும் ''சிந்தனை'' கொண்டவனல்லன். ஆண்டான் அடிமை, ஆள்வோன் ஆளப்படுவோன் ஏவல்விலக்கல், வெகுமதி தண்டனை போன்ற உறவுகள் சமூக வாழ்வுக்கு வெளியே இருப்பதில்லை. தெய்வ கட்டளை யென்பது சிருஷ்டியின் அமைப்பேயாகும். இதில்

அனைத்தினது தோற்றமும் இருப்பும் உண்மை உறவுகளின்படி - அதன்படி மட்டுமே - இறைவனின் சிருஷ்டியுடனேயே உறவு கொண்டுள்ளது. மேலும், திருமறையிலும்[27] நபிமொழியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று பொதுவான மனித அறிவுக்கு அப்பாற்பட்ட உண்மைகள் மதத்தில் அடங்கியுள்ளன. எமது புரிந்துணர்வின் மட்டத்தில் எம்மால் விளங்கிக் கொள்ளக் கூடிய மொழியில் இவற்றை எமக்காக இறைவன் வெளியாக்கினான்.

மனிதனின் நற்செயல்கள் தீய செயல்களுக்கும், நித்தியத்துவத்தில் மனிதனுக்காக ஏற்பாடு செய்யப்படும் வாழ்க்கை வகைக்குமிடையே உண்மையான உறவுத் தொடர்புண்டு என இதனால் முடிவு செய்யலாம். இறைவனின் சித்தத்துக் கேற்ப வருங்கால வாழ்வின் இன்பத்தையும் துன்பத்தையும் இவ்வுறவே தீர்மானிக்கின்றது. அல்லது சாதாரண வார்த்தைகளில், எந்தவொரு நற்செயலும் அல்லது தீய செயலும் மனிதனின் ஆன்மாவினுள் தாக்கத்தையுண்டு பண்ணி அவனது வருங்கால வாழ்வின் தன்மையைத் தீர்மானிக்கின்றதெனலாம். புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளாவிடினும் மனிதன் பயிற்சி யளிக்கப்படும் ஒரு குழந்தை போலாவான். ஆசிரியனின் அறிவுறுத்தல்களிலிருந்து அக்குழந்தை செய்ய வேண்டியவைகளையும் செய்யக் கூடாதவைகளையும் தெரிந்து கொள்கிறதே தவிர தான் புரியும் செயல்களின் அர்த்தத்தை அறிந்து கொள்வதில்லை என்ற போதிலும் அக்குழந்தை வளர்ச்சியடைந்ததும், பயிற்சிக்காலத்தில் அகவயமாகப் பெற்ற ஒழுக்கம் வாய்ந்த மனப்பழக்கங்கள் மூலமாக அதன் சமூக வாழ்க்கை இன்பகரமானதாயமைகின்றது. ஆசிரியரின் கட்டளைகளுக்குக் கீழப்படிய மறுத்தால் துன்பமும் வேதனையுமே அதற்கு மிஞ்சும். அல்லது அவன் வைத்தியனின் கவனிப்பிலிருக்கும் ஒரு நோயாளியைப் போன்றவன், வைத்தியன் விதித்த பிரகாரமே மருந்தும் உணவும் உட்கொள்கிறான்,உடற்பயிற்சி செய்கிறான். வைத்தியனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர அவனுக்கு வேறு கடமை கிடையாது. இவ்வாறு அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதால் இவ்வாணைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமே அவனது உடலின் பாகங்களுக் கிடையே இணக்கம், ஏற்படுவது,

அதுவே சுகத்துக்கான மூலாதாரமாகவும் உடல் இன்பங்களுக்கான ஆதாரமாகவும் திகழுகின்றது தொகுத்துரைப்பதாயின், மனிதனின் புறவாழ்வினுள் அவனது அகவாழ்வு, ஆன்மீக வாழ்வு அடங்கியுள்ளது. அது அவனது செயல்களுடன் தொடர்பு கொண்டது. அவ்வுறவினால் வளர்ச்சிகாண்பது. மறுமையில் அவனது ஈடேற்றமும் கைசேதமும் முழுமையாக இவ்வக வாழ்விலேயே தங்கியுள்ளது.

திருமறையும் இந்த வாழ்க்கையைவிடவும் உயர்வான, இந்த ஆன்மாவை விடவும் ஒளிபொருந்திய இன்னொரு வாழ்க்கையும் ஆன்மாவும் நற்செயல் புரிந்தோருக்கும் விசுவாசிகளுக்கும் உண்டு என்பதைப் பல திருவசனங்களினூடே உறுதிப்படுத்துகின்றது. மனிதனது செயல்கள் யாவும் அவனது ஆன்மாவில் உள்ளார்ந்த பாதிப்புகளை யுண்டுபண்ணி, அப்பாதிப்புகள் எப்பொழுதும் அவனோடிருக்கும் எனத் திருமறை உறுதிப்படுத்துகின்றது. நபி மொழிகளிலும் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஹதீஸ்-இ-மிஃராஜில் (விண்ணுலக யாத்திரை பற்றிய ஹதீஸ்) இறைவன் திருநபியிடம் பின்வருமாறு கூறுகின்றான்: ''எனக்குத் திருப்திதரக்கூடிய வகையில் நடக்க விரும்புவோன் மூன்று பண்புகளைப் பெற்றிருக்கவேண்டும்: அறியாமை கலவாத நன்றியுணர்வை அவன் வெளிப்படுத்த வேண்டும். மறுதியெனும் புழுதிபடியாத நினைவுகூரலை அவன் வெளிப்படுத்தவேண்டும் என் மீதான நேசத்தைவிடவும் படைப்புகளின் நேசத்துக்கு முன்னுரிமை கொடாத நேசத்தை அவன் காட்டவேண்டும். அவன் என்னை நேசித்தால் நான் அவனை நேசிப்பேன்: என் மாட்சிமையின் பார்வையால் அவனது மனக்கண்ணைத் திறந்துவைப்பேன். என் படைப்புகளில் உயர்ந்தோரை அவனிடமிருந்து ஒளிக்க மாட்டேன். படைப்புகளுடனான தொடர்பும் சம்பாசணையும் அற்றுப் போகும் வரை இரவின் இருட்டிலும் பகலின் வெளிச்சத்திலும் நான் அவனிடம் என் இரகசியங்களை வெளியிடுவேன். எனது வார்த்தையும் வானவர்களின் வார்த்தையும் அவனுக்குக் கேட்கச் செய்வேன். என் படைப்புகளிடமிருந்து நான் திரையிட்டு வைத்திருக்கும் ரகசியங்களை அவனுக்கு வெளியாக்குவேன்.

அவன் முன்னால் படைப்பினங்கள் நாணமுறும் அளவுக்கு அவனுக்கு ஒழுக்கமெனும் ஆடையை உடுத்திவைப்பேன். பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாக அவன் பூமியின் மீது நடப்பான். அவனது இருதயம் பிரக்ஞையும் திருஷ்டிஞானமும் கொண்டதாகச் செய்வேன். சுவனத்திலும் நெருப்பிலும் (நரகிலும்) உள்ள எதனையும் நான் அவனுக்கு மறைக்க மாட்டேன். இறுதித்தீர்ப்பு நாளில் மக்கள் அனுபவிக்கக்கூடிய எத்தகைய பயங்கரத்தையும், இடையூறையும் அவன் அறியச் செய்வேன்.''[29]

அபூ அப்துல்லாஹ் பின்வரும் சம்வத்தை நினைவுபடுத்துகின்றார்: நபி (ஸல்) ஹரித்தாஹ் இப்னு மாலிக் இப்னு அல்-நு.:மானை வரவேற்று அவரிடம் '' ஹரித்தாவே, எப்படி சேமம்'' என்று விசாரித்தார்கள். அதற்கவர், '' அல்லாஹ்வின் ரசூலே, ஓர் உண்மை விசுவாசியாக நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்'' என்றார். அல்லாஹ்வின் ரசூல் அவரிடம் ''ஒவ்வொன்றும் அதன் உண்மையைக் கொண்டிருக்கின்றது. உமது வார்த்தையின் உண்மை யாது? '' எனக் கேட்டார்கள். அதற்கவர், '' அல்லாஹ்வின் ரசூலே! எனது ஆன்மா உலகிலிருந்து அப்பால் திரும்பிவிட்டது. என் இரவுகள் விழிப்பு நிலையில் கழிகின்றன. என் பகல்கள் தாகமுற்ற நிலையில் கழிகின்றன. எனது இறைவனின் இராஜாசனத்தை நான் நோக்குவது போலவும், கணக்கு தீர்க்கப்பட்டுவிட்டது போலவும், சுவனத்தில் ஒருவரையொருவர் போய்த் தரிசிக்கும் சுவனவாசிகளை நான் பார்த்துக் கொண்டிருப்பது போலவும் நெருப்பில் நரகவாசிகளின் குரல் எனக்குக் கேட்பது போலவும் தோன்றுகிறது'' என்றார். அப்போது அல்லாஹ்வின் தூதர் '' இந்த அடியானின் இருதயத்தை அல்லாஹ் ஒளிமய மாக்கி விட்டான்'' என்றார்கள். [30]

நம்மிற் சிலர் தாம் சொல்வதைத் தம்வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் நன்மை தீமை சம்பந்தப்பட்ட விடயங்களில் பிறருக்கு வழிகாட்ட முனைவதையும் நினைவுகூற வேண்டும். இறைகட்டளையால் வழிகாட்டலும் தலைமையும் அருளப்பட்ட நபிமார்கள் இமாம்கள் விடயத்தில் இவ்வாறு நடப்பதில்லை.

எந்த மார்க்கத்தின் தலைமையை அவர்கள் ஏற்றுக் கொண்டனரோ அந்த மார்க்கத்தினை அவர்கள் தாமும் நடைமுறையில் கடைபிடிப்பவர்களாவர். எந்த ஆன்மீக வாழ்க்கையை நோக்கி அவர்கள் மக்களை வழிநடாத்துகின்றனரோ அது அவர்களது சொந்த ஆன்மீக வாழ்க்கையாகும். [31] ஏனெனில் தானே தன்னை வழிநடத்தாத ஒருவரின் கையில் இறைவன் மற்றோரின் வழிகாட்டலை விடமாட்டான். விசேட தெய்வீக வழிகாட்டல் மீறப்படவோ தலையிடப்படவோ முடியாததாகும்.

இவ்விசாரணையிலிருந்து பின்வரும் முடிவுகளைப் பெறலாம்:

(1) ஒவ்வொரு மத சமூகத்திலும் நபிமார்கள் இமாம்கள் என்போர் தாம் பிரச்சாரஞ் செய்யும் ஆன்மீக, மதவாழ்க்கையின் பூரணத்துவத்தை எய்தியோரில் சிரேஷ்டமானோராவர். ஏனெனில் அவர்கள் தம் சொந்த போதனைகளைத் தாமே கடைப்பிடிக்கவும் தாங்கள் அறிவிக்கும் ஆன்மீக வாழ்க்கையில் தாமே பங்கு பற்றவும் வேண்டியுள்ளது.

(2) அவர்கள் மனிதர்களில் முதல்வர்களாகவும், சமூகத்தின் வழிகாட்டிகளாகவும், தலைவர்களாகவும் இருப்பதால், அவர்களே மனிதரில் மிகவும் ஒழுக்க சீலரும் பூரணமானவர்களுமாவர்.

(3) தெய்வீகக் கட்டளை மூலம் சமூகத்தின் வழிகாட்டலுக்கான பொறுப்பு எவரது தோள்மேல் சுமத்தப்பட்டுள்ளதோ அவரே மனிதனது புறவாழ்வுக்கும் செயல்களுக்கும் வழிகாட்டியாவார். அதேபோன்று அவர் ஆன்மீக வாழ்வின் வழிகாட்டியுமாவார். மனித வாழ்வின் உட்பரிமாணமும், மத அநுட்டானமும் அவரது வழிகாட்டலின் மீதே தங்கியுள்ளது.[32]

இஸ்லாத்தின் இமாம்களும் தலைவர்களும்

இஸ்லாத்தில் திருநபியின் மறைவுக்குப் பின், இஸ்லாமிய

சமுதாயத்தினுள் (உம்மாஹ்) ஓர் இமாம் (அல்லாஹ்வினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைவர்) இடையறாமல் எல்லாக் காலத்தும் இருந்து வந்துள்ளார். தொடர்ந்தும் இருந்து வருவார் என்பது முன்னைய விசாரணைகளால் பெறப்பட்ட முடிவாகும். இமாம்கள் பற்றிய வர்ணனை, அவர்களின் எண்ணிக்கை அவர்கள் யாவரும் குறைஷிகள், நபிகுடும்பத்தவர்கள் என்ற உண்மை, வாக்களிக்கப்பட்ட மஹ்தி அவர்களில் இறுதியாக வருபவர் என்ற உண்மை யாவும் ஷீஆயிஸத்தில் பல்வேறு நபிமொழிகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. அலீயின் இமாமத் குறித்தும் அவர் முதல் இமாம் என்பது குறித்தும் திட்டவட்டமான நபி மொழிகள் உண்டு. அதேபோன்று இரண்டாம் இமாமின் இமாமத் குறித்தும் நபி (ஸல்) அவர்களதும் அலீ (ரலி) அவர்களதும் திட்டவட்டமான வாய்மொழிகள் உண்டு. அதே போன்று முன்சென்ற இமாம்கள் அவர்களுக்குப் பின்னால் வரப்போகும் இமாம்களைப்பற்றித் திட்டவட்டமாக அறிவித்துச் சென்றுள்ளனர். அதே போன்று இரண்டாம் இமாமின் இமாமத் குறித்தும் நபி (ஸல்) அவர்களதும் அலீ (ரலி) அவர்களதும் திட்டவட்டமான வாய்மொழிகள் உண்டு. அதே போன்று முன்சென்ற இமாம்கள் அவர்களுக்குப் பின்னால் வரப்போகும் இமாம்களைப்பற்றித் திட்டவட்டமாக அறிவித்துச் சென்றுள்ளனர்.[34] பன்னிரு இமாம் ஷீஆ ஆதாரங்களில் காணப்படும் வாய்மொழிகளின் படி இமாம்கள் பன்னிருவராவர். அவர்களின் திருப்பெயர்கள் வருமாறு:

(1) அலீ இப்னு அபீ தாலிப் (2) ஹஸன் இப்னு அலீ

(3) ஹுஸைன் இப்னு அலீ (4) அலீ இப்னு ஹுஸைன்

(5) முஹம்மத் இப்னு அலீ (6) ஜா:.பர் இப்னு முஹம்மத்

(7) மூஸா இப்னு ஜா:.பர் (8) அலீ இப்னு மூஸா

(9) முஹம்மத் இப்னு அலீ (10) அலீ இப்னு முஹம்மத்

(11) ஹஸன் இப்னு அலீ (12) மஹ்தி

பன்னிரு இமாம்களின் வாழ்க்கைச் சுருக்கம்

முதலாம் இமாம்

அமீருல் மு.ஃமினீன் அலீ (அலை) பனூ ஹாசிம்களின் தலைவரான (ஷெய்க்) அபூ தாலிபின் புதல்வராவார். அபூ தாலிப் நபிபெருமானின் பெரிய தந்தையும் அவர்களது பாதுகாவலருமாவார். நபிகளாரைத் தமது இல்லத்துக்கு அழைத்து வந்து அவர்களைச் சொந்தத் தனயர் போலப் பராமரித்து வளர்த்தவராவார். முஹம்மத் (ஸல்) நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவர்களை அபூதாலிப் தொடர்ந்தும் ஆதரித்துவந்ததோடு அரபிகள் மத்தியிலிருந்த நிராகரிப் போரிடமிருந்து குறிப்பாகக் குறைஷிக் காபிர்களிடமிருந்து வந்த எதிர்ப்புகள் கொடுமைகளிலிருந்து நபிபெருமானைக் காத்து நின்றார்.

பிரசித்தமான பாரம்பரிய அறிவிப்புகளின் படி, பெருமானாருக்கு நபித்துவம் அருளப்படுவதற்குப் பத்தாண்டுகள் முன் பிறந்தவர் அலீ. அலீக்கு ஆறுவயதாயிருக்கையில் மக்காவைச் சுற்றிலும் உண்டான பஞ்சத்தின்போது அவரைத் தந்தையின் வீட்டை விட்டுவந்து தம் வீட்டில் தங்குமாறு செய்தார்கள் பெருமானார். இங்கு திருநபியின் நேரடிப் பாதுகாப்பிலிருந்தார் அலீ .[36]

சில வருடங்களின் பின்னர் திருபிக்கு நபித்துவம் அருளப்பட்டு, முதன் முறையாக ஹிராக்குகையில் வைத்து இறை வெளிப்பாடுஅருளப்பெற்றதும் குகையிலிருந்து வெளியேறி பெருமானார் தமதில்லம் நோக்கிச் செல்கையில் வழியில் அலீயைச் சந்தித்தார்கள். நபிகளார் நடந்த விடயத்தை அலியிடம் கூறியதும் அலீ புதிய மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார். [37] மீண்டும், நபிகளார் தம் உறவினர்களை ஒன்று கூட்டி புதிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்து, தமது அழைப்பை ஏற்றுக்கொள்ளும் முதல் மனிதர் தமது பிரதிநிதியும்,வாரிசும் ஆவார் எனக்கூறியபோது தமது இருக்கையை விட்டெழுந்து தம் மத நம்பிக்கையைப் பிரகடனஞ் செய்த முதல் மனிதர் அலீ (அலை) யாவார்.[38] எனவே

இஸ்லாத்தையேற்றுக் கொண்ட முதல் மனிதரும், நபியைப் பின்பற்றியோரில் ஒரேயிறைவனைத் தவிர வேறெதையும் ஒருபோதும் வணங்கியிராதவரும் அலீ (அலை)யாவார்.

பெருமானார் மக்காவிலிருந்து மதினாவுக்கு ஹிஜ்ரா செல்லும் வரை அவர்களுடன் அலீ (அலை) எப்போதும் கூடவே இருந்தார். பெருமானார் (ஸல்) மதீனாவுக்கு ஹிஜ்ரா மேற்கொள்ளும் இரவன்று அவர்களின் இல்லத்தை நிராகரிப்பவர்கள் சுற்றிவளைத்துக் கொண்டனர். இரவு முடிவுறுந்தறுவாயில் வீட்டை முற்றுகையிட்டுத் திருநபியைப் படுக்கையிலே துண்டம் துண்டமாக வெட்டிப் போடலாம் எனத் திடசங்கற்பம் பூண்டிருந்தனர் நிராகரிப்பவர்கள். அவ்வேளை பெருமானாரின் படுக்கையில் அலீ படுத்திருக்க, பெருமானார் வீட்டை விட்டுவெளியேறி மதீனாவுக்குப் புறப்பட்டார்கள்.[39] நபிகளார் மதீனா சென்றபின், அவர்களிடம் மக்கள் கொடுத்து வைத்திருந்த அமானிதப் பொருள்களை, அவர்களின் விருப்பப்படி மக்களிடம் திருப்பி ஒப்படைத்தார் அலீ (அலை). பின்னர் அவர் தம் அன்னையாருடனும், நபி மகளாருடனும், இன்னுமிரு பெண்மணிகளுடனும் மதினா சென்றார். மதினாவிலும் திரு நபியின் சொந்த வாழ்க்கையிலும் பொது வாழ்விலும், அவர்களுக்குத் துணையாய் எப்பொழுதும் அலீ (ரலி) கூடவே இருந்தார். கதிஜா நாயகியவர்களுக்குப் பிறந்த தம்மகளார் பாத்திமா (அலை) அவர்களை நபிகளார் அலீக்கு மண முடித்துக் கொடுத்தார்கள். தம் தோழர்களின் மத்தியில் சகோதரத்துவ பந்தங்களை உருவாக்கும் போது திரு நபி (ஸல்) அலீ (அலை) யையே தம் சகோதரராகத் தேர்ந்தெடுத்தார்கள்.[41]

தபூக் யுத்தத்தைத் தவிர நபிகளார் கலந்து கொண்ட அனைத்துப் போர்களிலும் அலீ (அலை) கலந்து கொண்டார். தபூக் யுத்தத்தின் போது பெருமானாருக்குப் பதிலாக மதினாவில் தங்கியிருக்கு மாறு பணிக்கப்பட்டார் அலீ (அலை)[42] எந்தவொரு போரிலும் அவர் பின்வாங்கியதோ புறமுதுகு காட்டியதோ கிடையாது. பெருமானாரின் கட்டளையை அவர் ஒருபோதும் மீறியதில்லை. '' அலீ ஒரு போதும் சத்தியத்தை விட்டுப் பிரிந்ததில்லை, சத்தியமும் ஒருபோதும் அலீயை விட்டுப்

பிரிந்ததில்லை'' என ஒரு முறை பெருமானார் (ஸல்) கூறினார்கள். [43]

பெருமானார் காலமாகும் போது அலீக்கு வயது முப்பத்திமூன்று. மதவொழுக்கங்களில் அதி சிரேஷ்டராகவும், நபித்தோழர்களில் நிகரற்றவராகவும் விளங்கிய போதும், அவர் வயது குறைந்தவரென்றும், நபிகளாருடன் சேர்ந்து நின்று புரிந்த போர்களில் நிராகரிப்பவர்கள் இரத்தத்தை நிலத்தில் சிந்தியமையால் அவருக்கு விரோதிகள் அதிகமென்றும் காரணங்காட்டி கிலாபத்திலிருந்து அவர் ஒதுக்கப்பட்டார். எனவே அலீ பொதுவிவகாரங்களிலிருந்து முழுமையாகத் துண்டிக்கப்பட்டார். அவர் தமதில்லத்தில் ஒதுங்கியிருந்து தெய்வீக அறிவுகளில் தகுதிவாய்ந்த மனிதர்களைப் பயிற்றியெடுக்கத் தொடங்கினார். பெருமானாருக்குப்பின் முதல் மூன்று கலீபாக்களின் இருபத்தைந்தாண்டு கிலாபத் காலத்தை அலீ இவ்விதஞ் செலவிட்டார். மூன்றாவது கலீபா கொலையுண்டதும், மக்கள் அலீ (அலை)க்கு விசுவாசப் பிரமாணஞ் செய்து அவரை கலீபா வாகத் தெரிவு செய்தனர்.

தமது சுமார் நாலாண்டு ஒன்பது மாதகால கிலாபத்தின் போது அலீ (அலை) திருநபியின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமது கிலாபத்துக்கு ஆன்மீக இயக்க வடிவங்கொடுத்துப் புத்துணர்வூட்டி வெவ்வேறு வகையான பல சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார். இயல்பாகவே இச்சீர்த்திருத்தங்கள் சுயநலங் கொண்ட சில கூட்டத்தினரின் நலன்களுக்கு விரோதமாயமைந்தன. இதன் விளைவாக நபித்தோழர்களின் கோஷ்டியொன்று (ஆயிஷா நாயகியின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட தல்ஹா, ஸுபைர் முதலியோரும், இன்னும் விசேடமாக முஆவியாவும் இவர்களில் முன்னணியில் நின்றனர்) மூன்றாம் கலீபாவின் மரணத்தைக் காரணங்காட்டி அலீக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கியது.

குழப்பத்தையும், ராஜத்துரோகத்தையும் அடக்குவதற்காக பஸ்ராவுக் கருகில் அலீ போர்புரிய நேர்ந்தது. இது ''ஒட்டகைப் போர்'' என அழைக்கப்படுகின்றது. தல்ஹாவுக்கும்,

ஸுபைருக்கும் எதிராக அலீ போர்புரிந்தார். '' விசுவாசிகளின் அன்னையாரான' ஆயிஷா நாயகியும் இதில் சம்பந்தப்பட்டிருந்தார். முஆவியாவுக்கெதிராக ஈராக், ஸிரியா எல்லையில் அலீ இன்னுமொரு போரில் ஈடுபட நேர்ந்தது. இதுவே ஒன்றரை வருடங்கள் நீடித்த பிரசித்தமான ''சீப்பின் போர்'' நஹ்ரவான் என்ற இடத்தில் காரிஜிகளையெதிர்த்தும் அலீ பொருத நேர்ந்தது. இது '' நஹ்ரவான் போர்'' என அறியப்படும். இவ்வாறு அலீயுடைய கிலாபத் நாட்களின் பெரும் பகுதி உள்நாட்டு எதிர்ப்பைச் சமாளிப்பதில் கழிந்தது. இறுதியாக ஹிஜ்ரி 40ம் ஆண்டு ரமழான் மாதம் 19ந் திகதி காலை கூஃபா பள்ளிவாசலில் தொழுது கொண்டிருக்கும் போது காரிஜி ஒருவனால் காயப்படுத்தப்பட்டு 21ந் திகதி யிரவு இன்னுயிர்த் தியாகியாக உயிர் நீத்தார் இமாம் அலீ (அலை). [45]

மனிதப் பூரணத்துவக் கண்ணோட்டப் படி பார்த்தால் அலீ (அலை) யிடம் எத்தகைய குறைபாடும் காணப்படவில்லை என்பதற்கு அவரது நண்பரும் பகைவரும் ஒருங்கே சாட்சி பகர்ந்துள்ளனர். இஸ்லாமிய ஒழுக்கப்பண்புகளைப் பொருத்தவரை நபி பெருமானாரினால் வளர்க்கப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட பூரண முன்மாதிரியாக அவர் திகழ்ந்தார். வரலாற்றில் வேறெந்த மனிதர் பற்றியும் பேசப்படாத அளவு சுன்னத் ஜமா அத்தினராலும், ஷீஆக்களாலும், பிறமதங்களைச் சேர்ந்தோராலும், மதங்கள் எதனையுஞ் சாராத மற்றோராலும் அலீயின் ஆளுமை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; நூல்கள் எழுதப்பட்டுள்ளன. நபித் தோழர்கள் மத்தியில் பொதுவாக முஸ்லிம்கள் மத்தியில் விஞ்ஞானத்திலும் அறிவிலும் சிறந்து கல்விஞானம் மிக்கவராக அவர் காணப்பட்டார். ''தெய்வீக அறிவு'' அல்லது மெய்ப்பொருளறிவு (மஆரிஃ-இ-இலாஹியாஹ்) பற்றி ஆராய்வதில் தர்க்க ரீதியான அத்தாட்சிகளையும் உதாரணங்களையும் கையாள்வதை இஸ்லாத்தில் முதன் முதலாக அவரே தம் உரையாடல்களில் அறிமுகப்படுத்தினார். குர்ஆனின் அந்தரங்க அம்சம் குறித்து அவர் பேசியதோடு குர்ஆனின் வெளிப்பாட்டு முறையைப் பேணிக்காப்பதற்காக

அரபு இலக்கணத்தை அவர் உருவாக்கினார். (இந்நூலின் முதல் பகுதியில் பிரஸ்தாபிக்கப்பட்டது போன்று) அரபு மொழியில் நாவன்மை மிக்கவராய் அவர் விளங்கினார்.

வீரத்துக்கு அலீ எனும் அளவுக்கு அவர் துணிவு மிக்கவராய் விளங்கினார். நபிகளார் காலத்திலும், அதற்குப் பின்னரும் நிகழ்ந்த போர்களில் அலீ ஒரு போதும் அஞ்சியதோ கலங்கியதோ கிடையாது. உஹத், ஹுனைன், கைபர், கந்தக் போன்ற போர்களில் நபியின் உதவியாளர்களும், முஸ்லிம் சைனியமும் பயத்தால் நடுங்கியபோதும், சின்னாபின்னாமுற்று ஓடிய போதும் அலீ (அலை) ஒரு போதும் எதிரியிடம் புறமுதுகு காட்டியதில்லை. அலீயைப் போரிலே எதிர்த்து நின்ற எவரும் உயிருடன் மீண்டதில்லை. எனினும் பலவீனமுற்ற எதிரிக்கு உயிர்ப்பிச்சையளிக்கின்ற, புறமுதுகு காட்டுபவர்களை விரட்டிச் செல்லாத வீரப்பண்பு அவரிடம் மிளிர்ந்தது. கைபர் மீது அவர் திடீர்த்தாக்குதல் தொடுத்ததுமில்லை. கைபர் யுத்தத்தில் கோட்டை மீது நடத்திய தாக்குதலின் போது திடீரெனக் கோட்டைக் கதவின் வளையத்தைப் பிடித்திழுத்துக் கதவைக் கழற்றியெறிந்தார் என வரலாறு நிறுவுகின்றது.[46] மக்கா கைப்பற்றப்பட்ட தினத்தன்று சிலைகளை உடைத்தெறியுமாறு நபி பெருமான் கட்டளையிட்டார்கள். 'ஹுபல்' என்ற சிலை மக்காவிலிருந்த சிலைகளிலேயே மிகப்பெரியது. அந்த ராட்சஷ சிலை கஃபாவின் உச்சியில் வைக்கப்பட்டிருந்தது. அலீ (அலை) நபிபெருமானின் தோள்களின் மேல் கால் வைத்தேறி கஃபாவின் உச்சியையடைந்து, ஹுபல் சிலையை இழுத்துக் கீழே தள்ளினார்கள்.[47]

கடுந்தவ மியற்றுவதிலும், இறைவணக்கத்திலும் கூட அலீ (அலை) க்கு நிகராக எவருமிருக்கவில்லை. தம்மீது அலீ காட்டிய கோபம் குறித்து ஒரு சிலர் நபி பெருமானிடம் முறையிட்டபோது அதற்கவர்கள், ''அலீ மீது பழி கூறவேண்டாம்: அவர் தெய்வீக மயக்கத்திலும் பரவசநிலையிலும் இருக்கிறார்,'' என மொழிந்தார்கள்.[48] நபித் தோழர்களில் ஒருவரான அபூ தர்தா ஒரு முறை மதீனாவின் ஈச்சந்தோப்பொன்றில் மரக்கட்டைபோன்று மரத்துப் போன நிலையில் ஹஸரத் அலீ கிடப்பதைக் கண்டார்.

உடனே அலீயின் இல்லமேகி அன்னாரின் உத்தம மனைவியும், நபி மகளாருமான ∴பாத்திமா நாயகியிடம் விடயத்தைக் கூறி அனுதாபந்தெரிவித்தபோது அதற்கு ∴பாத்திமா நாயகி '' என் கணவர் (அலீ) மரணித்துவிடவில்லை. இறையச்சத்தால் அவர் மயக்க முற்றுக்கிடக்கிறார். இந்நிலை அவருக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு'' எனக் கூறினார்கள்.

தாழ்வுற்ற மக்கள் மீது, ஏழைகள் மீது, பசி பட்டினியால் துன்புற்றோர் மீது அலீ (அலை) காட்டிய இரக்கம், கருணை, பற்றியெல்லாம் அநேக கதைகள் வழங்கி வருகின்றன. அலீ (அலை) தமது சம்பாத்தியம் அனைத்தையும் ஏழை எளியவர்க்காகச் செலவிட்டார்: மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். அலீ (அலை) விவசாயத்தைப் பெரிதும் விரும்பினார் கிணறுகளைத் தோண்டுவதிலும், மரங்களை நடுவதிலும் நிலங்களைப் பயிர்செய்வதிலும் அதிக நேரத்தைச் செலவிட்டார். ஆனால் தாம் பயிர் செய்த நிலங்களையும், நிர்மாணித்த கிணறுகளையும் ஏழைகளுக்கு தர்மச் சொத்தாக (வக்∴ப்) வழங்கினார். '' அலீயின் கொடை'' என அறியப்படும் அவர் வழங்கிய தர்மச் சொத்துகள் அவர் காலமாகும் தறுவாயில் இருபத்திநாலாயிரம் தங்க தினார்கள் வருவாயைத் தந்தன வென்பது குறிப்பிடத்தக்கது.[49]

இரண்டாம் இமாம்

இமாம் ஹசன் முஜ்தபா (அலை) இரண்டாம் இமாமாவார். அவரும் அவரது சகோதரர் இமாம் ஹுசைனும் அமீருல் மு∴மினின் அலீ (அலை) யினதும், நபி மகளார் ஹஸரத் ∴பாத்திமா (ரலி) வினதும் தனயர்களாவர். '' ஹசன் ஹுசைன் இருவரும் என் பிள்ளைகள்'' என்று பெருமானார் பலமுறை கூறியுள்ளார்கள். இதன் காரணமாக அலீ (அலை) தமது மற்றப் பிள்ளைகளைப் பார்த்து, ''நீங்கள் என் பிள்ளைகள், ஹசனும் ஹுசைனும் நபியின் பிள்ளைகள்'' என அடிக்கடி கூவறுவதுண்டு.[50]

இமாம் ஹசன் ஹிஜ்ரி 3ம் ஆண்டு மதீனாவில் பிறந்தார். சுமார் ஏழு வருடங்களுக்குமதிகமாக நபிகளாரின் வாழ்வில் பங்கு

கொண்டு அவர்களின் அன்புப் பராமரிப்பிலேயே வளர்ந்தார். ஹஸரத் ∴பாத்திமா (ரலி) காலமாகி மூன்று மாதங்களின் பின் சிலரின் கருத்துப்படி ஆறுமாதங்களின் பின், ஹசன் தம் உத்தம தந்தை அலீயின் நேரடி கண்காணிப்பிலானார். தம் தந்தையின் மறைவுக்குப்பின் இறை கட்டளைப்படி தம் தந்தையின் விருப்பத்திற்கேற்ப ஹசன் இமாமானார்.

சுமார் ஆறுமாதங்கள் கலிபாவாகவும் கடமையாற்றினார். இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் விவகாரங்களை நிர்வகித்து வந்தார். அச்சமயம், அலீயினதும், அலீ குடும்பத்தினதும் பரம எதிரியும் கிலாபத்தைக் கைப்பற்றும் ஆசையுடன் வருடக்கணக்காகப் போரிட்டு வந்தவருமான முஆவியா, முதலில் மூன்றாம் கலீபாவின் மரணத்துக்காகப்பழி வாங்கும் சாட்டோடும், இறுதியாகக் கிலாபத் மீது பகிரங்கமாகவே உரிமை கொண்டாடிக் கொண்டும் தன் சேனையை ஹசனின் கிலாபத் திருந்த ஈராக்கினுள் நுழையச் செய்தார். போர் மூண்டது. பெருந்தொகையான பணத்தைக் கை லஞ்சம் கொடுத்தும், பொய் வாக்குறுதிகள் வழங்கியும் இமாம் ஹசனின் படைத்தளபதிகளைப் படிப்படியாக இமாம் ஹசனுக் கெதிராகத் தூண்டிவிட்டார் முஆவியா. இதன் விளைவாக இராணுவம் இமாம் ஹசனுக் கெதிராகக் கலகஞ் செய்தது. இறுதியில், சமாதானஞ் செய்து கொண்டு கிலாபத்தை முஆவியாவிடம் ஒப்படைக்குமாறு இமாம் ஹஸன் நிர்ப்பந்திக்கப்பட்டார். முஆவியாவின் மரணத்துக்குப் பின் கிலாபத் மீண்டும் இமாம் ஹசனுக்கே வழங்கப்படுமென்றும் இமாமின் குடும்பத்தவரும், ஆதரவாளர்களும் பாதுகாக்கப்படுவர் என்றும் ஒப்பந்தமாகியது.[53]

முஆவியா இவ்விதம் கிலாபத்தைக் கைப்பற்றிக் கொண்டு ஈராக்கினுள் நுழைந்தார். சமாதான நிபந்தனைகள் செல்லுபடியாகாதென பகிரங்க உரையொன்றில் உத்தியோகப் பூர்வமாக அறிவித்தார்.[54] நபிகுடும்பத்தினர்க்கும் ஷீஆக்களுக்கும் எல்லா விதத்திலும் தொல்லைகளையுண்டு பண்ணினார். இமாம் ஹசன் (ரலி) தமது பத்தாண்டுகால இமாமத்தின் போது மிகுந்த கஷ்டங்களையும் கொடுமைகளையும் அனுபவித்தார். அவரது வீட்டிலேயே

அவருக்குப் பாதுகாப்பு இருக்கவில்லை. ஹிஜ்ரி 50ம்ஆண்டு முஆவியாவின் தூண்டுதலால் இமாம் ஹசன் (ரலி) தமதில்லத்தைச் சேர்ந்த ஒருவராலேயே நஞ்சூட்டப்பட்டு உயிர்த்தியாகஞ் செய்தார் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.[55]

மனிதப் பூரணத்துவத்தைப் பொறுத்தவரை அவர் தம் தந்தையை நினைவுபடுத்துபவராகவும் தம் உத்தமப் பாட்டனாரை ஞாபகப்படுத்தும் பூரண முன் மாதிரியாகவும் திகழ்ந்தார். நபிகளார் உயிருடனிருந்தபோது ஹசன், ஹுசைன் இருவரும் எப்போதும் அவர்களுடனேயே காணப்பட்டனர். ஹசன், ஹுசைன் இருவரையும் பெருமானார் தம் தோள்களில் சுமப்பது வழக்கம். ஹசன், ஹுசைன் பற்றிப் பின்வரும் நபி மொழியை சுன்னத் ஐமாஅத்தினரதும் ஷீஆக்களதும் ஆதார நூல்கள் அறிவிக்கின்றன: '' எனது இவ்விரு பிள்ளைகளும் எழுந்திருந்தாலும், அமர்ந்திருந்தாலும் இமாம்களாவர்.'' (கிலாபத்தின் புறவயமான பணிகளை மேற் கொண்டாலும் அல்லாவிடினும் என இது குறிப்புப் பொருள் உணர்த்துவதாக உள்ளது).[56] தமது உத்தமத் தந்தையையடுத்து ஹசன் இமாம் பதவியைப் பெறுவார் எனக்கூறும் திருநபியினதும் அலீயினதும் பாரம்பரியங்கள் பலவுண்டு.

மூன்றாம் இமாம்

இமாம் ஹுசைன் (ஸையித் அல்-ஷுஹதா- ''உயிர்த்தியாகிகளின் தலைவர்) அலீ, ∴பாத்திமா தம்பதிகளின் இரண்டாம் புதல்வராவார் . ஹிஜ்ரி 4ம் ஆண்டு பிறந்தார். தம் சகோதரர் இமாம் ஹசனின் உயிர்த்தியாகத்தின் பின் தெய்வகட்டளைப்படியும் தம் சகோதரரின் சாசனத்தின் படியும் ஹுசைன் இமாமானார்.[57]. இமாம் ஹுசைன் (அலை) பத்தாண்டுகள் இமாமாக விருந்தார். இதில் கடைசி ஆறுமாதங்களைத் தவிர எஞ்சிய முழுப்பகுதியும் முஆவியாவின் கிலாபத் ஆட்சிக்காலமாகும். ஒடுக்கு முறைக் கொடுமைகள் நிறைந்த கஷ்டமான நிலைமைகளில் இமாம் ஹுசைன் வாழ்ந்தார். இக்கால கட்டத்தில் மதச் சட்டங்கள் முக்கியத்துவ

மிழந்து காணப்பட்டன. உமையா அரசு முழுமையான ஆட்சியதிகாரம் பெற்றிருந்தது. இரண்டாவதாக, நபி குடும்பத்தினரினதும் ஷீஆக்களதும் வழி முறைகளிலிருந்து விலகிச் செல்லவும் அலியினதும் அவரது குடும்பத்தினதும் பெயர் மங்கச் செய்வதற்கும் முஆவியாவும் அவரின் உடந்தையாளர்களும் சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக, முஆவியா தனது மகன் யஸீதின் கிலாபத்துக்கான அடிப்படையை வலுவுறச் செய்வதில் கண்ணுங் கருத்துமாயிருந்தார். யஸீதின் நெறியற்ற ஒழுக்கக் கேடான போக்குகள் காரணமாகப் பெரும்பான்மை முஸ்லிம்கள் மத்தியில் யஸீதுக்கு எதிர்ப்பு நிலவியது. இந்த எதிர்ப்புகளை முறியடிப்பதற்காக முஆவியா கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இத்தகைய சூழலில் இமாம் ஹுசைன் முஆவியாவும் அவரது உதவியாளர்களும் விளைவித்த சகல விதமான இடையூறுகளையும், மனவியாகூலங்களையும் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்நிலையில் ஹிஜ்ரி 60ம் ஆண்டு நடுப்பகுதியில் முஆவியா காலமானதும் அவரது மகன் யஸீத், முஆவியாவின் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.[58]

விசுவாசப் பிரமாணம் (பைஅத்) செய்வது ஓர் அராபியப் பழக்கம். ஆட்சித் தலைமை வழங்குவது போன்ற விவகாரங்களில் இந்நடைமுறை காணப்பட்டது. ஆளப்படுவோரில் முக்கியமானவர்கள் தங்கள் அரசருக்கு அல்லது இளவரசருக்குக் கீழ்ப்படியச் சம்மதித்துக் கைகளைக் கொடுத்து விசுவாசப் பிரமாணஞ் செய்வர். இவ்வாறு ''பைஅத்'' விசுவாசப் பிரமாணம் செய்த பிறகு அதனை மீறுவது இழிவாகவும் கௌரவக் கேடாகவும் கருதப்பட்டது - உத்தியோகபூர்வமாகக் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த மொன்றை மீறுவது போன்ற குற்றச் செயலாகவே இது கருதப்பட்டது. நபிகளாரின் முன்மாதிரியைப் பின்பற்றி, பலாத்காரமாகவன்றிச் சுயாதீனமாகச் செய்யப்படும் விசுவாசப் பிரமாணம் அதிகார பூர்வ மானதாய் விளங்கியது.

முஆவியா மக்கள் மத்தியிலிருந்த முக்கிய பிரதானிகளை யஸீதுக்கு பைஅத் செய்யுமாறு கேட்டபோது, இமாம் ஹுஸைன் மீது இவ்வேண்டுகோளை விடுக்கவில்லை.[59] ஹுஸைன் பைஅத் செய்ய மறுத்தால் அது சம்பந்தமாய் மௌனஞ்சாதித்து விடுமாறு முஆவியா தமது இறுதி சாசனத்தில் யஸீதுக்குக் கூறியிருந்தார். அவ்வாறு நிர்ப்பந்தித்தால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கருத்தில் கொண்டே முஆவியா அவ்வாறு கூறியிருந்தார். அகம்பாவம் கொண்ட யஸீத், தந்தை மரணமானதுமே அவரது ஆலோசனையைப் புறக்கணித்து, இமாம் ஹுஸைனின் சிரசைக் கொய்து டமாஸ்கஸுக்கு அனுப்பிவைக்குமாறு மதீனாவின் கவர்னருக்கு ஆணை பிறப்பித்தார். [60]

மதீனாவின் கவர்னர் இக்கோரிக்கையை இமாம் ஹுஸைனிடம் அறிவித்ததும் அது பற்றி சிந்திப்பதற்காக அவகாசம் கேட்டுவிட்டு அன்றிரவே இமாம் ஹுஸைன் தம்குடும்பத்துடன் மக்காவை நோக்கிப் பயணமானார்கள். அல்லாஹ்வின் சரணாலயத்தில் இமாம் ஹுஸைன் அடைக்கலம் நாடினார்கள். அல்லாஹ்வின் சரணாலயம் இஸ்லாத்தில் உத்தியோக பூர்வமான பாதுகாப்பிடமாகும். இச்சம்பவம் ஹிஜ்ரி 60ம் ஆண்டு ரஜப்மாத இறுதியிலும் ஷஃபான் மாதத் தொடக்கத்திலும் நிகழ்ந்தது. சுமார் நான்கு மாதங்கள் இமாம் ஹுஸைன் மக்காவில் அடைக்கலம் புகுந்திருந்தார். இச் செய்தி இஸ்லாமிய உலகெங்கும் பரவியது. ஒரு புறம் முஆவியாவின் அசமத்துவமான ஆட்சி மீதும், அதற்குமேல் யஸீத் கலீபாவானதும் குறித்து மிகுந்த அதிருப்தியுமுற்ற அநேக மக்கள் இமாமுடன் தொடர்பு கொண்டு அவருக்குத் தம் ஆதரவைத்தெரிவித்தனர். மறுபுறம் விசேடமாக ஈராக்கிலிருந்து குறிப்பாகக் கூஃபாவிலிருந்து இமாம் ஹுஸைனுக்குக் கடிதங்கள் வந்து குவிந்த வண்ணமாகவிருந்தன. அநீதத்தையும் கொடுங்கோன்மையையும் எதிர்த்து ஆர்த்தெழுவதற்காக மக்களுக்குத் தலைமைதாங்க ஈராக் வருமாறு அக்கடிதங்களில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன. இத்தகைய தொரு நிலைமை யஸீதுக்கு அச்சுறுத்தலாக அமைவது இயற்கையே.

உலகெங்கிலுமிருந்து முஸ்லிம்கள் ஹஜ்கடமையை நிறைவேற்றுவதற்காகக் கூட்டங்கூட்டமாய் மக்கா செல்லும் புனித யாத்திரைக் காலம் வரும் வரை இமாம் ஹுஸைன் அங்கு தொடர்ந்து தங்கியிருந்தார். யஸீதின் ஆட்கள் சிலர், ஹஜ்ஜின்போது இமாம் ஹுஸைனைக் கொலைசெய்யும் நோக்குடன் இஹ்ராம் உடைகளுக்குள் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு ஹஜ்ஜாஜிகளாக மக்காவினுள் நுழைந்திருப்பது இமாமுக்குத் தெரியவந்து விடுகிறது.[61]

ஹஜ் கிரியைகளைச் சுருக்கிக் கொண்டு இமாம் ஹுஸைன் மக்காவை விட்டு வெளியேறத் தீர்மானித்தார். பெருந்திரளான மக்கள் முன்னிலையில் எழுந்து நின்று நிகழ்த்திய சுருக்கமான சிற்றுரையில் தாம் இராக்குக்குப் புறப்படும் சேதியை அறிவித்தார்.[62] இச்சிற்றுரையில் தாம் இன்னுயிர்த்தியாகம் புரியப்போவதையும் குறிப்பிட்டு, இலட்சியத்தையடைவதற்காக முஸ்லிம்களின் உதவியை வேண்டி, அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் புரிய முன்வருமாறு அழைப்பு விடுத்தார். மறுநாள் தம் குடும்பத்தினரோடும், தோழர்கள் கூட்டத்தோடும் ஈராக் நோக்கிப் புறப்பட்டார் இமாம் ஹுஸைன் (அலை).

யஸீதுக்கு விசுவாசப் பிரமாணஞ் செய்வதில்லை யென்று திடசங்கற்பம் பூண்டிருந்த இமாம் ஹுஸைன் தாம் கொலை செய்யப்படுவாரென்பதை நன்கறிந்திருந்தார். ஊழல்மலிந்த, ஆன்மிக வாழ்வு குன்றிய உமையா ஆட்சியின் பயங்கர இராணுவ வலிமையின் முன்னால் தாம் கொலையுண்பது தவிர்க்க முடியாததென அவர் நன்கறிந்திருந்தார். ஈராக் மக்களும் திடசித்த மில்லாதோராய்க் காணப்பட்டனர். மக்காவைச் சேர்ந்த சில முக்கிய பிரதானிகள் இமாம் ஈராக் செல்வதைத் தடுத்து அவரது பயங்கர முடிவையிட்டு எச்சரித்தனர். ஆளும் அநீதமும் கொடுங்கோன்மையும் வாய்ந்த ஓர் ஆரசாங்கத்துக்கு அங்கீகாரமளித்து விசுவாசப்பிரமாணஞ் செய்ய முடியாதென உறுதியாக மறுத்தார் இமாம். எப்பக்கம் திரும்பினும் எங்கு செல்லினும் தாம் கொல்லப்படுவது திண்ணம் என மேலும் அவர் கூறினார்.[63] அல்லாஹவின் மாளிகைக்கு அளிக்கப்படும்

மரியாதையைப் பாதுகாப்பதற்காகவே தாம் மக்காவை விட்டு வெளியேறுவதாகவும், தமது இரத்தம் அங்கே சிந்தப்படுவதன் மூலம் அம்மரியாதை கெடுவதைத் தாம் விரும்பவில்லை யென்றும் கூறினார்.

கூஃபாவுக்குச் செல்லும் வழியில் நகரையடைவதற்கு இன்னுஞ் சில நாட்களிருக்கையில், கூஃபாவில் இமாமின் பிரதிநிதியாக இருந்தவரையும், இமாமின் ஆதரவாளரான இன்னொரு முக்கியஸ்தவரையும் யஸீதின் ஆளொருவன் கொன்றுவிட்ட செய்தி இமாமை எட்டுகிறது. அவர்களின் கால்கள் கட்டப்பட்டு வீதிகளின் வழியே இழுத்துச் செல்லப் பட்டனர்.[64] நகரமும் அதன் சுற்றுப் புறமும் கடுமையான கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு எண்ணற்ற படைவீரர்களும் எதிரிகளும் இமாமை எதிர்கொள்ளக் காத்திருந்தனர். முன்னேறிச் சென்று மரணத்தை யெதிர் கொள்வதல்லால் வேறு வழியிருக்கவில்லை. முன்னேறிச் சென்று உயிர்த்தியாகம் புரியும் தம் தீர்மானத்தை இவ்விடத்தில் வைத்து உறுதியாக வெளியிட்டுவிட்டு இமாம் தம் பயணத்தைத் தொடர்ந்தார்.[65]

கூஃபாவிலிருந்து சுமார் எழுபது கிலோமீட்டர் தூரத்தில் கர்பலா என்ற பாலைவனத்தில் இமாமையும் அவரது கூட்டத்தையும் யஸீதின் இராணுவம் சுற்றி வளைத்தது. இவ்விடத்தில் அவர்கள் எட்டு நாட்கள் தங்கினர். அச்சமயம் எதிரியின் படை அதிகரித்து அவர்களை நெருங்கத் தொடங்கியது. இறுதியாக இமாமும் அவரது குடும்பத்தினரும் சிறுதொகையினரான தோழர்களும் முப்பதாயிரம் படைவீரர்களைக் கொண்ட இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டனர்.[66] இந்நாட்களில் இமாம் தமது நிலையை உசார்ப்படுத்திக் கொண்டு தோழர்களின் இறுதித் தேர்வை நடத்தினர். அன்றிரவு தம்தோழர்களையழைத்து மரணமும் உயிர்த்தியாகமும் தவிர வேறொன்றும் காத்திருக்க வில்லையென்றும், எதிரி தம்மீதே குறிவைத்திருப்பதால் மற்றோர் விரும்பினால் இரவோடிரவாகத் தப்பிச் செல்வதற்கு உரிமையளிப்பதாகக் கூறினார். அதன் பின் விளக்குகளை

அணைத்து விடுமாறுகட்டளையிட்டார். சொந்த நோக்கங்களுக்காக இமாமுடன் சேர்ந்து கொண்டோர் அநேகர் கலைந்து சென்றனர். சத்தியத்தை நேசித்த சில தோழர்கள் சுமார் நாற்பது பேர்களும் பனூ ஹாசிம்கள் சிலருமே எஞ்சியிருந்தனர்.[67]

எஞ்சியிருந்தவர்களை மீண்டும் ஒன்று கூட்டி அவர்களைப் பரீட்சித்துப்பார்த்தார். எதிரி தன்மீதே கண்வைத்திருக்கிறான். மற்றவர்கள் இருளைப் பயன்படுத்திக் கொண்டு தப்பிச் செல்ல முடியும் எனத் தம் தோழர்களையும், பனூ ஹாசிம்களான தம் உறவினர்களையும் பார்த்துக் கூறினார். ஆனால் இம்முறை விசுவாசமிக்க தோழர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பதில் கூறினர். இமாமைத் தலைவராகக் கொண்ட சத்திய வழியிலிருந்து விலகிச் செல்ல மாட்டோமென்றும் இமாமை ஒருபோதும் தனியாக விட்டுச் செல்லப் போவதில்லையென்றும் உறுதி மொழிந்தனர். தம்மால் வாளேந்தி நிற்க முடிந்தவரை, தமது கடைசிச் சொட்டு இரத்தமும் நிலத்தில் சிந்தப்படும்வரை இமாம் குடும்பத்தினரைப் பாதுகாத்து நிற்போம் என்றனர். 68

ஒன்பதாம் நாள் ''விசுவாசப் பிரமாணம் அல்லது போர்'' இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுக்குமாறு இமாமுக்கு எதிரியால் இறுதிச் சவால் விடுக்கப்பட்டது. இரவு பூராவும் வணக்கத்தில் ஈடுபடும் நோக்குடன் இமாம் அவகாசம் கேட்டார். மறுநாள் யுத்தத்தில் இறங்கத்தீர்மானித்திருந்தார்.[69]

61ம்/680ம் ஆண்டு முஹர்ரம் பத்தாம் நாள் இமாம் எதிரியின் முன்னால் தம் கூட்டத்தினரை அணியில் நிறுத்தினர். அவர்களின் தொகை தொன்னூறுக்கும் குறைவாகும். தோழர்கள் நாற்பதுபேர்,போரின் போது எதிரிப்படையிலிருந்து வந்து இமாமுடன் சேர்ந்து கொண்ட முப்பது சொச்சம் வீரர்கள், பனூஹாசிம்களான இமாமின் பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள் யாவரும் இதில் அடங்குவர். அன்று காலை தொடக்கம் இறுதி மூச்சு ஓயும் வரை போர் நடந்தது. இமாமும் இளம் ஹாசிம்களும், தோழர்களும் போரில் மடிந்து இன்னுயிர்த் தியாகிகளாயினர். கொலையுண்டோரில் இமாம் ஹசனின்

பதின்மூன்று வயதும் பதினொரு வயதும் எய்திய பிள்ளைகள் இருவரும் இமாம் ஹுஸைனின் ஐந்து வயதுக் குழந்தையொன்றும், பால் வாய் மாறாத பாலகனொன்றும் அடங்குவர்.

போர் முடிந்ததும் எதிரிப்படை இமாமின் அந்தப் புரத்தைச் சூறையாடி, கூடாரங்களையும் தீக்கிரையாக்கிற்று. உயிர்த்தியாகம் புரிந்தோரின் உடல்களைச் சின்னா பின்னமாக்கி யெறிந்தனர். அப்புறம் நிர்க்கதியான அந்தப்புரப் பெண்களையும், சிறுமிகளையும் உயிர்த்தியாகிகளின் சிரசுகளுடன் கூஃபாவுக்குக் கொண்டு சென்றனர்.[70] சிறையெடுத்துச் சென்ற கைதிகளில் ஆண்கள் மூவரிருந்தனர்: மிகவும் சுகவீனமுற்று அசைய முடியாதிருந்த இமாமின் புதல்வர் அலீ இப்னு ஹுஸைன் என்னும் இவரே பின்னர் நான்காவது இமாமானார். மற்றவர் அவரது புதல்வரான, பின்னர் ஐந்தாம் இமாமாக வந்த முஹம்மத் இப்னு அலி, மூன்றாமவர் ஹஸன் முதன்னா, இவர் இரண்டாம் இமாமின் புதல்வரும் இமாம் ஹுஸைனின் மருமகனாருமாவார். போரின் போது காயமுற்று இறந்தோர் மத்தியில் கிடந்தவர். குற்றுயிராய்க் கிடந்த அவரைக் கண்டவர்கள் படைத்தளகர்த்தர் ஒருவரின் தலையீடு காரணமாக, சிரங்கொய்யாமல் விட்டனர். கைதிகளுடன் அவரைக் கூஃபாவுக்கு எடுத்துச் சென்று,அங்கிருந்து டமாஸ்கஸுக்கு யஸீதிடம் கொண்டு சென்றனர்.

கர்பலாச்சம்பவம், நபி குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகளையும் பிள்ளைகளையும் சிறையெடுத்து ஊர் ஊராகக் கொண்டு சென்றமை, அச்சமயங்களில் கைதிகள் மத்தியிலிருந்த, அலியின் மகளாரான ஸெய்னப், நான்காம் இமாம் ஆகியயோர் நிகழ்த்திய வீரவுரைகள் யாவும் உமையாக்களுக்குப் பெரும் அபக்கியாதியை உண்டு பண்ணின. நபி குடும்பத்தினருக்கு இழைக்கப்பட்ட அவமானங்கள் வருடக்கணக்கில் முஆவியா செய்து வந்த பிரச்சாரத்தைத் தவிடு பொடியாக்கின. விவகாரம் முற்றிப் போய், தன் ஏஜண்டுகளுடைய செயல்களுக்குத் தான் பொறுப்பல்ல

வென்று கூறி அச்செயல்களைப் பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டிய நிலை யஸீதுக்கு ஏற்பட்டது. கர்பலாவின் தாக்கம் தாமதமாகியே ஏற்பட்டபோதிலும், உமையா ஆட்சியைத் தூக்கியெறிவதில் கர்பலா சம்பவமே பிரதான காரணியாய் விளங்கிற்று. அது ஷீஆயிஸத்தின் வேர்களையும் வலுப்பெறச் செய்தது. கர்பலாவின் உடனடி விளைவாக கலகங்கள் வெடித்துக் கிளம்பின. கடும் போர்கள் மூண்டன. இந்நிலை பன்னிரண்டாண்டுகள் நீடித்தது. இமாமின் மரணத்துக்குக் காரணமாகயிருந்தோர் ஒருவரேனும் பழிக்குப் பழியிலிருந்தும், தண்டனையிலிருந்தும் தப்பமுடியவில்லை.

இமாம் ஹுஸைனுடையவும், யஸீதுடையவும் வரலாற்றை, அன்றைய நிலைமையை, இஸ்லாமிய வரலாற்றின் அவ்வத்தியாயத்தை நன்காராய்வோர் எவரும், கொலை செய்யப்படுவதைத் தவிர வேறு வழி இமாமின் முன்னால் இருக்கவில்லையென்பதை ஐயமறத் தெளிவர். யஸீதுக்கு விசுவாசப் பிரமாணஞ் செய்வது இஸ்லாத்தையே அவமதிப்பதாக முடிந்திருக்கும். ஓர் இமாமைப் பொறுத்தவரை அது சாத்தியப்பட்டிராது. ஏனெனில் யஸீத் இஸ்லாத்தையும், அதன் சட்டங்களையும் மதித்து நடக்கவில்லையென்பது ஒருபுறத்திருக்க மத அடிப்படைகளையும்,சட்டங்களையும் பகிரங்கமாகவே காலடியில் போட்டு மிதித்தவன். அவனுக்கு முன்பிருந்தோர் மதச் சட்டங்களை யெதிர்த்தபோதும், மதப் போர்வையிலேயே அதனைச் செய்தனர். சம்பிரதாய மரியாதையை மதத்திற்கு வழங்கினர். நபிபெருமானதும், மக்கள் நம்பிய மற்றும் மதப்பெரியார்களதும் தோழர்களாயிருப்பதில் பெருமையடித்துக் கொண்டனர், ஹசன் ஹுஸைன் சகோதரர் இருவரும் இருவேறு போக்கினைக் கொண்டவர்கள், ஒருவர் சமாதானப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். மற்றவர் யுத்தப் பாதையை மேற்கொண்டார், ஒருவர் தம்மிடம் நாற்பதினாயிரம் பேர் கொண்ட படையிருந்தும் முஆவியாவுடன் சமாதானஞ் செய்து கொண்டார் மற்றவர் நாற்பது பேர் கொண்ட படையை வைத்துக் கொண்டு யஸீதுடன் போருக்குச் சென்றார் என்றெல்லாம் விளக்கங்கள் கூறும் ஒரு சிலரின் வாதம் பொய்யானதென்பது இதிலிருந்து முடிவாகின்றது. யஸீதுக்கு

ஒரு நாளுக்கேனும் விசுவாசப்பிரமானஞ் செய்ய மறுத்த இதே இமாம் ஹுஸைன், முஆவியாவின் ஆட்சியில் பத்தாண்டு காலம் தம் சகோதரரைப் போலவே, மூஆவியாவை எதிர்க்காமல் கடினமான சோதனைகளுக்கும், துன்பங்களுக்கும் முகங்கொடுத்துச் சகிப்புத்தன்மையுடன் வாழ்ந்தவர்தான் என்பதை நாம் காணமுடியும்.

உண்மையில் இமாம் ஹசனும் இமாம் ஹுஸைனும் முஆவியாவுடன் பொருதியிருந்தால் இஸ்லாத்துக்கு அவர்களால் எத்தகை பயனுமின்றியே அவர்கள் மடிந்திருப்பர். நீதியானதுபோல் தென்பட்ட முஆவியாவின் கொள்கையின் முன் இவர்களது மரணம் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தியிராது. ஏனெனில் முஆவியா ராஜதந்திரம் வாய்ந்த அரசியல் வாதியாய் விளங்கியவர். நபித்தோழர் என்றும், ''வெளிப்பாட்டை எழுதியவர்'' என்றும் ''விசுவாசியின் மாமனார்'' என்றும் தன்னைக் கூறிக்கொண்டவர்.தன்னுடைய ஆட்சிக்கு மதச்சாயம் பூச எல்லா உபாயங்களையும் கையாண்டவர். மேலும் தன்னுடைய நோக்கங்களுக்கேற்பவே காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் திறமை படைத்த அவர் இரு இமாம்களையும் அவர்களின் ஆட்கள் மூலமாகவே கொலைபுரியச் செய்து விட்டு அப்புறம் துக்கம் கொண்டாடி அவர்களது இரத்தத்துக்குப் பழிக்குப் பழி வாங்குவதாகப் பாவனை செய்திருப்பார் - மூன்றாம் கலீபா கொலை செய்யப்பட்டதற்காய் பழிக்குப் பழி வாங்குவதாய்க் கூறயது போல.

நான்காம் இமாம்

இமாம் ஸஜ்ஜாத் (அலீ இப்னு ஹுஸைன்: ஸைனுல் ஆபிதீன் என்றும் ஸஜ்ஜாத் என்றும் அழைக்கப்பட்டவர்) மூன்றாம் இமாமினதும் அவரது மனைவியும்,பெண்களில் அரசியுமான ஈரான் மன்னர் யஸ்திகர்தின் மகளினதும் புதல்வராவார். இமாம் ஹுஸைனின் புதல்வர்களில் இவர் ஒருவரே உயிர்தப்பியவர். அவரது ஏனைய மூன்று சகோதரர்களான, இருபத்தைந்து வயதினரான அலீ அக்பரும், ஐந்து வயதினரான ஜா:.பரும்,பால் வாய்மாறா பாலகனான அலீ அஸ்கர் (அல்லது அப்துல்லாஹ்)

என்பவரும். கர்பலாவில் மடிந்து உயிர்த்தியாகிகளாயினர்.[71] கர்பலாவில் உயிர்த்தியாகத்தில் முடிந்த தம் தந்தையின் பயணத்தின் போது இமாமும் கூடவேயிருந்தாரெனினும் அவரது கடுமையான சுகவீனங் காரணமாக ஆயுதமேந்திப் போராட முடியாத நிலையில் புனித யுத்தத்தில் கலந்து கொள்ளவும் உயிர்த்தியாகஞ் செய்யவும் அவரால் முடியாது போயிற்று. எனவே பெண்களுடன் அவர் டமாஸ்கஸுக்கு அனுப்பப்பட்டார். சிறிது காலம் சிறைவாசத்தின் பின் அவர் மரியாதையுடன் மதீனா அனுப்பி வைக்கப்பட்டார். மக்கள் அபிப்பிராயத்துக்கு விட்டுக் கொடுப்பதற்காகவே யஸீத் இவ்வாறு செய்ய வேண்டி வந்தது. ஆனால் இரண்டாம் முறையாக, உமையாக்கலீபா அப்துல் மாலிக்கின் கட்டளையால், சங்கிலியால் கட்டப்பட்டு மதினாவிலிருந்து டமாஸ்கஸ் கொண்டு செல்லப்பட்டுத் திரும்பவும் மதீனாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.[72]

நான்காம் இமாம் மதீனா திரும்பியதும், பொதுவாழ்விலிருந்து முழுமையாக ஒதுங்கினார். அந்நியர் புகாமல் தம் வீட்டுக் கதவை மூடி வணக்கத்தில் நேரத்தைச் செலவிட்டார். ஷீஆக்களில் சான்றோரான அபூ ஹம்சா துமாலி, அபூ சாலித் காபுலி போன்றோருடன் மட்டுமே தொடர்புகளை வைத்துக் கொண்டார். இமாமிடமிருந்து கற்றுக் கொண்ட மதஞானங்களை இச்சான்றோர்கள் ஷீஆக்கள் மத்தியில் பரப்பினர். இவ்வாறு ஷிஆயிஸம் வளர்ச்சி யெய்தி ஐந்தாம் இமாமின் இமாமத்தின் போது அதன் தாக்கத்தைக் காட்டியது. ''ஸாஹிஃபா ஸஜ்ஜாதியாஹ்'' என்பது இவ்விமாம் எழுதிய நூல்களி லொன்றாகும். மிகவுன்னதமான தெய்வீக அறிவு சம்பந்தமான ஐம்பத்தேழு பிரார்த்தனைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. ''நபி குடும்பத்தினரின் கீர்த்தனம்'' என இது அறியப்படும்.

நான்காம் இமாம் முப்பத்தைந் தாண்டு கால இமாமத்தின் பின் 95/712ம் ஆண்டு மறைந்தார். சில ஷீஆ பாரம்பரியங்களின்படி, உமையாக் கலீபா ஹிஷாமின் தூண்டுதலால் வலீத் இப்னு மாலிக் என்பவனால் இவர் நஞ்சூட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஐந்தாம் இமாம்

இமாம் முஹம்மத் இப்னு அலீ பாக்கிர் (பாக்கிர்) எனுஞ் சொல் அறுத்துத்துண்டிப்பவர் என்று பொருள்படும்: இது அவருக்கு நபிகளார் இட்டபெயராகும்.)[74] நான்காம் இமாமின் புதல்வராவார். இவர் 67/675ல் பிறந்தார். தமது தந்தைக்குப்பின்,தெய்வீகக் கட்டளையாலும், தமக்கு முன்னால் சென்றோரின் ஆணைப்படியும், இவர் இமாமானார் . 114/732ல் இவர் காலமானார். சில ஷீஆ பாரம்பரியங்களின் படி உமையாக்கலீபா ஹிஷாமின் மருமகனான இப்ராஹீம் இப்னு வலீத் இப்னு அப்துல்லாஹ் என்பவனால் இவர் நஞ்சூட்டப்பட்டார்.

ஐந்தாம் இமாமின் இமாமத்தின் போது, உமையாக்களின் அநீதங்கள் காரணமாய், இஸ்லாமிய உலகின் சில பகுதிகளில் தினந்தோறும் கலகங்களும் சண்டைகளும் மூண்டவண்ணமாக விருந்தன. மேலும் உமையாக் குடும்பத்தினுள்ளேயே தகராறுகள் தலைதூக்கின. இப்பிரச்னைகளில் மூழ்கிப் போயிருந்த உமையாக் கலீபா, நபி குடும்பத்தினரை ஓரளவுக்கு அவர்கள் பாட்டில் விட்டுவிட்டார். மறுபுறம் கர்பலாவின் துயரச் சம்பவமும், நபி குடும்பத்தினர் அனுபவித்த ஒடுக்கு முறைகளும் அவற்றின் திரண்ட உருவமாய்த் திகழ்ந்து இமாமின் பால் பெரும்பாலான முஸ்லிம்களை ஈர்த்தன.[75] இதன் காரணமாக மக்கள் குறிப்பாக ஷீஆக்கள் பெருந்தொகையினராய் இமாமைக் காண்பதற்காக மதீனா சென்றனர். இஸ்லாம் பற்றிய உண்மைகளையும் நபிகுடும்பதினரிடமிருந்த ஞானத்தையும் பரப்புவதற்கு முந்திய இமாம்களுக்குக் கிடைக்காத சந்தர்ப்பம் இதனால் இவருக்கு கிடைத்தது. ஐந்தாம் இமாமிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள எண்ணற்ற பாரம்பரியங்களும், இமாமால் பயிற்றப்பட்ட பெருந்தொகையான சான்றோர்களும் ஷீஆ அறிஞர்களும் இதற்குச்சான்றாகும். பிரபல இஸ்லாமிய அறிஞர்களின் சரிதை நூல்களில் இவர்களது பெயர்கள் காணப்படுகின்றது.[76]

ஆறாவது இமாம்

ஐந்தாம் இமாமின் தனயரான இமாம் ஜா∴பர் இப்னு முஹம்மத் 83/702ல் தோன்றி 148/765ல் மறைந்தார். ஷீஆ பாரம்பரியப்படி, அப்பாஸியக் கலீபா மன்சூரின் சூழ்ச்சி காரணமாக நஞ்சூட்டப்பட்டு உயிர்த்தியாகியானார். தம் தந்தையின் மறைவுக்குப்பின் தெய்வ கட்டளைப்படியும், தமக்கு முன்சென்றோரின் ஆணைப்படியும் இவர் இமாமானார்.

ஆறாம் இமாமின் இமாமத்தின்போது மதபோதனைகளைப் பரப்புவதற்கான பெருஞ்சாத்தியப்பாடும் அநுகூலமான சூழ்நிலையும் காணப்பட்டது. இஸ்லாமிய நாடுகளில் கலகங்கள் தோன்றி, விசேடமாக முஸ்வத்தாஹ் இனத்தாரின் எழுச்சியேற்பட்டு, கடும் போர்கள் காரணமாய் உமையாக்கள் வீழ்ச்சியுற்று அழிந்ததன் விளைவாய் ஏற்பட்ட நிலைமை இது. ஐந்தாம் இமாம் தமது இமாமத்தின் இருபதாண்டுகளாக இஸ்லாத்தின் உண்மையான போதனைகளையும், நபிகுடும்பத்தினரிடமிருந்த ஞானத்தையும் பரப்பியதன் மூலம் உண்டாக்கிய சாதகமான நிலைமை காரணமாகவும் ஷீஆ போதனைகளுக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தன.

இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு ஆறாம் இமாம் தமது இமாமத்தின் அந்திமக் காலம் வரை மத ஞானங்களைப்பரப்புவதில் முழு மூச்சுடன் செயல்பட்டார். உமையாக்களின் ஆட்சி முடிவும், அப்பாஸியக் கலீபாக்களின் தோற்றமும் இவரது இமாமத்தின் போதேற்பட்ட சமகால நிகழ்வாகும். அறிவுத்துறைகளிலும் அறிவிக்கப்பட்ட ஞானங்களிலும் ஸராரஹ் முஹம்மத் இப்னு முஸ்லிம், மூ∴மின் தாக், ஹிஷாம் இப்னு ஹக்கம், அபான் இப்னு தக்லிப், ஹிஷாம் இப்னு ஸாலிம், ஹுரைஸ், ஹிஷாம் கல்வி நஸ்ஸாபஹ், இரசவாதவியலறிஞர் ஜாபிர் இப்னு ஹய்யான் முதலிய பல அறிஞர்களுக்கு இவர் கல்வி போதித்தார். சு∴ப்யான் தவ்ரி, ஹன∴பி மத்ஹப் ஸ்தாபகரான அபூ ஹனி∴பா, காதி ஸுனி, காதி அபுல் பஹ்தரி போன்ற சில முக்கிய ஸுன்னி அறிஞர்களும் மற்றும் பலரும் இமாமின் மாணவர்களாயிருக்கும் பாக்கியம்

பெற்றோராவர். இவரது போதனை வகுப்புகள் ஹதீஸ்கலையிலும், மற்றும் அறிவுத்துறைகளிலும் நாலாயிரம் அறிஞர்களை உருவாக்கின வென்று கூறப்படுகின்றது.[77] ஐந்தாம் ஆறாம் இமாம்களிடமிருந்து பாதுகாக்கப்பட்டுள்ள பாரம்பரியங்கள் திரு நபியிடமிருந்தும் ஏனைய பத்து இமாம்களிடமிருந்தும் பதிவாகியுள்ள ஹதீஸ்களின் தொகையை விட அதிகமாகும்.

இமாமின் அந்திம காலத்தில் அவர் மீது மிகுந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ஷீஆக்களான நபி சந்ததியினர் மீது சித்திரவதைகளையும் இரக்கமற்ற கொலைகளையும் கட்டவிழ்த்து விட்ட அப்பாஸியக் கலீபா மன்சூரின் அட்டகாசங்கள், முன்பு உமையாக்கள் புரிந்த கொடுமைகளையும் மிஞ்சின. அவரது ஆணையின் படி அவர்கள் சிறையில் தள்ளப்பட்டு சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். சிலர் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இன்னுஞ்சிலர் உயிருடன் புதைக்கப்பட்டனர் அல்லது சுவர்களில் வைத்து உயிருடன் சமாதிக்கப்பட்டனர்.

உமையாக்கலீபா ஹிஷாம் இமாமைக் கைதுசெய்து டமாஸ்கஸ் கொண்டுவருமாறு கட்டளையிட்டார். பின்னர் அப்பாஸியக் கலீபா ஸ.ஃப்பஹ் என்பவரால் கைது செய்யப்பட்டு ஈராக் கொண்டு வரப்பட்டார். இறுதியாக மன்சூர் அவரைக் கைது செய்து ஸம்ராஹ் என்ற இடத்துக்குக் கொணருமாறு செய்தார். இங்கு இமாம் மிகுந்த கண்காணிப்பில் வைக்கப்பட்டு அரக்கத்தனமாக நடத்தப்பட்டார். இமாமைக் கொல்வதற்கும் மன்சூர் பல முறை யோசித்ததுண்டு.[78] பின்பு இமாம் மதீனா செல்ல அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் எஞ்சிய வாழ்நாளை தலைமறைவாகக் கழித்தார். இறுதியில் மன்சூரின் சூழ்ச்சியால் இமாம் நஞ்சூட்டப்பட்டு உயிர்த்தியாகம் புரிந்தார்.[79]

இமாமின் உயிர்த்தியாகத்தைக் கேள்வியுற்றதும் கலீபா மன்சூர் மதீனா கவர்னருக்கு, துக்கம் தெரிவிப்பது போல் இமாமின் வீட்டுக்குச் சென்று இமாமின் மரண சாசனத்தைக் கேட்டுப் படித்துப் பார்த்துவிட்டு இமாம் யாரை வாரிசாகத்

தெரிவு செய்திருக்கிறாரோ அவரை அந்த இடத்திலேயே சிரச்சேதம் செய்யுமாறு கடிதமூலம் கட்டளையிட்டார். அக்கட்டளைக் கிணங்க மதீனா கவர்னர் இமாமின் மரணசாசனத்தைப்படித்துப் பார்த்தபோது அதில் தமது மரணசாசனத்தை நிறைவேற்றும் படி இமாம் ஒருவருக்குப் பதிலாக நான்கு பேர்களைக் குறிப்பிட்டிருக்கக் கண்டார். கலீபாவின் பெயரும், மதீனா கவர்னரின் பெயரும் கூட அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றைய இருவர் இமாமின் மூத்த புதல்வர் அப்துல்லாஹ் அஃப்தாஹ் என்பாரும், இளையவர் மூசாவும் ஆவர். இவ்விதம் மன்சூரின் திட்டம் தோல்வியுற்றது.[80]

ஏழாவது இமாம்

ஆறாம் இமாமின் மகனார் இமாம் மூசா ஜாஃபர் காஸிம் 128/744ல் பிறந்து 183/799ல் சிறையில் நஞ்சூட்டப்பட்டுக் கொலையுண்டு உயிர்த்தியாகியானார்.[81] இவர் தமது தந்தையின் மறைவுக்குப் பின் தெய்வ கட்டளையாலும் தம் முன்னோரின் ஆணையாலும் இமாமானார். ஏழாவது இமாம், அப்பாஸிக் கலீபாக்கள் மன்சூர், ஹாதி, மஹ்தி, ஹாரூன் முதலியோரின் சமகாலத்தவராவார். இவர் மிகவும் கஷ்டமான காலங்களில் தலைமறைவாக வாழ்ந்தவர். இறுதியில் ஹாரூன் ஹஜ் யாத்திரை சென்ற போது மதினாவில் வைத்து நபியின் பள்ளிவாசலில் இமாம் தொழுது கொண்டிருந்தபோது அவரைக் கைது செய்யும் படி செய்தார். இமாம் கைது செய்யப்பட்டு விலங்கு மாட்டப்பட்டு மதீனாவிலிருந்து பஸ்ராவுக்கும், பஸ்ராவிலிருந்து பக்தாதுக்கும் கொண்டு செல்லப்பட்டார். பக்தாதில் அவர் வருடக்கணக்கில் சிறைக்குச் சிறை மாற்றப்பட்டு இறுதியில் பக்தாதில் உள்ள ஸிந்தி இப்னு ஷஹாக் என்ற சிறைச்சாலையில் வைத்து நஞ்சூட்டப்பட்டுக் கொலையுண்டார்.[82] பின்னர் காஸிமய்ன் நகரில் காணப்படும் அடக்கஸ்தலத்தில் அவர் அடக்கஞ் செய்யப்பட்டார்.

எட்டாவது இமாம்

இமாம் ரிழா (அலீ இப்னு மூசா) ஏழாம் இமாமின்

புதல்வராவார். இவரது தோற்றம் 148/765. மறைவு 203/817.[83] இவர் தமது தந்தையின் மறைவுக்குப்பின், தெய்வ கட்டளைப்படியும், தம்முன்னோர்களின் ஆணைப்படியும் இமாமானார் . இவரது இமாமத் கலீபா ஹாருன் - அல்-ரஷீதுடையவும், அவரது புதல்வர்கள் அமீன்,மாமூன் முதலியோருடையவும் சமகாலத்ததாகும். தந்தை ஹாரூனின் மரணத்தின் பின் மாமூனுக்கும் அவர் சகோதரர் அமீனுக்குமிடையில் மோதலேற்பட்டு அது போராக மாறிற்று. இறுதியில் அமீன் கொலை செய்யப்பட்டபின் மாமூன் கலீபாவானார்.[84] அன்று வரை ஷீஆக்கள் மீது அப்பாஸியக் கிலாபத்தின் கொள்கை கொடுமையானதாகவும் ஒடுக்கு முறைவாய்ந்ததாகவுமிருந்தது. எப்போதாவது அலீயின் ஆதரவாளர்கள் (அலவிகள்) கிளர்ச்சி செய்து கடும் போர்களைத் தூண்டிவிடும் போது. இதனால் கிலாபத்துக்குக் கஷ்ட மேற்பட்டுவந்தது.

இக்கலகக்காரர்களுடன் ஷீஆ இமாம்கள் ஒத்துழைக்க வில்லை. அவர்களின் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கினர். அந்நாளில் மக்கள் தொகையில் கணிசமான பகுதியினராயமைந்த ஷீஆக்கள் இமாம்களை மதத்தலை வர்களாய்ப் போற்றினர். அவர்களுக்குக் கீழ்ப்படிவதைக் கடமையாகக் கருதினர். திருநபியின் உண்மையான கலீபாக்கள் இமாம்களென்றே நம்பினர். இமாம்களின் புனிதமான அதிகாரத்துக்கும் கிலாபத்துக்கும் வெகுதூரமென நினைத்தனர். கிலாபத் பெரும்பாலும் பாரசீக அரசர்களதும், ரோமசக்கரவர்த்திகளதும் ராஜதர்பார்போல் மாறியிருந்தது. மதக் கொள்கைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதற்குப்பதிலாக லௌகீக ஆட்சியில் அதிக ஆசை கொண்ட கூட்டத்தினரின் கையில் கிலாபத் இருந்தது. இந்நிலைமை தொடர்ந்து நீடிப்பது கிலாபத் அமைப்புக்கே ஆபத்தானதாகவும், பெரும் அச்சுறுத்தலாகவும் காணப்பட்டது.

மாமூன் தனக்கு முந்திய அப்பாஸிய ஆட்சியாளர்களது எழுபத்திரண்டாண்டு காலக் கொள்கையால் தீர்க்க முடியாது

போன இக்கஷ்டங்களுக்குப் புதிய தீர்வு காண முனைந்தார். இதன் காரணமாக எட்டாவது இமாமைத் தனது வாரிசாகத் தெரிவு செய்தார். இவ்விதமாக அவர் இரு கஷ்டங்களைச் சமாளிக்க விரும்பினார் : நபியின் சந்ததியினரை அரசாங்கத்துடன் சம்பந்தப்படுத்துவதால் அவர்கள் அரசாங்கத்துக் கெதிராகக் கலகஞ் செய்வதைத்தடுப்பது. மற்றது இமாம் மீது மக்கள் கொண்டிருந்த ஆன்மீக நம்பிக்கையையும், உள்ளார்ந்த தொடர்பையும் அவர்கள் இழக்கச் செய்வது. உலக விவகாரங்களிலும் கிலாபத் அரசியலிலும் இமாம்களை இழுத்துவிடுவதால் இதனைச் சாதிக்க முடியுமென நினைத்தார் கலீபா மாமூன். ஷிஆக்களோ இப்படியான உலக விவகாரங்களையும் அரசியலையும் தீயதாகவும் தூய்மையற்ற தாகவுமே எப்பொழுதும் கருதிவந்தனர். இவ்வாறு செய்வதால் அவர்களது மத அமைப்பு நொறுங்கிவிழுவதோடு அவர்களால் கிலாபத்துக் கேற்படக்கூடிய அபாயம் நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. அதன் பின்னர் இமாமை அப்புறப் படுத்துவது அப்பாஸியர்களுக்குக் கஷ்டமாயிருந்திராது.[85]

இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இமாமை மதீனாவிலிருந்து மர்வு எனும் இடத்துக்கு வருமாறு அழைத்தார் மாமூன். இமாம் அங்கு வந்து சேர்ந்ததும் மாமூன் அவரிடம் முதலில் கிலாபத்தையும் அப்புறம் கிலாபத்தின் வாரிசுரிமை யையும் ஏற்றுக் கொள்ளுமாறு கூறினார். இமாம் அப்பிரேரணையை விநயமாக மறுத்துவிட்டார். ஆனால் இறுதியில் அவர் அரசியல் விவசாரங்களிலும், அரசாங்க அதிபர்களின் நியமனம், பதவி நீக்கம் முதலியவற்றிலும் தலையிடுவதில்லையென்ற நிபந்தனையின் பேரில் வாரிசுரிமையை ஏற்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்.[86]

இது 200/814ல் நிகழ்ந்தது. ஷீஆயிஸம் வேகமாக வளர்வதையும், இமாமின் மேல் மக்களுக்கிருந்த பற்றுதல் அதிகரிப்பதையும் மக்களாலும், இராணுவத்தினராலும், அரசாங்க அதிபர்களாலும் இமாமுக்கு பிரமாண்டமான விருந்தோம்பல் நிகழ்ந்ததையும் கண்ணுற்ற மாமூன் சீக்கிரமே

தம் தவறையுணர்ந்தார். இதற்குப் பரிகாரம் காண முனைந்த மாமூன், இமாம் நஞ்சூட்டப்பட்டு இறக்கச் செய்தார். மரணமானதும் ஈரானிலுள்ள, இப்போது மஷ்ஹத் என அழைக்கப்படும் தூஸ் என்ற இடத்தில் அடக்கஞ் செய்யப்பட்டார்.

அறிவியல் நூல்கள் அரபு மொழியில் பெயர்க்கப்படுவதில் மாமூன் மிகுந்த ஆர்வம் காட்டினார். அவர் ஏற்பாடு செய்த கூட்டங்களில் பல்வேறு மதங்களையும், மதப் பிரிவுகளையும் சேர்ந்த அறிஞர்கள் விவாதங்களில் ஈடுபட்டனர். எட்டாவது இமாமும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு பிறமத அறிஞர்களுடன் கருத்தாடல்கள் புரிந்தார். இவ்விவாதங்கள் பல ஷிஆ ஹதீஸ் தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளன.[87]

ஒன்பதாவது இமாம்

இமாம் முஹம்மத் (இப்னு அலீ) தாக்கி (சில சமயங்களில் ஜவாத் என்றும் இப்னு அல்-ரிழா என்றும் அழைக்கப்படுபவர்) எட்டாவது இமாமின் புதல்வராவார். 195/809ல் மதினாவில் பிறந்தார். ஷிஆ பாரம்பரியங்களில் காணப்படுவதுபோல், அப்பாஸியக் கலீபா முஃதஸீமின் தூண்டுதலினால் மாமூனின் மகளான தம் சொந்த மனைவியால் நஞ்சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் ஒன்பதாவது இமாம். காஸிமய்ன் என்ற இடத்தில் தம் பாட்டனாரின் ஸியாரத்துக்கருகில் அடக்கஞ் செய்யப்பட்டார். தம் தந்தையின் மரணத்தின் பின், தெய்வ கட்டளைப்படியும், தம்முன்னோரின் ஆணைபடியும் இவர் இமாமானார். தம் தந்தையாரின் மரணத்தின் போது இவர் மதீனாவிலிருந்தார். கிலாபத் தலைநகராகவிருந்த பக்தாதுக்கு மாமூன் அவரை அழைத்தார். வெளிப்படையாக மாமூன் அவர் மீது அதிக அன்பு செலுத்துபவர் போல் காட்டிக் கொண்டார். தன் மகளையும் மண முடித்துக் கொடுத்தார். உண்மையில் இவ்விதமாக இமாம் மீது வெளியிலும் வீட்டிலும் மிகுந்த கண்காணிப்பு வைத்திருக்க விரும்பினார் கலீபா. இமாம் சிறிது காலம் பக்தாதில் கழித்துவிட்டு, அப்புறம் மாமூனின் அனுமதியுடன் மதீனாசென்று மாமூன் காலமாகும் வரை அங்கேயே தங்கிவிட்டார். முஃதஸீம் கலீபாவானதும் இமாமை

திரும்பவும் பக்தாதுக்கு அழைப்பித்தெடுத்து, முன்னர் குறிப்பிட்டதுபோல் இமாமின் மனைவி மூலமாகவே அவரை நஞ்சூட்டிக் கொன்றார்.[88]

பத்தாவது இமாம்

இமாம் அலீ இப்னு முஹம்மத் நாக்கி (சில சமயங்களில் ஹாதி என்றும் அழைக்கப்பட்டவர்) ஒன்பதாவது இமாமின் புத்திரராவார். இவர் 212/827ல் மதீனாவில் பிறந்தார். ஷீஆ பாரம்பரியங்ளில் காணப்படுவதுபோல், 254/868ல் அப்பாஸியக் கலீபா மு:.தாஸினால் நஞ்சூட்டப்பட்டுக் கொலையுண்டார்.[89]

பத்தாவது இமாம் தம் வாழ்நாளில், மாமூன், மு:.தஸீம் வாத்திக், முத்தவக்கில், முன்தஸிர், முஸ்தாய்ன், மு:.தாஸ் ஆகிய ஏழு அப்பாஸியக் கலீபாக்களின் சமகாலத்தவராய் விளங்கினார். 220/835ல் மு:.தஸீமின் ஆட்சியின் போதே இவரது தந்தை பக்தாதில் நஞ்சூட்டிக் கொலைசெய்யப்பட்டார். அச்சமயம் அலீ இப்னு முஹம்மத் நாக்கி மதீனாவிலிருந்தார். அங்கு தெய்வக் கட்டளையாலும் தமக்கு முந்திய இமாம்களின் ஆணையாலும் இவர் இமாமானார்.

முத்தவக்கிலின் ஆட்சிக்காலம் வரை அவர் மதினாவில் தங்கியிருந்து மதஞானங்களைப் போதித்துவந்தார். 243/857ல் கொண்டு வரப்பட்ட சில பொய்க் குற்றச் சாட்டுகள் காரணமாக இமாமை மதீனாவிலிருந்து அப்போதைய தலைநகரான ஸமர்ராஹ்வுக்கு அழைக்குமாறு தனது அரசாங்க அதிகாரியொருவருக்குக் கலீபா கட்டளையிட்டார். அன்பும் இரக்கமும் சொட்டும் கடிதமொன்றை தாமே இமாமுக்கெழுதி சந்திப்பதற்கு பக்தாத் வருமாறு அழைத்தார்.[90] இமாம் ஸமர்ராஹ் வந்தடைந்ததும் வெளிக்கு இங்கிதமாகவும் கௌரவமாகவும் நடத்தப்பட்டார். அதேவேளை இமாமுக்குக் கஷ்டங்களை யுண்டுபண்ணி அபகியாதி ஏற்படுத்துவதற்காக பிரயத்தனங்களை மேற்கொண்டார். இமாமைக் கொலை செய்யும் அல்லது அவமானப்படுத்தும் நோக்குடன் தம் முன் பலமுறை பிரசன்னமாகும் படிச் செய்தார். இமாமின் இல்லத்தைப் பல முறைகள் சோதனையிடச் செய்தார்.

நபி குடும்பததினர் மீது வைரம் பாராட்டுவதில் அப்பாஸியக் கலிபாக்கள் மத்தியில் முத்தவக்கிலுக்கு நிகரானோர் எவருமில்லை. விசேடமாக அலியின் மீது அவர் மிகுந்த குரோதம் பாராட்டி வெளிப்படையாவே அலீயை சபித்தார். ஆடம்பரமான விருந்து களியாட்டங்களில் அலீயைக் கேலிபண்ணும் வகையில் நடித்துக் காட்டுமாறு கோமாளியொருவனுக்குக் கட்டளையிட்டிருந்தார். 237/850ல் கர்பலாவிலிருந்த இமாம் ஹுசைனின் சமாதியையும், அதனைச் சூழவிருந்த பல இல்லங்களையும் தரை மட்டமாக்கும் படி ஆணையிட்டார். அதன் பின்னர் இமாம் ஹுசைனின் சமாதி மீது தண்ணீரைத்திருப்பிவிடச் செய்தார். சமாதியிருந்த தடயமே தெரியாத படி அவ்விடத்தையுழுது பயிர்ச் செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார்.[91] முத்தவக்கிலுடைய காலத்தில் ஹிஜாஸில் நபிகுடும்பத்தினருடைய நிலை எவ்வளவு பரிதாபரமானதாய்க் காணப்பட்டதெனில், அவர்களின் பெண்களிடம் தங்களை மறைத்துக் கொள்வதற்காக முகத்திரையிருக்கவில்லை. அவர்களில் அநேகரிடம் தொழுகை வேளையில் உபயோகித்த பழசாகிப் போன ஒரேயொரு முகத்திரை மட்டுமே இருந்தது. எகிப்தில் வாழ்ந்த அலீயின் சந்ததியினர் கூட இவ்விதமான துர்பாக்க்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.[92] அப்பாஸியக் கலீபா முத்தவக்கில் காலமாகும் வரை புரிந்து வந்த ஒடுக்கு முறைக் கொடுமைகளை இமாம் சகிப்புத் தன்மையுடன் பொறுத்துக் கொண்டார். அதன் பின்னர் முன்தஸர், முஸ்தாய்ன், மு.்.தாஸ் போன்றோரின் கொடுமைகள் தொடர்ந்தன. இறுதியாக மு.்.தாஸின் சூழ்ச்சியால் இமாம் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்.

பதினோராவது இமாம்

இமாம் ஹசன் இப்னு அலீ அஸ்காரி, பத்தாவது இமாமின் புதல்வராய் 232/845ல் பிறந்தார். ஷீஆ ஆதாரங்களில் காணப்படுவதன் படி 260/872 அப்பாஸியக்கலீபா மு.்.தாஸ் உடைய சூழ்ச்சியால் நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டார்.[93] தமது உத்தம தந்தையின் மறைவுக்குப் பின் தெய்வக்கட்டளையாலும், முன்னைய இமாம்களின் ஆணையாலும் பதினோராவது இமாம் தமது இமாமத்தைப்

பெற்றார். தமது இமாமத்தின் ஏழாண்டு காலமாக , அவர்மீது விதிக்கப்பட்ட சொல்லொனாக் கட்டுப்பாடுகள் காரணமாக அவர் தலை மறைவாகவும், பொய்க் கோலம் (தக்கீயாஹ்) பூண்டும் வாழ்ந்தார். ஷீஆ ஜனத்தொகையைச் சேர்ந்த சாதாரண மக்களோடு கூட அவர் எத்தகைய சமூகத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. ஷீஆக்களின் சிறந்தவர்கள் மட்டுமே அவரைக் காணமுடிந்தது. அப்படியிருந்தும் தமது காலத்தின் பெரும்பகுதியை அவர் சிறையிலேயே கழித்தார்.[94]

ஷீஆ மக்கள் தொகையின் எண்ணிக்கையும், வலிமையும் கணிசமான அளவு வளர்ந்திருந்தபடியால் தீவிரமான ஒடுக்கு முறை காணப்பட்டது. ஷீஆக்கள் இமாமத்தில் விசுவாசங்கொண்டிருந்தனர் என்பதை யாவரும் அறிந்திருந்தனர். ஷீஆ இமாம்களின் அடையாளமும் அறியப்பட்டிருந்தது. எனவே முன்னெப்போதையும் விட இமாம்கள் மீது கடுமையான கண்காணிப்பு மேற் கொள்ளப்பட்டிருந்தது. இரகசியத் திட்டங்கள் மூலம் இமாம்களை அகற்றியழித்துவிடுவதற்கான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. பதினோராம் இமாமின் தனயரே வாக்களிக்கப்பட்ட மஹ்தியாக இருப்பார் என்பதை இமாமினாலும் அவரது முன்னோர்களாலும் அறிவிக்கப்பட்ட பாரம்பரியங்களின் படி ஷீஆக்களின் மேட்டுக் குடியினர் விசுவாசங்கொண்டிருந்தனரென்பதையும் கிலாபத் ஆட்சி அறிய வந்தது. ஸுன்னத் ஜமாஅத்தினரின் ஆதாரங்களின் படியும் ஷீஆக்களின் ஆதாரங்களின் படியும் மஹ்தியின் வருகையை ஆதாரபூர்வமான நபிமொழிகள் முன்னறிவிக்கின்றன.[95] இக்காரணங்களினால் ஏனைய இமாம்களை விடவும் பதினோராவது இமாம் மிகுந்த கண்காணிப்பில் வைக்கப் பட்டார். அப்போதிருந்த கலீபா இமாமத்தின் கதவுகளை ஒரேயடியாக அடைத்து விடுவதன் மூலம் ஷீஆயிஸத்தின் இமாமத்துக்கு முத்தாய்ப்பு வைத்துவிடத் திடசங்கற்பம் பூண்டிருந்தார்.

எனவே, பதினோராம் இமாமின் சுகவீனச் செய்தி முஃதமிதை எட்டியதும் ஒரு மருத்துவனையும், சில ஏஜெண்டுகளையும்,

நீதவான்களையும் இமாமின் இல்லத்துக்கனுப்பி எல்லா நேரங்களிலும், இமாமின் நிலைமையையும், அவரில்லத்தில் நிகழ்வனவற்றையும் மிகுந்தஅவதானமாகக் கவனித்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டார். இமாம் மரண மடைந்ததும் அவரது வீடு சோதனைபோடப்பட்டது. அவரது அடிமைப் பெண்கள் யாவரும் பிரசவ மருத்துவச்சியால் பரிசோதிக்கப் பட்டனர். இரண்டாண்டுகளாக கலீபாவின் இரகசிய ஏஜெண்டுகள் சோதனை நடத்தியும் யாதொரு பலனுமின்றி ஈற்றில் முயற்சியைக் கைவிட்டனர்.[96] பதினோராவது இமாம் ஸமர்ராஹ்வில் தமதில்லத்தில் தமது உத்தம தந்தை யாருக்கருகில் நல்லடக்கஞ் செய்யப்பட்டார்.

இமாம்கள் தமது வாழ்நாளின் போது மதத்துறையிலும், ஹதீஸிலும் பல நூற்றுக்கணக்கான மாணாக்கர்களுக்குப் பயிற்சியளித்தனரென்பதும் இம்மாணாக்கர்களே இமாம்களைப் பற்றிய தகவல்களை எமக்கு அறிவிக்கின்றன ரென்பதும் இங்கு நினைவிற் கொள்ளப்படல்வேண்டும். அவர்களது பெயர்கள் எழுதிய நூல்கள், சரிதைகள் முதலியவற்றின் பட்டியல், விரிவஞ்சித் தராமல் விடப்படுகிறது. [97]

பன்னிரண்டவது இமாம்

இமாம்-இ-அஸர் (காலத்தின் இமாம்) எனவும், ஸாஹிப் அல்-ஸமான் (சகாப்தத்தின் தலைவர்) எனவும் வழக்கமாகக் குறிப்பிடப்படும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி, பதினோராம் இமாமின் புதல்வராவார். அவரது பெயரும் திருநபியின் பெயரும் ஒன்றேயாகும்.ஸமர்ராஹ்வில் 256/868ல் பிறந்தார். 260/872ல் அவரது தந்தை உயிர்த்தியாகம் புரியும் வரை தந்தையின் பராமரிப்பில் வளர்ந்து தந்தையிடமே கல்விப் பயிற்சி பெற்றார். பொதுமக்கள் பார்வையிலிருந்து அவர் மறைத்து வைக்கப்பட்டார். ஷீஆக்களின் ஒரு சில சிறந்தவர்கள் மட்டுமே அவரைச் சந்திக்க முடிந்தது.

தமது தந்தையின் உயிர்த்தியாகத்தின் பின், தெய்வ கட்டளை யால் இமாமாகி ''கைபா'' நிலையில் மறைவானார். மிகவும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தமது பிரதிநிதிகளுக்கு

(நாயிப்) மட்டும் அவர் காட்சிதந்தார்.[98]

தம் தந்தையாரதும், பாட்டனாரதும் தோழரான உதுமான் இப்னு ஸைத் உமாரி என்பவரை இமாம் சிறிதுகாலம் தம் விசேடப் பிரதிநிதியாக வைத்திருந்தார். இவர் இமாமின் மிகவும் நம்பிக்கைக்குரிய தோழராய் விளங்கினார். ஷீஆக்களின் பிரச்சினைகளுக்கும், கோரிக்கைகளுக்கும் தம் பிரதிநிதி மூலமாகப் பதில் கூறிவந்தார் இமாம். உதுமான் இப்னு ஸைத்உமாரி காலமானதும் அபுல் காஸிம் ஹுஸைன் இப்னு ரூஹ் கவ்பக்தி என்பவரும் அவரின் மறைவுக்குப்பின் அலீ இப்னு முஹம்மத் ஸிமாரி என்பவரும் அடுத்தடுத்து விசேடப் பிரதிநிதிகளாய்த் தெரிவு செய்ப்பட்டனர்.[99]

329/939ல் அலீ இப்னு முஹம்மத் ஸிமாரி காலமாவதற்குச் சில நாட்களுக்கு முன், அலீ இப்னு முஹம்மத் ஸிமாரி மரணிக்கப்பபோகின்றாரென்றும் அத்தோடு இமாமின் விசேட பிரதியாயிருக்கும் பதவி முற்றுப்பெற்று விடுமென்றும், பிரதான கைபா (கைபத்தி குப்ரா) ஆரம்பமாகிவிடுமென்றும் இமாம் வெளிப்படுவதற்கு இறைவனிடமிருந்து அனுமதிகிடைக்கும் வரை அவர் மறைந்திருப்பார் என்றும் இமாம் அறிவித்தல் விடுத்தார்.

பன்னிரண்டாவது இமாமின் 'கைபா' மறைந்திருத்தல் - இருபகுதிகளாகப் பிரிக்கப்படும்: முதலாவதாக சிறிய 'கைபா' (கைபத்தி ஸுக்ரா) 260/872ல் தொடங்கி, சுமார் எழுபதாண்டுகள் நீடித்து 329/939வ் முடிவுற்றது. இரண்டாவது, பிரதான 'கைபா' 329/939ல் தொடங்கிற்று: இறைவன் விரும்பும் வரை இது தொடரும். ஆதார பூர்வமான தென அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஹதீஸொன்றில் திருநபியவர்கள் பின்வருமாறு அறிவித்துள்ளார்கள்: ''உலக வாழ்வு ஒரேயொரு நாள் தான் இருக்கும் என்றிருப்பினும் எனது சமூகத்திலும் எனது குடும்பத்திலுமிருந்து ஒருவரை அனுப்பிவைக்கும் வரை இறைவன் அத்தினத்தை நீடிப்பான். அவர் பெயரும் என் பெயரும் ஒன்றாகவே இருக்கும். ஒடுக்கு முறையும் கொடுங்கோன்மையும் நிறைந்த உலகில் அவர் சமத்துவத்தையும், நீதியையும் நிலைநாட்டுவார்.''[100]

மஹ்தியின் தோற்றம் பற்றி

நபித்துவமும் இமாமத்தும் பற்றிய ஆய்வில், படைப்பினங்களை ஆளும் பொது வழிகாட்டல் எனும் விதியின் விளைவாக, மனிதன் நபித்துவத்தின் மூலமாக அத்தியாவசியமாய் இறை வெளிப்பாட்டைப் பெறும் ஆற்றல் வாய்ந்தவனாயுள்ளான் என்பதும், அது மனித ஜீவிதத்தின் சேமத்தையும், பூரணத்துவத்தையுமடைய அவனுக்குதவுகின்றது என்பதும் சுட்டப்பட்டது. சமூக அம்சம் பொருந்திய வாழ்வுடை மனிதனுக்கு இச்சேமமும், பூரணத்துவமும் சாத்தியமில்லையெனில் அவன் இவ்வாற்றலைப் பெற்றிருப்பது அர்த்தமற்றதாகிவிடும். ஆனால் படைப்பில் பயனற்ற தன்மை கிடையாது.

வேறுவார்த்தைகளில் சொல்வதானால், பூமியில் வதியத் தொடங்கிய நாள் தொட்டு மனிதன் சந்தோஷமும் சந்துஷ்டியும் வாய்ந்த சமூக வாழ்வை இலட்சியமாகக் கொண்டு அதற்காகப் போராடிவந்துள்ளான். இத்தகைய அவனின் ஆசைக்குப் புறவயமான தோர் இருப்பு இல்லையெனில் இவ்விருப்பம் அவனது உள்ளார்ந்த இயல்பில் பதியப்பட்டிருக்காது. உணவென்று ஒன்று இல்லையேல் பசியென்பது இராது: தண்ணீர் என்பது இல்லையேல் தாகமும் இராது இனவிருத்தியென்பது இல்லையேல் ஆண் பெண்ணிடையே பாலியல் கவர்ச்சியும் இராது என்பதுபோல.

எனவே, உள்ளார்ந்த தேவை, தீர்மானம் காரணமாக நீதியும் சமத்துவமும் சமாதானமும் சந்துஷ்டியும் வாய்ந்த சமுதாயமொன்று மலர்ந்து மனித ஜீவிகள் ஒழுக்கப்பண்புகள் நிறைந்தோராய் பூரணத்துவமெய்தி இன்ப வாழ்வு வாழும் நாளொன்று வந்தே தீரும். அத்தகைய நிலைமை மனிதக் கரங்களால்- ஆனால் இறைவனின் உதவியுடன் - உருவாகும். அத்தகையதொரு சமுதாயத்தின் தலைவர் மக்களின் விமோசன நாயகனாயிருப்பார். அவரே ஹதீஸ் மொழியில் மஹ்தி எனப்படுகிறார்.

ஹிந்து மதம், பௌத்தம், யூதம், கிறிஸ்தவம்,

ஜொராஸ்திரியம் போன்ற உலகில் வழங்கிவரும் மதங்களில் இவ்விதம் மனித குலத்தின் இரட்சகராக - மீட்பராக வரப்போகும் ஒருவரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இம்மதங்கள் அப்படிப்பட்ட ஒருவரின் வரவுக்காகச் சுப சோபனம் கூறுகின்றன. எனினும் இவை தரும் விவரங்களில் வேறுபாடுகள் காணப்படுவது இயற்கையே. இப் போதனைகளைக் கவனமாக ஒப்பு நோக்குவதன் மூலம் இவற்றைப் புரிந்துகொள்ளலாம். ''மஹ்தி எனது சந்ததியைச் சேர்ந்தவர்'' எனும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நபிமொழி இவ்வுண்மையையே குறிக்கின்றது.

மஹ்தியின் தோற்றம் சம்பந்தமாக, அவர் திருநபியின் சந்ததியைச் சேர்ந்தவர், அவரது தோற்றம் மனித சமுதாயம் உண்மையான பூரணத்துவமெய்தச் செய்து ஆன்மீக மெய்ஞ்ஞான வாழ்வு மண்ணில் மலரச் செய்யும் எனும் விவரங்களடங்கிய திருநபியினதும் இமாம்களினதும் எண்ணற்ற ஹதீஸ் பாரம்பரியங்கள் சுன்னத் ஜமாஅத் நூல்களிலும் ஷீஆ நூல்களிலும் காணப்படுகின்றன.[101] அத்துடன், பதினோராம் இமாமின் புதல்வர் ஹசன் அல்-அஸ்காரியே வாக்களிக்கப்பட்ட மஹ்தி என்ற நிஜம் சம்பந்தமாக மற்றும் அநேக பாரம்பரியங்களும் உள. பிறந்து நீண்டகாலம் 'கைபா' நிலையில் மறைவாய் இருந்து பின் மீண்டும் வெளிப்போந்து அநீதமும் அசமத்துவமும் நிறைந்த கெட்டபொல்லாத உலகை மாற்றி நீதியையும் சத்தியத்தையும் நிலைக்கச் செய்வார் என்பதில் இவை இணக்கம் காண்கின்றன.

உதாரணமாக, அலீ இப்னு மூசா அல்-ரிழா (எட்டாவது இமாம்) ஒரு ஹதீஸில் பின்வருமாறு கூறுகின்றார்: எனக்குப் பின்னர் வரும் இமாம் எனது மகன் முஹம்மத், அதன் பின்னர் அவர் மகன் அலீ, அலீக்குப் பின் அவரது மகன் ஹசன், ஹசனுக்குப் பின் அவரது மகன் ஹுஜ்ஜத்துல் கய்யிம்- இவர் 'கைபா' வில் மறைந்திருக்கும் போது எதிர்பார்த் திருக்கப்படுவார்; வெளிப்படும் போது கீழ்ப்படியப்படுவார். உலகின் ஆயுளில் ஒரேயொரு நாள் தான் எஞ்சியுள்ளதென்றிருப்பினும் அவர் வெளிப்படும் வரை

அல்லாஹ் அந்நாளை நீடிக்க வைப்பான், அநீதி நிரம்பியுள்ள இவ்வுலகில் நீதியை நிரம்பச் செய்வார். ஆனால் எப்போது? அந்நேரம்' பற்றிய செய்தியை உண்மையில் எனது தந்தையார் என்னிடம் சொன்னார். அதையவர் அவரின் தந்தையிடமும், அவரின் தந்தை அவரது தந்தையிடமும், அவர் தம் மூதாதையரிடமும். அம்மூதாதையர் அலீயிடமுமிருந்தும் கேள்விப்பட்டிருந்தனர். (அச் செய்தியின் படி) திருநபியிடம் ''அல்லாஹ்வின் ரசூலே, உங்களின் குடும்பத்தினரிடமிருந்து '' ஆதரவு'' (கய்யிம்) எப்போது தோன்றுவார்? '' எனக் கேட்கப்பட்டதற்கு அவர்கள் '' அவரின் விவகாரம் (மரித்தவைகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்படும்) நாள் போன்றதாகும். 'அதுவரும் நேரத்தை, அவனைத்தவிர வேறெவரும் தெளிவாகக் கூற முடியாது. (அச்சமயம்) வானங்களிலும் பூமியிலும் மகத்தான சம்பவங்கள் நிகழும். திடீரென வன்றி (அது) உங்களிடம் வராது' (குர்ஆன் 7, 187)'' எனக் கூறினார்கள்.[102]

''எனக்குப் பின் இமாம் என் மகன் அலீயாவார். அவர்கட்டளையே என் கட்ளையாகும்: அவர் வார்த்தையே என் வார்த்தையாகும். அவருக்குக் கீழ்ப்படிவது எனக்குக் - கீழ்ப்படிவதாகும் . அவருக்குப் பின் இமாம் அவர் புதல்வர் ஹசனாவார். அவர் கட்டளையே அவர் தந்தையின் கட்டளையாகும். அவரின்வார்த்தை அவரது தந்தையின் வார்த்தையாகும். அவருக்குக் கீழப்படிவது அவரது தந்தைக்கு கீழப்படிவதாகும்'' என அபூஜா::பர் முஹம்மத் இப்னு அலீ அல்-ரிழா(ஒன்பதாவது இமாம்) கூறுவதை நான் கேட்டேன். இவ்வார்த்தைகளின் பின் இமாம் மௌனமானார். '' நபியின் புதல்வரே, ஹஸனுக்குப் பின் இமாமாக வருபவர் யார்? '' என நான் கேட்டேன். அவர் கடுமையாக அழுதார். அப்புறம் '' நிச்சயமாக ஹசனுக்குப் பிறகு அவரின் புதல்வரே எதிர்பார்த்திருக்கப்படும் இமாம். அவரே 'அல்-காயிம் பில் ஹக்' சத்தியத்தால் ஆதரிக்கப்பட்டவர்'' என்றார் என ஸக்ர் இப்னு அபீ துலா::ப் கூறுகின்றார்.[103]

இமாம் அபூ முஹம்மத் அல்- ஹசன் இப்னு அலீ

(பதினொராவது இமாம்) ''எனக்குப் பிறகு இமாம் யார் என்பது பற்றி உங்கள் மத்தியில் அபிப்பிராய பேதங்கள் தோன்றும். எவர் அல்லாஹ்வின் ரசூலுக்குப்பின் இமாம்களை ஏற்றுக் கொண்டு, ஆனால் என் மகனை மறுக்கின்றாரோ அவர் எல்லா நபிமார்களையும் ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வின் ரசூலான முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை மறுக்கின்றவர் போலாவார். ஏனெனில் எங்களில் இறுதியானவருக்குக் கீழ்ப்படிவது எங்களில் முதலாமவருக்குக் கீழப்படிவது போலாகும். எங்களில் இறுதியான வரை மறுப்பது முதலாமவரை மறுப்பது போலாகும். ஆனால் எச்சரிக்கையாயிருங்கள்! நிச்சயமாக என் புதல்வருக்கு 'கைபா' (மறைந்திருக்கும்) நிலை உண்டு. அப்போது அல்லாஹ்வின் பாதுகாக்கப்பட்டோரைத் தவிர சகல மக்களும் சந்தேகத்தில் மூழ்கிவிடுவர்'', எனக் கூறியதைத் தாம் கேட்டதாக மூசா இப்னு ஜாஃபர் பக்தாதி அறிவிக்கின்றார்.

ஷீஆக்களின் எதிரிகளோ, இந் நம்பிக்கையின் படி மறைவாகி இப்போது ஆயிரத்திருநூறு வயதாகியிருக்க வேண்டும், எந்தவொரு மனிதப் பிறவிக்கும் இது சாத்திய மில்லையென வாதிக்கின்றனர். இதற்குப் பதில் இத்தகையவொரு நிகழ்வு சம்பவிக்கக் கூடிய ஒன்று என்பதையே இவ்வாதம் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதாகும். அப்படியொரு நீண்ட ஆயுள் நிகழக் கூடிய தொன்றல்ல தான். எனினும் இமாம்களது ஹதீஸ்களைக் கற்றவர்களுக்கு இவ்வாழ்வு அற்புதங்கள் நிச்சயமாக சாத்திய மற்றவையல்ல என்பது புலனாகும். அவற்றை விஞ்ஞான வாதங்களால் மறுதலிக்க முடியாத இவ்வுலகில் இயங்கும் காரணிகள் யாவும் நாம் காண்பனவும் அறிவனவும் மட்டுமே யென்பதும் நாம் புரிந்து கொள்ளாத காரணிகள் இவ்வுலகில் இல்லையென்பது நிரூபிக்கப்படமுடியாத தாகும். இவ்விதமாக, மனித குலத்தைச் சேர்ந்த ஒருவரில் அல்லது அநேகரில் அவருக்கு அல்லது அவர்களுக்கு ஆயிரமாண்டு அல்லது பல்லாயிரமாண்டுகள் நீண்ட ஆயுளை அருளக்கூடிய சில காரணிகள் இயங்குவது சாத்தியமே. நீண்ட ஆயுளை வழங்கும் வழியைக் கண்டுபிடிப்பதில் மருத்துவ விஞ்ஞானம் கூட நம்பிக்கையிழந்து

விடவில்லை. இது எவ்வாறிருப்பினும் தங்களின் வேத நூல்களின் படி இறைவனின் தீர்க்கதரிசிகளது அற்புதங்களை யேற்றுக் கொள்ளும் யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் போன்றோர் இவ்வாறு ஆட்சேபம் தெரிவிப்பதும் மிகவும் விந்தையே.

ஷிஆயிஸத்தை எதிர்ப்போர், மத உண்மைகளையும் கட்டளைகளையும் விளக்குவதற்கும் மக்களுக்கு வழிகாட்டுவதற்கும் இமாம் அவசியமென ஷிஆயிஸம் கருதுகின்ற போதிலும், ஓர் இமாம் 'கைபா' நிலையில் மறைந்திருப்பது இந்நோக்கத்தையே மறுதலிப்பதாகுமென்றும், ஏனெனில் மக்கள் தொடர்புகொள்ள முடியாமல் மறைந்திருக்கும் இமாம் மனிதகுலத்துக்கு எவ்வகையிலும் பிரயோசன முள்ளவராயித்தல் அல்லது தாக்கத்தை யேற்படுத்த முடியாது என்றும் கூறுகின்றனர். மனித குலத்தைச் சீர்திருத்துவதற்காக ஓர் இமாம் தேவையெனில் தேவையான சந்தர்ப்பத்தில் அவரைப் படைக்க முடியும். ஆயிரம் வருடங்களுக்கு முன்பாகவே அவரை அவன் படைத்திருக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் அவர்கள் வாதிக்கின்றனர். அத்தகையோர் இமாம் என்பதன் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை யென்பதே இதற்குப் பதில் . இமாமின் கடமை மத ஞானங்களைச் சம்பிரதாயமாக விளக்குவதும் மக்களுக்குப் புறவயமாக வழிகாட்டல் வழங்குவதும் மட்டுமல்ல வென்பது இமாமத் பற்றிய விசாரணையின் போது தெளிவாகியது. புறவயமான மக்களுக்கு வழிகாட்டும் கடமை அவருக்குள்ளது போலவே வலாயத்தும், மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டும் பொறுப்பும் அவர் மீது சாட்டப்பட்டுள்ளது. அவரே மனிதனின் ஆன்மீக வாழ்வை நெறிப்படுத்துகிறார். மனிதச் செயலின் உள்ளார்ந்த அம்சத்தை இறைவனை நோக்கி நெறிப்படுத்துகிறார். அவர் சடவுடலோடு பிரசன்னமாயிருப்பதோ இல்லாதிருப்பதோ இவ்விடத்தில் பாதிப்பை யேற்படுத்தக் கூடியதல்ல. இமாம் மனிதர்களை அகவயமாகக் கண்காணிப்பதுடன் ஆன்மாவுடன் அவர் தொடர்பு கொள்கிறார். வெளிரங்கமாகத் தோன்றுவதற்கும், அவர் கொணரவிருக்கும் அகில உலகப் புனரமைப்புக்கும் இன்னும் நேரம் வரவில்லை யென்றபோதிலும் அவரின் இருப்பு என்றுமே அவசியமாகின்றது.

ஷீஆயிஸத்தின் ஆன்மீகச் செய்தி

உலகுக்கு ஷிஆவிடுக்கும் செய்தியை ஒரே வாசகத்தில் தொகுத்துரைப்பதாயின் அது ''இறைவனை அறிதல்'' என்பதாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதாயின் ஈடேற்றமும் விமோசனமும அடைவதற்காக வேண்டி இறைவனை அறியும் பாதையைப் பின்பற்றுதல் என்பதாகும். ''மனிதர்களே! அல்லாஹ்வின் ஏகத்துவத்தை அறிந்து கொள்ளுங்கள் (அதற்கு சாட்சியங் கூறுங்கள்) நீங்கள் விமோசன மடைவீர்கள்'' எனத் திரு நபி (ஸல்) தங்களின் நபித்துவத் தூதைத் தொடங்கும் போது கூறிய வாசகத்தில் இச் செய்தி அடங்கியுள்ளது.''[105]

இச் செய்தியைச் சுருக்கமாக விளக்கும் வகையில் நாம் பின்வருமாறு கூறலாம். இவ்வுலக வாழ்வில் மனிதன் பௌதீக வாழ்வில் கட்டுண்டவனாகப் பல குறிக்கோள்களைக் கொண்டுள்ளான். சுவையான உணவு, பானவகைகள், அழகிய ஆடைகள், நாகரீகமான இருப்பிடங்கள், நல்லசூழல், அழகுள்ள இனிய மனைவி, உண்மையான நண்பர்கள் பெருஞ் செல்வம் என்றெல்லாம் மனிதன் ஆசைப்படுகிறான். இன்னொருபக்கம் அரசியல் அதிகாரம், பதவி , அந்தஸ்து அடக்கியாளும் ஆசை, தன் விருப்பத்துக்கு மாறானவைகளையெல்லாம் நிர்மூலஞ் செய்துவிடல் என்றெல்லாம் அவனின் நாட்டஞ் செல்கிறது. ஆனால் இவையாவும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை; இவை மனிதனுக்குச் சேவகம் புரிய வேண்டுமே தவிர மனிதன் இவற்றுக்கு அடிமையாகிவிடக்கூடாது என்பதை இறைவனால் அருளப்பட்டதன் பூர்வ இயல்பின் மூலம் மனிதன் புரிந்து கொள்கிறான். வயிற்றுப்பாடும் காமமும் தான் இறுதிக் குறிக்கோள் என நினைப்பது ஆட்டு மந்தைகளின் தர்க்கவியலாகும். கிழித்துக் குதறிகுடலைப் பிய்த்தெறியும் இரத்த வெறி புலிகளின், ஓநாய்களின், நரிகளின் நியாயமாகும். மனித ஜீவியத்தின் உள்ளார்ந்த நோக்கமோ ஞான நிலையை யெய்துவதேயன்றி வேறொன்றில்லை.

ஞானத்திலும், யதார்த்தத்தையும் யதார்த்தமற்றதையும் கண்டு கொள்ளும் இயல்பான ஆற்றலிலும் தங்கியுள்ள இந்த

நியாயம் எம்மை சத்தியத்தின்பால் இட்டுச் செல்கிறது. மனோ இச்சைகளின் பால் சுய நலத்தின் பால் அல்ல. தனியான சுதந்திரம் கொண்டவனாகவன்றி, சுயநலமும் கலகக் குணமும் கொண்டவனாகவன்றி முழுமையான படைப்பின் ஓர் அங்கமாகவே இத்தர்க்க நியாயம் மனிதனைக் கருதுகின்றது. மனிதனே படைப்பின் எஜமான், கலகக் குணத்தைக் கட்டுப்படுத்தி தனது நோக்கங்களுக்குக் கீழ்ப்படியுமாறு அவன் அவனை வெற்றி கொள்கிறான் என்ற தற்போதைய நம்பிக்கைக்கு மாற்றமாக, மனிதன் யதார்த்தத்தில் அகிலத் தன்மைவாய்ந்த இயற்கையின் கருவியாவான். இவ்வுலகில் இயற்கையினால் இயக்கவும் ஆணையிடவும் படுகின்றான். உலகமும் அதில் உள்ளவையாவும் தானாக உண்டான வையல்ல, அவை எல்லையற்ற வொரு பரம்பொருளிலிருந்து உண்டானவை என்பது தெட்டத் தெளிவாகும் வரை இவ்வுலக சிருஷ்டிகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்குமாறு அறிவை அடிப்படையாகக் கொண்ட இந்த தர்க்க நியாயம் மனிதனுக்கு அழைப்பு விடுக்கின்றது. இந்த அழகு அவலட்சணம் யாவும், பூமியிலும் வானங்களிலுமுள்ள படைப்பினங்கள் யாவும் வெளிக்குத் தோன்றுவது போல் சுயாதீனமான யதார்த்தங்கள் அல்லவென்றும், அவை தாமாகவன்றி இன்னொரு யதார்த்தத்தின் மூலமாகவே இருப்புப் பெறுகின்றன அதன் ஒளியிலிருந்து மட்டுமே வெளிப்படுகின்றன வென்றும் அவன் அப்போதறிவான்.

நேற்றைய யதார்த்தங்கள் உன்னதங்கள் இன்று புராணக்கதை கட்டுக்கதைகளாக ஆகி மதிப்பிழந்து விடுகின்றன. இன்றைய 'யதார்த்தங்கள்' நாளைய யதார்த்தங்களோடு ஒப்பிடுகையில் மதிப்பிழந்து கனவுகளாக மங்கிவிடும். இறுதியாக எல்லாமே பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் முடிந்துவிடும். இறைவன் ஒருவனே அழியாத நித்தியமான பூரண யதார்த்தம். அவனது இருப்பிலும் பாதுகாப்பிலுமிருந்தே சகலவும் உண்டாகின்றன. அவனது சுயத்தின் ஒளியிலிருந்தே யாவும் வெளியாகின்றன.

இத்தகைய திருஷ்டியும், ஞானமும், பேதமும் மனிதனுக் கேற்பட்டால் அவனது வேறான இருப்பின் கூடாரம் நீரிற் குமிழி

போல் நொறுங்குண்டு போகும். ஜீவனும், வலிமையும், அறிவும் கொண்ட, எல்லையற்ற அளவில் எல்லா பூரணத்துவமும் கொண்ட ஓர் எல்லையற்ற பரம்பொருளிலேயே இவ்வுலகமும் அதிலுள்ள சகல வஸ்துகளும் தங்கியிருப்பதனை அப்போதவன் தன் கண்களால் காண்பான். மனிதனும் உலகிலுள்ள சகல வஸ்துகளும் அவற்றைக் கடந்து அவற்றுக்கு அப்பாலுள்ள நித்தியத்தின் தரிசனத்தை அதனதன் அளவுக்கேற்ப வழங்கும் யன்னல்கள் போலாகும்.

இந்த கணம் மனிதன் தன்னிடமிருந்தும் சகல படைப்புகளிடமிருந்தும் சுதந்திரத்தையும், சிரேஷ்டத்து வத்தையும் எடுத்து எல்லாவற்றுக்கும் எஜமானனான இறைவனிடம் ஒப்படைத்து விடுகிறான். ஏக இறைவனுடன் தன்னைப் பந்தப்படுத்திக் கொள்வதற்காக எல்லா வற்றிலிருந்தும் அவன் விலகுகின்றான். அல்லாஹ்வின் மாட்சிமையின் முன்னால் பணிவுடன் தலைவணங்குவதல்லால் அவன் செய்வ தொன்றில்லை. அப்போதவன் இறைவனால் வழிகாட்டப்படுகின்றான்; நெறியாளப்படுகின்றான். அப்போது அவன் அறிவதெல்லாம் இறைவனிடம் அறிவதாகும். இறை வழிகாட்டல் மூலம் அறவொழுக்கப் பண்புகளாலும், தூய நடத்தையாலும் அவன் அலங்கரிக்கப்படுகின்றான். இதுவே இஸ்லாம்; இறைவனுக்குக் கீழ்ப்படிதல்; வஸ்துகளின் பூர்வ இயல்புடன் இசைந்த மார்க்கம்.

இதுவே மனிதப் பூரணத்துவத்தின் கொடுமுடி. 'இன்சான் காமில்' எனும் சம்பூரண மனிதனின் நிலை. இமாம் இறையருளால் இந்நிலையை எய்தியவராவார். மேலும், ஆன்மீக வழிகளைப் பின்பற்றி இந்நிலையின் பல்வேறு படித்தரங்களை எய்தியோர் இமாமைப் பின்பற்றுவோராவர். இறைவனைப் பற்றிய அறிவு தன்னைப் பற்றிய அறிவுடன் பின்னிப் பிணைந்தும் பிரிக்க முடியததுமாய் இருப்பது போலவே, இறைவனைப் பற்றிய அறிவும் இமாமைப்பற்றிய அறிவும் பிரிக்கமுடியாதவாறு ஒன்றொடொன்று பின்னிப் பிணைந்ததாகும். தன்னுடைய குறியீடாயமைந்த வாழ்வை அறிந்தவன், சுதந்திரவானான எதனிடமிருந்தும் எவ்விதத் தேவையுமற்றவனான இறைவனுக்கு மட்டுமே சொந்தமானது என்பதனை அறிந்தவனாகிறான்.

குறிப்புகள்

அத்தியாயம் VII

1. தாரிக்கி யாக்கூபி, வல் 3, பக். 60-61; இப்னுஹிஷாமின் ஸீரா, வல். 6, பக். 127
.

2. தாரிக்கி யாக்கூபி, வல். 2, பக். 52-59; இப்னு ஹிஷாமின் ஸீரா, வல். 2, பக். 223.

3. தாரிக்கி யாக்கூபி, வல். 2, பக். 59-60 - பக். 44; இப்னு ஹிஷாமின் ஸீரா, வல். 2, பக். 251, வல். 4, பக். 173 - பக். 272.

4. தாரிக்கி யாக்கூபி,வல். 2, பக். 29; தாரிக்கி அபீல்-ஃபிதா, வல். 1, பக். 126; இப்னு ஹிஷாமின் ஸீரா, வல். 11, பக். 98.

5. காயத் அல்-மராம், பக். 664, அஹ்மத் முதலானோரின் முஸ்னத்திலிருந்து.

6. தொகுப்பாசிரியர் குறிப்பு: இமாம் சம்பந்தமாகக் கூறும் பல்வேறு நபிமொழிகளை இவை குறிப்பிடுகின்றன. இவற்றில் பிரசித்தமானது மேலே குறிப்பிடப்பட்ட 'ஹதீஸி கதீர்' என்பதாகும். 'கதீர் பண்டிகைக்கும் இதுவே பாரம்பரிய அடிப்படையாயமைகின்றது. ஸஃபாவித்களின் காலத்திலிருந்து இப்பண்டிகை குறிப்பிட்ட அரசியல் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. ஏனெனில், இது சம்பிரதாயமாக அரசியல் அதிகாரம் அலீக்கு வழங்கப்படுவதைக் குறிக்கின்றது. அலீயின் வரிசையின் கீழிருந்தே ஷீஆ இமாம்கள் ஆட்சி புரிந்துள்ளனர்.

7. தபாரி, தக்காயிர் அல் உக்பா, கெய்ரோ, 1356, பக். 16. இந்த ஹதீஸ் சிறிது மாற்றத்துடன் அல்-தூர் அல்- மன்தூர், வல். 2, பக். 293ல் இடம் பெற்றுள்ளது. இத்திருவசனம் இறக்கிவைக்கப்படுவதற்கான நிலைமைகள், காரணிகள் பற்றி பஹ்ரானி தமது காயத் அல் மராம், பக். 103 ல் ஸுன்னி ஆதாரங்களிலிருந்து 24 ஹதீஸ்களையும், 19 ஷீஆ ஆதாரங்களையும் குறிப்பிடுகிறார்.

8. பஹ்ரானி,காயத் அல்-மராம், பக். 336 இங்கு மேற்கண்ட குர்ஆன் வசனம் அருளப்பட்ட சந்தர்ப்பமும் காரணமும் குறித்து ஸுன்னி ஹதீஸ்கள் ஆறும், ஷீஆ ஹதீஸ்கள் பதினைந்தும் காணப்படுகின்றன.

9. மேலும் விளக்கத்துக்கு பார்க்கவும்: அல்லாமா தபாத்தபாயி, தஃப்ஸீர் அல்-மீஸான்,வல். 5, தெஹ்ரான், 1377, பக். 177-214, வல். 6, தெஹ்ரான், 1377, பக். 50-64.

10. அல்-பிதாயா வல்- நிஹாயா, வல். 5,பக் 208 - வல்.7, பக். 346; தக்ஹாயிர் அல்- உக்பா,பக். 67; அல்-ஃபுஸுல் அல்-முஹிம்மாஹ், இப்னு ஸப்பாக்ஹ் எழுதியது, நஜஃப், 1950, வல். 2, பக் 23; நஸாய் எழுதிய கஸாயிஸ், நஜஃப், 1369, பக். 31. பஹ்ரானி தமது காயத் அல்-மராம் என்ற நூலில் (பக். 79) இந்த ஹதீஸின் அறிவிப்புக்கு ஸுன்னி ஆதாரங்களிலிருந்து வெவ்வேறான 89 தொடர்வரிசைகளையும் ஷீஆ ஆதாரங்களிலிருந்து 43 தொடர்வரிசைகளையும் காட்டுகின்றார்.

11. தக்ஹாயிர் அல்-உக்பா, பக். 20; அல்-ஸவாயிக் அல்- முஹ்ரிக்காஹ், இப்னு

ஹாஜர் எழுதியது, கெய்ரோ, 1312, பக். 150 - 184; ஜலாலுத்தீன் ஸுயூத்தி எழுதிய தாரிக்குல் குல∴பா, கெய்ரோ, 1952, பக். 307; ஸிப்லான்ஜியின் நூருல் அப்ஸார், கெய்ரோ, 1312, பக். 114; பஹ்ரானி தமது காயத் அல்-மராம் என்ற நூலில் (பக். 237) இந்த ஹதீஸின் அறிவிப்புக்கு ஸுன்னி ஆதாரங்களிலிருந்து பதினொரு தொடர்வரிசைகளையும், ஷீஆ ஆதாரங்களிலிருந்து ஏழு தொடர்வரிசைகளையும் குறிப்பிடுகின்றார்.

12. அல்-பிதாயா வல்-நிஹாயா, வல். 5, பக். 209; தக்ஹாயிர் அல்-உக்பா பக். 16; அல்-∴புஸூல் அல்-முஹம்மாஹ், பக். 22; கஸாயிஷு, பக். 30 அல்-ஸவாயிக் அல்-முஹ்ரிக்காஹ், பக். 147. காயத் அல்-மராமில் இந்த ஹதீஸுக்கு ஸுன்னி ஆதாரங்களிலிருந்து 39 அறிவிப்புகளும், ஷீஆ ஆதாரங்களிலிருந்து 82 அறிவிப்புகளும் காட்டப்பட்டுள்ளன.

13. ஸுலைமான் இப்னு இப்ராஹீம் குந்தூசியின் யநாபி அல்-மவத்தாஹ், தெஹ்ரான், 1308, பக். 311.

14. யநாபி அல் மவத்தாஹ், பக். 318

15. காயத் அல்-மராம், பக். 593, இதில் இந்த ஹதீஸுக்கு ஸுன்னி ஆதாரங்களிலிருந்து பதினைந்து அறிவிப்புகளும், ஷீஆ ஆதாரங்களிலிருந்து பதினொரு அறிவிப்புகளும் காட்டப்பட்டுள்ளன.

16. அல்-பிதாயா வல்-நிஹாயா, வல். 7, , பக். 339; தக்ஹாயிர் அல்-உக்பா, பக். 63; அல்-∴புஸூல் அல்- முஹம்மாஹ், பக். 21; கன்ஜி ஷாபீயின் கி∴பாயத் - அல்-தாலிப், நஜ∴ப், 1356; பக். 148-154; கஸாயிஸ், பக். 19-25; ஸவாயிக் அல்-முஹ்ரிக்காஹ், பக். 117; காயத் அல்-மராம் (பக்.109) என்ற நூலில் ஸுன்னி ஆதாரங்களிலிருந்து நூறு அறிவிப்புகளும், ஷீஆ ஆதாரங்களிலிருந்து எழுபது அறிவிப்புகளும் இந்த ஹதீஸுக்குக் காட்டப்படுகின்றன.

17. தாரிக் அபீல்-∴பிதா, வல். 1, பக். 116.

18. அபூ நுஐம் இஸ்∴பஹானியின் ஹிலாயத் அல்-அவ்லியா, வல். 1, கெய்ரோ, 1351, பக். 64; கி∴பாயத் அல்-தாலிப், பக். 67

19. முன்தக்ஹாப் கன்ஸுல்-உம்மால், முஸ்னத்-இ-அஹ்மத் குறிப்பில், கெய்ரோ, 1368, வல். 5, பக். 94.

20. அல்-பிதாயா வல்-நிஹாயா, வல். 5, பக். 227; அல்-காமில், வல். 2, பக். 217; தாரிக்கி தபாரி, வல். 2, பக். 436; இப்னு அபீல்-ஹதீதின் ஷரஹ், வல். 1, பக். 133.

21. அல்-காமில், வல். 2, பக். 292; ஷரஹ், வல். 1, பக். 54

22. இப்னு அபீல்-ஹதீதின் ஷரஹ், வல் . 2, பக். 134.

23. தாரிக்கி யாக்கூபி, வல். 2, பக். 137.

24. அல்-பிதாயா வல்-நிஹாயா, வல். 6, பக். 311.

25. தொகுப்பாசிரியர் குறிப்பு: இங்கு இமாமத் என்பது திட்டவட்டமான ஷீஆ கருத்தைக் குறிப்பிடுகிறதே தவிர, பல இடங்களில் கலீபா என்றும் அர்த்தம் தரும் பொது

ஸுன்னி பிரயோகத்தினை இது குறிக்கவில்லை.

26. தொகுப்பாசிரியர் குறிப்பு: இத்திருவசன மொழிபெயர்ப்பு 'த குர்ஆன் இன்ட்டர் பிரிட்டட் என்ற ஏ. ஜெ. ஆர்பரியின் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. ஆனால் இவர்கள் இதனை நிராகரித்தால் இதனை நிராகரிக்காத மக்களிடம் நாம் இதனை ஒப்படைப்போம்' என்ற பிக்தாலின் மொழிபெயர்ப்பை விடவும் இது அரபு மூலத்துக்கு நெருங்கி வருகின்றது.

27. உதாரணமாக; ''தெளிவான இந்த வேதத்தின் மீது சத்தியமாக, நீங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டே இந்த குர்ஆனை அரபிமொழியில் அமைத்தோம். நிச்சயமாக இது நம்மிடத்திலுள்ள தாய் நூலில் இருக்கிறது. இது மிக்க மேலானதும் ஞானம் நிறைந்ததுமாகும்.'' (குர்ஆன், 43:2-4)

28. இத்திருவசனங்கள் போன்று; '' இன்னும் ஒவ்வோர் ஆத்மாவும் ஒரு சாட்சியுடனும், (தன்னை) ஓட்டுபவனுடனும் வரும். (தீமை செய்தோரைப் பார்த்துக் கூறப்படும்:) நிச்சயமாக நீ இதனைப்பற்றிக் கவலையற்றிருந்தாய். உன் திரையை உன்னைவிட்டு நாம் நீக்கிவிட்டோம்.இன்றையதினம் உன்னுடைய பார்வை கூர்மையாயிருக்கின்றது'' (குர்ஆன் , 50:21-22). '' ஆணாயினும் பெண்ணாயினும், விசுவாசங் கொண்டு நற்கருமங்களை எவர் செய்தாலும், நிச்சயமாக அவர்களது நல் வாழ்வை நாம் துரிதப்படுத்துவோம்... '' (குர்ஆன், 16;97). ''அவன் உங்களைத் துரிதப் படுத்துகின்றதன் பால் அழைத்தால் அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் கீழ்ப்படியுங்கள் . . .'' (குர்ஆன், 8:24). '' அன்றைய தினம் ஒவ்வோர் ஆத்மாவும் தான் செய்த நன்மைகளையும் தான் செய்த தீமைகளையும் நிதரிசனமாகக் காணும் . . .'' (குர்ஆன், 3:30). '' நிச்சயமாக நாமே மரித்தோரை உயிர் கொடுத்து எழுப்புவோம். அவர்கள் செய்து அனுப்பியவைகளையும், அவர்கள் விட்டுச் சென்றவைகளையும் நாம் எழுதுகிறோம். இவை ஒவ்வொன்றையும் தெளிவான ஏட்டில் பதித்தே வைத்திருக்கின்றோம். (குர்ஆன் 36:12,).

29. பிஹார் அல்-அன்வார், வல். 17, பக். 9

30. முல்லா முஹ்சின் ஃபைத் காஷானி எழுதிய அல்-வாஃபி, தெஹ்ரான், 1310-4. வல் 3, பக். 33

31. '' உண்மையில் செலுத்தக்கூடியவனைப் பின்பற்றுவது தகுமா? அல்லது வழிகாண்பிக்கப்படாமல் தானாகவே வழிசெல்ல முடியாததைத் பின்பற்றுவது தகுமா? உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் எவ்வாறு முடிவு செய்யலாம்? '' (குர்ஆன் 10;35).

32. அன்றி நம்கட்டளைகளை ஏவி, நேரான வழியை அறிவிக்கக்கூடிய தலைவர்களாக (இமாம்கள்) வும் இவர்களை ஆக்கினோம். அன்றியும் நன்மையான காரியங்களைச் செய்யும் படியாகவும் . . . .இவர்களுக்கு வஹி மூலம் அறிவித்தோம்... '' (குர்ஆன், 21:73). '' பொறுமையுடன் சகித்துக் கொண்டு, நம்வசனங்களை உறுதியாக நம்பிய அவர்களில் சிலரை, நம்முடைய கட்டளைப்படி வழிகாட்டும் தலைவர்களாக (இமாம்களாக) நாம் ஆக்கினோம். (குர்ஆன்,32:24). இவற்றிலிருந்து, புறவயமான தலைவராகவும், வழிகாட்டியாகவும் இருப்பது ஒரு புறத்திருக்க, இமாம் வழிகாட்டுதற்கும், தம்பால் ஈர்ப்பதற்கும் ஆத்மீக உலகைச் சேர்ந்த ஒருவகை ஆத்மசக்தியைப் பெற்றிருந்தார் என்ற முடிவுக்கு ஒருவர் வரலாம். தமது இருப்பின் உண்மை, ஒளி, உள்ளார்ந்த அம்சம் முதலியவற்றின் மூலமான ஆற்றலால், மக்களின்

ஹிருதயங்கள்-மீது செல்வாக்கோச்சி, அவற்றை வென்றெடுத்து பூரணத்துவம் நோக்கி, ஜீவிதத்தின் இறுதி இலட்சியம் நோக்கி வழிகாட்டுகின்றார்.

33. '' பன்னிரு பிரதிநிதிகளின் (கலீபா) காலம் வரை இம்மார்க்கம் வலுவோங்கியதாய் விளங்கும், '' எனத் திருநபி (ஸல்) கூறியதைத்தான் கேட்டதாக ஜாபிர் இப்னு ஸமுராஹ் கூறுகின்றார். ஜாபிர் கூறுகின்றார்: '' மக்கள் 'அல்லாஹு அக்பர்' என்ற கோஷத்தை முழங்கினர். அப்போது நபியவர்கள் ஏதோ மெதுவாகக் கூறினார்கள். 'தந்தையே! அவர்கள் என்ன சொன்னார்கள்' என நான் என் தந்தையைக் கேட்டேன். அதற்கவர் 'எல்லாப் பிரதிநிதிகளும் குறைஷிகளைச் சேர்ந்தோராயிருப்பார்கள்' எனத் திரு நபியவர்கள் கூறினார்கள் என்றார்'' அபூ தாவூதின் ஸஹீஹ், கெய்ரோ 1348, வல். 2, பக். 207; முஸ்னத்-இ-அஹ்மத் வல். 5, பக். 92 இதை நிகர்த்த இன்னும் பல ஹதீஸ்கள் உள. ஸல்மான் ஃபார்ஸி கூறுகின்றார்: '' நான் நபிகளாரைக் கண்டேன். அவர்கள் மடியில் இருந்த ஹுசைனின் கண்களிலும், வாயிலும் முத்தமிட்ட வண்ணம் ''நீர் ஒரு மகத்தான மனிதர், ஒரு மகத்தான மனிதரின் புதல்வர்; ஓர் இமாம், ஓர் இமாமின் புதல்வர்; ஓர் 'அடையாளம்' (ஹுஜ்ஜாஹ்), ஓர் 'அடையாளத்' தின் புதல்வர், ஒன்பது 'அடையாளங்கள்களின் தந்தை. அதில் ஒன்பதாவது அவர்களின் ''ஆதரவு (காயிம்)'' எனக் கூறிக்கொண்டிருந்தார்கள்.'' யநாபி அல்-மவத்தாஹ், பக். 308.

34. பார்க்கவும்: அல் -கதீர்; காயத் அல்-மராம்; இத்ஹ் பத்தல்-ஹுதாத், முஹம்மத் இப்னு ஹசன் ஹுர் அல்-ஆமிலி எழுதியது. கும், 1337-39; தக்ஹாயிர் அல் - உக்பா; குவாரஸ்மியின் மனாக்கிப், நஜ.ஃப், 1385; ஸிப்த் இப்னு ஜவ்ஸியின் தத்கிரத்துல் கவாஸ், தெஹ்ரான், 1285; ய நாபி அல்-மவத்தாஹ்; அல்-ஃபுஸுல் அல்-முஹிம்மாஹ்; தலாயில் அல்-இமாமாஹ், முஹம்மத் இப்னு ஜரீர் தபரி எழுதியது, நஜ.ஃப், 1369; அல்நாஸ் வல்-இஜ்திஹாத், ஷராஃப் அல்-தீன் மூசா எழுதியது, நஜ.ஃப், 1375; உஸுல் அல்-காஃபி, வல். 1, கித்தாப் அல்-இர்ஷாத், ஷைகி - முஃபித் எழுதியது, தெஹ்ரான், 1377. புஹாரி, வல்.4, 153 மிஸ்ர் ஸஹ் அல் வறஹ் முஸ்லிம் வல். பக்87-92.

35. தொகுப்பாசிரியர் குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டது போல் ஷீஆ இஸத்தில் அமீருல் முஃமினீன் என்ற பட்டம் அலீ (அலை)க்கு மட்டுமே உரியது. ஏனையயோர் அவ்வாறு அழைக்கப்படுவது கிடையாது.

36. அல்-ஃபுஸுல் அல்-முஹிம்மாஹ், பக். 14: குவாரஸ்மியின் மனாக்கிப், பக். 17.

37. தக்ஹாயிர் அல்-உக்பா, பக். 58; குவாரஸ்மியின் மனாக்கிப், பக். 16-22; யநாபி அல்-மவத்தாஹ், பக். 68-72.

38. முஃபித்தின் இர்ஷாத், பக். 4; யநாபி அல்-மவத்தாஹ், பக். 122.

39. அல்-ஃபுஸுல் அல்-முஹிம்மாஹ், பக். 28-30; தத்கிரத்துல் கவாஸ், பக். 34; யநாபி அல்-மவத்தாஹ, பக். 105; குவாரஸ்மியின் மனாக்கிப், பக். 73-74.

40. அல்-ஃபுஸுல் அல்-முஹிம்மாஹ், பக். 34.

41. அல்-ஃபுஸுல் அல்-முஹிம்மாஹ், பக். 20, தத்கிரத்துல் கவாஸ், பக். 20-24; யநாபி அல்-மவத்தாஹ், பக். 63-65.

42. தத்கிரத்துல் கவாஸ், பக். 18; அல்-ஃபுஸுல் அல்-முஹிம்மாஹ், பக். 21;

குவாரஸ்மியின் மனாக்கிப், பக். 74.

43. முஹம்மத் இப்னு அலீ இப்னு ஷஹ்ராஷூப் எழுதிய மனாக்கிப் அல்-அபீ தாலிப், கும், வல். 3, பக். 62-218; காய்த் அல்-மராம், பக். 539: யநாபி அல்-மவத்தாஹ், பக். 104.

44. தொகுப்பாசிரியர் குறிப்பு: வெளியே நிற்போர் என்று பொருள்படும் கவாரிஜ் என்பது ஸிப்பீன் போருக்குப் பின் அலீ, முஆவியா இருவரையும் எதிர்த்த ஒரு கோஷ்டியைக் குறிக்கும். பின்னர் இவர்கள் ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரத்தை யெதிர்க்கும், ஸுன்னத் ஜமாஅத், ஷீஆ இரண்டையுமே எதிர்க்கும் தீவிரவாதக் குழுவாய் மாறினர்.

45. மனாக்கிப் அல்-அபீ தாலிப், வல். 3, பக். 312; அல் ஃபுஸூல் அல்-முஹம்மாஹ், பக். 113-123; தத்கிரத்துல் கவாஸ், பக். 172-183.

46. தத்கிரத்துல் கவாஸ், பக். 27

47. அதே நூல், பக். 27; குவாரஸ்மியின் மனாக்கிப், பக். 71.

48. மனாக்கிப் அல்-அபீ தாலிப், வல். 3, பக். 221; குவாரஸ்மயின் மனாக்கிப், பக்.92.

49. நஹ்ஜ் அல்-பலாக்ஹாஹ், பகுதி 3, நூல். 24

50. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4 பக். 21-25; தக்ஷாயிர் அல்-உக்பா பக். 67-121.

51. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 28; தலாயில் அல்-இமாமாஹ், பக். 60 அல்-ஃபுஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 133. தத்கிரத்துல் கவாஸ், பக். 193; தாரிக்கி யாக்கூபி வல். 2, பக். 204; உஸூலி கா∴பி, வல். 1, பக். 461.

52. இர்ஷாத் பக். 172; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 33, அல்-ஃபுஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 144.

53. இர்ஷாத், பக். 172; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 33,அப்துல்லாஹ் இப்னு முஸ்லிம் இப்னு குத்தைபாஹ் எழுதிய அல்-இமாமாஹ் வல்-ஸியாஸஹ், கெய்ரோ, 1327-31, வல். 1,பக். 163; அல்-ஃபுஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 145; தத்கிரத்துல் கவாஸ், பக். 197.

54. இர்ஷாத்,பக். 173; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 35, அல்-இமாமாஹ் வல்-ஸியாஸஹ், வல். 1, பக். 164.

55. இர்ஷாத், பக். 174; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 42; அல்-ஃபுஸூல் அல்- முஹிம்மாஹ், பக். 146; தத்கிரத்துல் கவாஸ், பக். 211.

56. இர்ஷாத்,பக். 181, இத்பாத் அல்-ஹுதாத், வல். 5, பக். 129-134.

57. இத்பாத் அல்-வஸிய்யாஹ், மசூதி எழுதியது, தெஹ்ரான், 1320, பக். 125. இர்ஷாத்,பக். 179; இத்பாத் அல்-ஹுதாத், வல். 5,பக். 168-212.

58. இர்ஷாத், பக். 182; தாரிக்கி யாக்கூபி, வல். 2, பக். 226-228; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ்,பக். 163.

59. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப்,வல் . 4, பக். 88

60. அதே நூல், பக். 88, இர்ஷாத், பக். 182, அல்-இமாமாஹ் வல்-ஸியாஸஹ் வல். 1, பக். 203, தாரிக்கி யாக்கூபி, வல். 2, பக். 209; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 163; தத்கிரத்துல்-கவாஸ், பக். 235.

61. இர்ஷாத்,பக். 201.

62. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப்,வல். 4, பக். 89.

63. இர்ஷாத்,பக். 201; அல்-∴புஸூல் அல்-முஹம்மாஹ், பக். 169.

64. இர்ஷாத்,பக். 204; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 170; மக்காத்தில் அல்-தாலிபீன்,அபுல் ∴பராஜ் இஸ்∴பஹானி எழுதியது, இரண்டாம் பதிப்பு, பக். 73.

65. இர்ஷாத், பக். 205; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 171; மக்காத்தில் அல் -தாலிபீன், பக். 73.

66. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 98

67. அதே நூல்

68. இப்னு ஷஹ்ராஷுபின் மனாக்கிப், வல். 4, பக். 99; இர்ஷாத்,பக். 214.

69. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப்,வல். 4, பக். 98, இர்ஷாத், பக். 214.

70. பிஹார் அல்-அன்வார், வல். 10, பக். 200, 202, 203.

71. மக்காத்தில் அல்-தாலிபீன்,பக். 52-59.

72. தத்கிரத்துல் கவாஸ், பக். 324; இபாதத் அல்-ஹுதாத், வல். 5, பக்இ 242.

73. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 176, தலாயில் அல்-இமாமாஹ், பக். 80; அல்-∴புஸூல் அல்-இமாமாஹ், பக். 110.

74. இர்ஷாத், பக். 246; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 193; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப் வல். 4, பக். 197.

75. உஸூல் அல்-கா∴பி, வல். 1, பக். 469; இர்ஷாத், 245; அல்-∴புஸூல் அல்-முஹம்மாஹ், பக். 202-203, தாரிக்கி யாக்கூபி, வல். 3, பக். 63; தத்கிரத்துல் கவாஸ், பக். 340; தலாயில் அல் இமாமாஹ், பக். 94; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 210.

76. இர்ஷாத், பக். 245-253 மேலும் பார்க்கவும்: முஹம்மத் இப்னு முஹம்மத் இப்னு அப்துல் அஸீஸ் கஷ்ஷி எழுதிய கித்தாப் ரிஜால் அல்-கஷ்ஷி, பம்பாய், 1317; முஹம்மத் இப்னு ஹசன் தூஸி எழுதிய கித்தாப் ரிஜால் அல்-தூஸி, நஜ∴ப், 1381; தூஸியின் கிதாபி ∴பிஹ்ரிஸத், கல்கத்தா, 1281, மற்றும் சரிதை நூல்கள்.

77. உஸூலி கா∴பி, வல். 1, பக். 472; தலாயில் அல்-இமாமாஹ், பக். 3, இர்ஷாத், பக். 254; தாரிக்கியாக்கூபி, வல்.3, பக். 119; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 212; தத்கிரத்துல் கவாஸ்,பக். 346; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப் வல் 4, பக். 280.

78. இர்ஷாத்,பக். 254; அல்-∴புஸூல் அல்-முஹம்மாஹ், பக். 204; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப்,வல். 4, பக். 247.

79. அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 212, தலாயில் அல்-இமாமாஹ், பக். 3, இத்ஹ்பாத் அல்-வஸிய்யாஹ், பக். 142.

80. உஸூல் அல்-கா∴பி,வல். 1, பக். 310.

81. அதே நூல்,பக். 476; இர்ஷாத், பக். 270; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ்,பக். 214-223; தலாயில் அல்-இமாமாஹ், பக். 146-148; தத்கிரத்துல் கவாஸ், பக். 348-350; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 324; தாரிக்கி யாக்கூபி, வல் . 3, பக். 150.

82. இர்ஷாத், பக். 279-283; தலாயில் அல்-இமாமாஹ், பக். 148-154; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ் பக். 222, மனாக்கிப்-இப்னு ஷஹ்ரா ஷூப், வல். 4, பக். 323-327; தாரிக்கி யாக்கூபி, வல். 3, பக். 150.

83. உஸூல் அல்-கா∴பி, வல். 1, பக். 486; இர்ஷாத், பக். 284-295; தலாயில் அல்-இமாமாஹ், பக். 175-177; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 225-246; தாரிக்கி யாக்கூபி வல். 3, பக். 188.

84. உஸூல் அல்-கா∴பி, வல். 1, பக். 488; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக்.237.

85. தலாயில் அல்-இமாமாஹ், பக். 197, இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 363.

86. உஸூலி கா∴பி, வல். 1, பக். 3489; இர்ஷாத் பக். 290; அல்-புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 237; தத்கிரத்துல் கவாஸ், பக். 352, இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப் வல். 4, பக். 363.

87. இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 351, அஹ்மத் இப்னு அலீ இப்னு அபீதாலிப் அல்-தபார்ஸியின் கிதாபுல் இஹ்திஜாஜ், நஜ∴ப், 1385, வல். 11, பக். 170-237.

88. இர்ஷாத் , பக். 297, உஸூல் அல்-கா∴பி, வல். 1, பக். 492-497; தலாயில் அல்-இமாமாஹ் பக். 201-209; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப் வல். 4, பக். 377-399; அல்-∴புஸூல் அல்-முஹம்மாஹ் பக். 247-258; தத்கிரத்துல் கவாஸ், பக். 358.

89. உஸூலி கா∴பி, வல். 1, பக். 497-502; இர்ஷாத், பக். 307; தலாயில் அல்-இமாமாஹ் பக். 216-222; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ் பக். 259-265; தத்கிரத்துல் கவாஸ், பக். 362; இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். பக். 401-420.

90. இர்ஷாத் பக். 307-313, உஸூல் அல்-கா∴பி, பக். 501; அல்-∴புஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 261; தத்கிரத்துல் கவாஸ், பக். 359, இப்னு ஷஹ்ரா ஷூபின்

மனாக்கிப், வல். 4, பக். 417; இத்ஹ்பாத் அல்-வஸிய்யாஹ்,பக். 176; தாரிக்கி யாக்கூபி, வல். 3,பக். 217.

91. மக்காத்தில் அல்-தாலிபீன், பக். 395

92. அதே நூல், பக். 395-396

93. இர்ஷாத்,பக். 315; தலாயில் அல்-இமாமாஹ், பக். 223; அல்-ஃபுஸூல் அல்-முஹிம்மாஹ், பக். 266-272, இப்னு ஷஹ்ராஷூபின் மனாக்கிப், வல். 4, பக். 422; உஸூல் அல்-காஃபி, வல். 1, பக். 503

94. இர்ஷாத்,பக். 324; உஷூல் அல்-காஃபி, வல். 1, பக். 512, இப்னு ஷஹ்ரா ஷூபின் மனாக்கிப்,வல். 4,பக். 429-430.

95. ஷஹீஹ் திர்மிதி, கெய்ரோ, 1350-52, வல். 110, அத்தியாயம்; ''மாஜாஅ ஃபில்-ஹுதா ஷஹீஹ், வல். 2, கித்தாப் அல்-மஹ்தி; ஷஹீஹ் இப்னு மாஜா, வல். 2, அத்தியாயம்: '' ஹுரூஜ் அல்-மஹ்தி'' ; அல்-மவத்தாஹ்; கன்ஜி ஷாபியீன் கித்தாப் அல்-பயான் ஃபீ அஹ்பார் ஸாஹிப் அல்-ஸமான், நஜஃப், 1380; நூருல் அப்ஸார்; மிஷ்காத்துல் மஸாபிஹ்-முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல்-கத்தீப், டமாஸ்கஸ், 1380; அல்-ஸவாயிக் அல்-முஹ்ரிக்காஹ், இஸாஃப் அல்-ராகிபீன்-முஹம்மத் அல்-ஸபான், கெய்ரோ, 1281; அல்-ஃபுஸூல் அல்-முஹிம்மாஹ்; ஷஹீஹ் முஸ்லிம்; கிதாபுல் கைபா முஹம்மத் இப்னு இப்ராஹீம் அல் நுஃமானி, தெஹ்ரான், 1318; ஷெய்க் ஸாதூக்கின் கமால் அல்-தீன், தெஹ்ரான், 1301; இத்ஹ்பாத் அல்-ஹுதாத்; பிஹார் அல்-அன்வார், வல். 51-52

96. உஸூலி காஃபி, வல். 1, பக். 505; இர்ஷாத், பக். 319.

97. பார்க்கவும்: கித்தாப் அல்-ரிஜாப்-கஷ்ஷி; ரிஜால்-தூஸி; ஃபிஹ்ரிஸ்த்-தூஸி, மற்றும் சரிதை நூல்கள் (ரிஜால்)

98. பிஹார் அல் அன்வார், வல். 51, பக். 2-34 -பக். 343-366; முஹம்மத் இப்னு ஹசன் தூஸியின் கித்தாபுல் கைபா, தெஹ்ரான், 1324, பக். 214-243; இத்ஹ்பாத் அல்-ஹூதாத்,வல். 6-7.

99. பிஹார் அல்-அன்வார், வல். 51, பக். 360-361; தூஸியின் கித்தாபுல் கைபா, பக். 242.

100. இக்குறிப்பிட்ட அறிவிப்பு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் உடையது, ஃபுஸூல் அல் முஹிம்மாஹ், பக். 271.

101. அபூ ஜாஃபர் (ஐந்தாம் இமாம்) கூறுகிறார்; '' எங்கள் ''ஆதரவு'' (காயிம்) எழும் போது அல்லாஹ், அவரது தரத்தை அவன் அடியார்களின் தலைமீது வைப்பான். அவர் மூலம் அவர்களது சிந்தைகள் ஒன்றாகிவிடும்; அவர் மூலம் அறிவு (மதிநுட்பம்) பூரணத்துவமெய்திவிடும். '' (பிஹார் அல்-அன்வார், வல். 53, பக். 328-336) அபூ அப்துல்லாஹ் (ஆறாம் இமாம்) கூறுகின்றார். '' அறிவு இருபத்தேழு அட்சரங்களில் அடங்கியுள்ளது; நபியால் கொணரப்பட்டது அனைத்தும் இரு அட்சரங்களில் அடங்கியுள்ளது; இவ்விரு அட்சரங்களைத் தவிர வெளிப்படும் போது அவர் மற்றைய இருபத்தைந்து அட்சரங்களையும் வெளியாக்கி அவற்றை மக்கள் மத்தியில் பரப்புவார். இரு அட்சரங்களையும் அவற்றுடன் சேர்ப்பார்; அப்போது அவை இருபத்தேழு

அட்சரங்களாகப் பிரச்சாரஞ் செய்யப்படும்.'' (பிஹார் அல்-அன்வார், வல். 53, பக். 336)

102. அதே நூல். வல். 51, பக். 154.

103. அதே நூல்.

104. அதே நூல் பக். 160.

105. தொகுப்பாசிரியர் குறிப்பு: விமோசனம் (பலஹா என்ற வேர்ச் சொல்லிலிருந்து வருவது) இங்கு அதன் தற்போதைய வெளிப்படையான அர்த்தத்தில் மட்டும் விமோசனம் என்றாகாது, ஆனால் அது இவ்வார்த்தையின் உன்னதமான அர்த்தத்தில் ஈடேற்றத்தையும் ஆன்மீக இலட்சியத்தை எய்துவதையும் குறிக்கும்.

அனுபந்தம் 1

தக்கிய்யாஹ் அல்லது மாய்மாலம்

அல்லாமா தபாத்தபாயி

தக்கிய்யாஹ் என்ற நடைமுறை மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள ஷீஆ அம்சங்களில் ஒன்று ''எத்தகையஅபாயத்தையும் தவிர்த்துக் கொள்வது'' என்ற இதன் பரந்த அர்த்தம் பற்றி இங்கு எமக்குக் கரிசனையில்லை. ஒருவர் தமது மதத்தை அல்லது குறிப்பிட்டமத அநுட்டானங்களை எதிர்ப்பவர்களின் நடவடிக்கைகள் காரணமாக ஏற்படக் கூடிய அபாயங்களிலிருந்து தனது மதத்தையோ, அல்லது மத அநுட்டானங்களையோ ஒருவர் மறைத்துக் கொள்வது பற்றிய தக்கிய்யாஹ் அல்லது மாய்மாலம் குறித்தே இங்கு நாம் விசாரணை புரிகின்றோம்.

தக்கிய்யாஹ் என்னும் நடைமுறை இஸ்லாத்தின் பல்வேறு பிரிவினர்களில் ஷீஆக்கள் மத்தியிலே அதிக பிரசித்தம் பெற்று விளங்குகின்றது. அபாயம் வந்து சூழும் போது அவர்கள் தம் மதத்தையும், மதச்சடங்குகள் அல்லது நடைமுறைகளையும் எதிரிகளிடமிருந்து மறைப்பதுண்டு.

இவ்விவகாரத்துக்கு அவர்கள் அடிப்படையாகக் கொள்ளும் ஆதாரங்களில் பின்வரும் திருமுறை வசனமும் ஒன்று: '' விசுவாசிகள் விசுவாசிகளையன்றி நிராகரிப் போரைத் தங்களுக்குப் பாதுகாப்பாளர்களாக (தத்தககூ மின்ஹுூம் என்பதும் தக்கிய்யாஹ் என்பதும் ஒரே வேரிலிருந்து வந்தவை) ஆக்கிக் கொள்ள வேண்டாம். அவர்களிலிருந்துத் (தங்களைக்) காப்பாற்றிக் கொள்வதற்கு (துக்காத்தன் என்பதும் தக்கிய்யாஹ் என்பதும் ஒரே வேரிலிருந்து வந்தவை) அன்றி எவரேனும்

இவ்வாறு செய்தால் அவர்களுக்கு அல்லாஹ்வுடன் எத்தகைய சம்பந்தமுமில்லை. அல்லாஹ் தன்னைப் பற்றி உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறான். அல்லாஹ்விடம் தான் செல்ல வேண்டியிருக்கிறது.'' (குர்ஆன்: 3:28) நிராகரிப்போருடன் விலாயாஹ்வைத் (தன்னுடைய வாழ்வையே பாழாக்கும் வகையில் நட்புவைத்துக் கொள்வது என்ற அர்த்தத்தில்) தடை செய்து அத்தகைய நிலைமையில் எச்சரிக்கை யோடும் அச்சத்தோடும் நடந்து கொள்ளுமாறு எல்லாம் வல்ல இறைவன் கட்டளையிடுகிறான்

பிறிதோரிடத்தில் இறைவன் கூறுகின்றான்: எவனேனும் விசுவாசம் கொண்டதன் பின்னர், அவன் அல்லாஹ்வை (நிராகரித்தால் அவனைப்பற்றிக் கவனிக்கப்படும்.) அவனுடைய இருதயம் விசுவாசத்தைக் கொண்டு முற்றிலும் திருப்தியடைந்தேயிருக்க, எவருடைய நிர்ப்பந்தத்தின் மீது அவன் நிராகரித்தால்- (அவன் மீது யாதொரு குற்றமுமில்லை) எனினும் அவர்களுடைய இருதயத்தில் நிராகரிப்பே நிறைந்திருந்தால் அவர்கள் மீது அல்லாஹ்வுடைய கோபந்தான் ஏற்படும். அவர்களுக்கு மகத்தான வேதனையுண்டு'' (குர்ஆன், 16, 106).

ஸுன்னா ஆதாரங்களிலும், ஷீஆ ஆதாரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளபடி இத்திருவசனம் அம்மார் இப்னு யசீர் சம்பந்தமக அருளப்பட்டது. திருநபி (ஸல்) ஹிஜ்ரத்து மேற்கொண்டபின், மக்காக் காபிர்கள் அந்நகரைச் சேர்ந்த சில முஸ்லிம்களைச் சிறைப்படுத்திச் சித்திரவதை செய்து, இஸ்லாத்தை விட்டுவிடுமாறும் முன்பு போல் சிலை வணக்கத்துக்குத் திரும்பும் படியும் நிர்ப்பந்தித்தனர். சித்திரவதைக்குள்ளான இக்கூட்டத்தில் அம்மாரும் அவரது தாய் தந்தையரும் இருந்தனர். அம்மாரின் பெற்றோர்கள் இஸ்லாத்தை விட்டுவிட மறுத்து சித்திரவதைப்பட்டு மாண்டனர். ஆனால் அம்மார் சித்திரவதையிலிருந்தும் மரணத்திலிருந்தும் தப்புவதற்காக வேண்டி, வெளிக்கு இஸ்லாத்தைவிட்டு சிலைவணக்கத்தை ஏற்றுக் கொண்டு அபாயத்திலிருந்து தப்பினார்.விடுதலையானதும் இரகசியமாக மக்காவைவிட்டு

வெளியேறி மதீனா சென்றார். மதீனாவில் திருநபி (ஸல்) அவர்களிடத்துப் போய் தம் நடத்தைக்காகத் தாம் பரிசுத்த இஸ்லாத்தைவிட்டு வெளியேறிவிட்டவராகக் கருதப்படுவாரா எனக் கேட்டபொழுது, அவர் செய்ய வேண்டியதையே செய்தார் எனத் திரு நபி (ஸல்) கூறினார்கள். அப்போது மேற்குறிப்பிட்ட திருவசனம் அருளப்பட்டது.

மேலே குறிப்பிட்ட இரு திருவசனங்களும் குறிப்பிட்ட விவகாரங்கள் குறித்து அருளப்பட்ட போதிலும் அவற்றின் அர்த்தம், சித்தாந்த நம்பிக்கையையும், மத அநுட்டானங் களையும் பகிரங்கமாக வெளிப்படுத்தும் போது ஏற்படக் கூடிய பயங்கரமான நிலைமைகள் அனைத்தையும் தழுவியதாக உள்ளது. இவை தவிர்த்து, அபாயம் பற்றிய அச்சம் நிலவும் போது தக்கிய்யாஹ்வைக் கடைப்பிடிக்கும் படிக் கட்டளையிடும் நபிகுடும்பத்தினரின் பாரம்பரியங்கள் அநேகம் உள்ளன.

தக்கிய்யாஹ்வைக் கடைப்பிடிக்கும் பழக்கம், வீரம், துணிவு ஆகிய பண்புகளுக்கு நேர்விரோதமானதாகும் என சிலர் ஷீஆக் கொள்கையை எதிர்க்கின்றனர். இக் குற்றச்சாட்டு செல்லு படியாகாதென்பது சற்றே சிந்தித்தால் வெளிச்சமாகிவிடும். தன்னால் எதிர்த்து நின்று போராடி வெல்ல முடியாத சந்தர்ப்பத்திலேயே தக்கிய்யாஹ் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் தக்கிய்யாவைக் கடைப்பிடிக்க மறுப்பது ஆத்திரத்தையும் முட்டாள் தனத்தையுமே காட்டுமேயன்றி அது வீரமாக மாட்டாது. மனிதனின் பிரயத்தனங்கள் வெற்றியைத்தரக்கூடிய வாய்ப்பிருக்கும்போதே வீரத்தையும் துணிவையும் காட்ட முடியும். ஆனால் நஞ்சூட்டப்பட்ட தண்ணீரை அருந்துவது போன்று, பீரங்கிக் குண்டின் முன்னால் பாய்ந்து விழுவது போன்று, வந்து கொண்டிருக்கும் ரயில் வண்டியின் முன்னால் போய் படுப்பது போன்று, வெற்றிக்குச் சிறிதேனும் சாத்தியமே இல்லாத ஆபத்து நிறைந்த சூழலில் இத்தகைய செயலெதுவும், பொதுப்புத்திக்கும் தர்க்க நியாயத்துக்கும் முரணான செயலாக, பைத்தியக்காரச் செயலாகவே கருதப்படும். எனவே

வெற்றிகரமான போராட்டத்துக்கோ, வெற்றிக்கோ சாத்தியமே இல்லாத தவிர்க்கப்பட முடியாத ஆபத்து காணப்படுகின்ற வேளையில் மட்டுமே தக்கிய்யாஹ் கடைப்பிடிக்கப்படல் வேண்டுமேன தொகுத்துரைக்கலாம்.

தக்கிய்யாஹ்வைக் கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்கக் கூடிய அபாயத்தின் தன்மை பற்றி, ஷீஆவைச் சேர்ந்த பல்வேறு முஜ்தஹித்களால் விவாதிக்கப்பட்டுள்ளது. எம்முடைய அபிப்பிராயப்படி, ஒருவரது உயிருக்கோ, அவரது குடும்பத்தினரின் உயிருக்கோ, ஆபத்து வந்து விடிந்தால், அல்லது தன் மனைவியின், அல்லது குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய பெண்களின் கற்புக்கு ஆபத்து வரின், தன்னையோ, குடும்பத்தையோ பராமரிக்க முடியாத நிர்க்கதிக்கு ஆளாக்கிவிடும் வகையில் பொருட்சேதம் உண்டாகும் அபாயம் நிலவினால் தக்கிய்யாஹ்வைக் கடைப்பிடித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறிருப்பினும், தடுக்க முடியாத ஆபத்து சூழும் வேளையில் ஜாக்கிரதையோடும் எச்சரிக்யோடும் அதனைத் தவிர்த்துக் கொள்வது எல்லா மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தங்கள் வாழ்வின் பல்வேறு கட்டங்களில் கடைப் பிடிக்கப்பட்டுவரும் ஒரு பொதுவிதியாகும்.

அனுபந்தம் 2

முத்ஆஹ் அல்லது தற்காலிகத் திருமணம்

எழுதியோர்

அல்லாமா தபாத்தபாயி

ஸையத் ஹுஸைன் நஸ்ர்

தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டு அடிக்கடி விமர்சிக்கப்படும். மற்றொரு ஷீஆ நடைமுறை தற்காலிகத் திருமணம் அல்லது முத்ஆஹ். விசேடமாக நவீனவாதிகள் சிலர் இதனை விமர்சிக்கின்றனர்.

இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில், அதாவது இறை வெளிப்பாடு அருளப்பட்டதிலிருந்து திருநபி (ஸல்) மதீனாவுக்கு ஹிஜ்ரா மேற்கொண்டது வரை, நிரந்தரத் திருமணத்துடன், தற்காலிகத் திருமணமும் முஸ்லிம்களின் நடைமுறையிலிருந்ததென்பதற்கு திட்டவட்டமாக நிறுவப்பட்டுவிட்ட வரலாறுண்டு. உதாரணத்துக்கு, அபூபக்கரின் புதல்வி அஸ்மாவை ஸுபைர் அல்-ஸஹுதபி என்பவர் தற்காலிகத்திருமணம் செய்து கொண்டதை ஒருவர் காட்டலாம். இந்தத் திருமண பந்தத்தின் மூலமாகவே அப்துல்லாஹ் இப்னு ஸுபைர், உர்வாஹ் இப்னு ஸுபைர் இருவரும் பிறந்தனர். இவர்கள் பிரபல நபித் தோழர்களாவர். உறவு சட்டவிரோதமானதாகவோ, முறைகேடானதாகவோ கருதப்பட்டிருப்பின் புகழ்பெற்ற நபித்தோழர்கள் மத்தியில் இப்பழக்கம் இருந்திருக்க முடியாது. முறைகேடான விபச்சாரம் இஸ்லாத்தில் பெரும்பாவங்களி லொன்றாகக் கருதப்பட்டிருப்பதோடு அதற்குக் கடுமையான தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஹிஜ்ரத் மேற்கொள்ளப்பட்ட காலத்திலிருந்து திரு நபி (ஸல்)

மறையும் வரை கூட தற்காலிகத் திருமணம் நடைமுறையிலிருந்து வந்தது. அதற்குப்பின்னர், முதலாம் கலீபாவின் காலத்திலும் இரண்டாம் கலீபாவின் ஆட்சிக்காலப்பகுதியிலும் கூட, இரண்டாம் கலீபா அதனைத் தடைசெய்யும் வரை முஸ்லிம்கள் தொடர்ந்து இப்பழக்கத்தைக் கைக் கொண்டு வந்தனர். அதனைக் கடைப்பிடிப்பவர்கள் கல்லெறிந்து தண்டிக்கப்படுவர் என அச்சுறுத்த இரண்டாம் கலீபா எல்லா ஆதாரங்களிலும் காணப்படுவது போல் பின்வரும் பிரகடனத்தை விடுத்தார்; அல்லாஹ்வுடைய ரசூலின் காலத்திலும், அபூபக்கரின் காலத்திலும் நிலவிவந்த இரு முத்ஆஹ்கள் உண்டு. அவற்றை நான் தடைசெய்கிறேன், எனது கட்டளைகளை மீறுவோரை நான் தண்டிப்பேன். இவ்விரு முத்ஆஹ்களும் புனித யாத்திரை சம்பந்தமான முத்ஆஹ்வும், பெண்கள் சம்பந்தமான முஅத்தாஹ்வுமாகும்.

நபித் தோழர்களிலும், திருநபியைப் பின்பற்றியோரிலும் சிலர் இரண்டாம் கலீபா விடுத்த இத்தடையை எதிர்த்தபோதும், அப்போதிலிருந்து ஸுன்னத் ஐமாஅத்தினர் மூத்ஆஹ் திருமணத்தைச் சட்ட விரோதமானதாய்க் கருதத் தொடங்கினர். என்ற போதிலும் . ஷீஆக்கள் நபிகுடும்பத்தினரின் போதனைகளைப் பின்பற்றி, நபியின் காலத்தில் நிலவியது போலவே தற்காலிகத்திருமணத்தைச் சட்ட பூர்வமானதென்றே தொடர்ந்து கருதிவருகின்றனர்.

விசுவாசிகள் சம்பந்தமாய் இறைவன் தன் திருமறையில் கூறுகின்றான். '' அவர்கள் தங்கள் மர்ம ஸ்தானங்களை (விபசாரத்திலிருந்து) காப்பாற்றிக் கொள்வார்கள். எனினும், அவர்கள் தங்கள் மனைவிகளிடமோ, அல்லது தங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்ட (அடிமைப்) பெண்களிடமோ (சேர்வதில்) நிச்சயமாக அவர்கள் நிந்திக்கப்படமாட்டார்கள். இதற்குப் புறம்பானதை எவரேனும் விரும்பினால் அவர்கள் வரம்பு மீறியவர்களாகி விடுவார்கள். (குர்ஆன் 23:5-7). மேலும் ''தங்கள் மனைவிகளிடத்தும், தங்கள் வலக்கரம்சொந்தமாக்கிக் கொண்டவர்களிடத்தும் தவிர, தங்கள் கற்பைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் நிந்திக்கப்பட மாட்டார்கள். இதனையன்றி

எவரேனும் விரும்பினால், அத்தகையோர் வரம்பு மீறியவர்களாவர். (குர்ஆன், 70:29-31). இத்திருவசனங்கள் மக்காவில் அருளப்பட்டவை. இவை அருளப்பட்ட நாளிலிருந்து ஹிஜ்ரத் வரை முஸ்லிம்களால் தற்காலிகத் திருமணம் கடைப்பிடிக்கப் பட்டுவந்ததென்பது நன்கறிந்ததே. மூத்ஆஹ் திருமணம் உண்மையான திருமணமாய் இருந்திராவிடின் அதன்படி மணஞ் செய்து கொண்டபெண்கள் சட்டபூர்வமான மனைவிகளாகக் கருதப்பட்டிராவிடின் நிச்சயமாக இத்திருமறை வசனங்களின் படி சட்டத்தை மீறியோராய் கருதப்பட்டிருப்பர். மூத்ஆஹ்வைக் கைக் கொள்வதிலிருந்து தடுக்கப்பட்டிருப்பர். தற்காலிகத் திருமணம் திருநபியால் தடை செய்யப்படாத படியால் அது சட்டபூர்வமான திருமணமாக விருந்ததேயன்றி முறைகேடான ஒன்றாக இருக்கவில்லை.

ஹிஜ்ரத்திலிருந்து திருநபியின் மறைவுவரை முத்ஆஹ் திருமணம் சட்டபூர்வமானதாய்த் தொடர்ந்து வந்த தென்பது ஹிஜ்ரத்துக்குப் பின் அருளப்பட்ட இத்திருவசனம் நிருபிக்கின்றது: ''(அவர்களை மணமுடிப்பதன் மூலம்) நீங்கள் அவர்களிடம் சுகமனுபவித்தால் (இஸ்தம்த.ஃத்தும்) என்ற சொல்லும் முத்ஆஹ் என்பதும் ஒரே வேரிலிருந்து வந்தவை) . . . அவர்களுக்கு குறிப்பிட்ட 'மஹறை' அவர்களிடம் கொடுத்துவிடுங்கள்''. . . (குர்ஆன், 4:24). அந்நிஸாஉ' - பெண்கள் - என்ற அத்தியாயத்திலுள்ள இத்திருவசனம் பின்னர் இரத்து செய்யப்பட்டுவிட்டது எனச் ஷீஆவை எதிர்ப்போர் வாதிடுகின்றனர். ஆனால் ஷீஆக்கள் இவ்வபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்வதில்லை. வாஸ்தவத்தில், இரண்டாம் கலீபா வால் தடைவிதிக்கப்படும் வரை அத்தகைய திருமணங்கள் நிலவியதற்கு மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாம் கலீபா வின் வார்த்தைகளே தக்க சான்றாகும். மூத்ஆஹ் திருமணம் இரத்து செய்யப்பட்டு தடைவிதிக்கப்பட்டிருந்தால், அது திருநபியின் காலத்திலும் அவர்களின் மறைவுக்குப் பின் இரண்டாம் கலீபாவின் காலம் வரையும் முஸ்லிம்கள் மத்தியில் பொதுவாக நிலவிவந்த தென்பது, மூத்ஆஹ் நிராகரிக்கப்பட்டிருப்பின் அதைத் தடுப்பதற்கு அதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லையென்பது நினைத்துப்பார்க்க முடியாத ஒன்று.

இரண்டாம் கலீபா செய்ததெல்லாம் திருநபி வழங்கிய இரத்தையும், தடையையும் அமுல்படுத்தியதுதான் என்ற வாதத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அத்தகைய சாத்தியப்பாட்டை இரண்டாம் கலீபாவின் தெள்ளத் தெளிவான வார்த்தைகளே மறுதலித்து விடுகின்றன: '' அல்லாஹ்வின் ரசூலுடையவும், அபூபக்கருடையவும் காலத்தில் இருந்த இரு முத்ஆஹ்களை நான் தடை செய்து விட்டேன். என் கட்டளைகளை மீறுவோரை நான் தண்டிப்பேன்.''

முக்கிய கவனிப்பிற்குரிய இஸ்லாமிய அம்சங்களில் ஒன்றான விவாகரத்தினதைப் போலவே, தற்காலிகத் திருமணத்தின் நியாயத்தை சட்டவாக்க கண்ணோட்டத்திலும், பொது நலன் பேணும் கண்ணோட்டத்திலும் நாம் காணல் வேண்டும். ஒரு சமூகத்திலுள்ள மக்களின் ஜீவாதார நலன்களைப் பேணுவதையும் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டே சட்ட திட்டங்கள் அமுலாக்கப்டுகின்றன வென்பது பிரத்தியட்சம். மனித சமுதாயத்தில் திருமணம் சட்ட பூர்வ மாக்கப்பட்டது தொடக்கத்தலிருந்து இன்றுவரை, பாலுறவுக்கான இயல்பூக்கத் தூண்டலுக்கு விடையாக அமைந்துள்ளது. உலகின் பல்வேறு மக்களிடை நிரந்தரத் திருமணம் தொடர்ந்து நிலவி வருகின்றது. என்ற போதிலும் எல்லா விதமான எதிர்ப்பிரச்சாரங்களையும் மீறி உலக நாடுகளிலெங்கும் பெரிய, சிறிய நகரங்களில் மறைவிடங்களிலும், பொது இடங்களிலும் சட்ட விரோதமான பாலுறவு அல்லது விபசாரம் இடம் பெற்று வருகின்றது. நிரந்தரத் திருமணம் எல்லோரதும் இயல்பூக்கமான பாலியல் இச்சையை திருப்தி செய்வதற்குப் போதுமானதன்று என்பதற்கும், இப்பிரச்னைக்குப் பரிகாரம் காணப்பட வேண்டும் என்பதற்கும் இதுவே சிறந்த அத்தாட்சியாகும்.

இஸ்லாம் அகில உலகிற்கு முரிய மார்க்கம். அதன் சட்டநிருபணம் சகல விதமான மக்களையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நிரந்தரத்திருமணம் சில மனிதர்களின் இயல்பூக்கப் பாலியல் தூண்டலை திருப்தி செய்வதில்லை யென்பதையும், இஸ்லாத்தின் படி விபசாரம் மனிதவாழ்வின் ஒழுங்கையும், தூய்மையையும் அழித்துவிடும்

கொடிய விஷமென்பதையும் கருத்தில் கொண்டு, விபசாரத்திலிருந்து வேறுபட்டதாக விபசாரத்தின் தீமைகளிலிருந்து விடுதலைபெற்றதாக, விசேட நிபந்தனைகளின் கீழ் இஸ்லாம் தற்காலிகத் திருமணத்தைச் சட்ட பூர்வமாக்கியுள்ளது. பெண் தனித்தவளாயிருக்க வேண்டுமென்பதும், ஒரே நேரத்தில் ஒருவருக்கு மட்டுமே தற்காலிகத் திருமணஞ் செய்தவராயிருத்தல் வேண்டுமென்பதும், விவாகரத்துக்குப் பின் குறிப்பிட்ட காலத்துக்கு மறுமணம் புரியாமல் இருக்க வேண்டுமென்பதும் நிரந்தரத் திருமணத்துக்குப் பின் எதிர்பார்க்கப்படும் காலப்பகுதியில் சரிபாதி இத்தா' இருக்க வேண்டுமென்பதும் இந்நிபந்தனைகளில் அடங்கும். சட்ட பூர்வமாக நெறிப்படுத்தப்படாவிடின் மதச்சட்டத்தின் கட்டுக் கோப்பை மீறி பயங்கரமான வழிகளில் செல்லக் கூடிய மனிதர்களின் காம வெறியால் விளையக்கூடிய தீமைகளைக் குறைப்பதற்கான சாத்தியப்பாடுகளை புனித சட்டத்தின் எல்லைக்குள் அனுமதிக்கும் நோக்குடனேயே இஸ்லாத்தில் தற்காலிகத் திருமணம் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.

1. ஹஜ் அல்-மூத்ஆஹ் என்பது திருநபியினது வாழ்நாளின் இறுதியில் சட்ட பூர்வமாக்கப்பட்ட ஒருவகை புனிதயாத்திரையாகும்.

அனுபந்தம் 3

ஷீஆக்களின் மதக் கிரியைகள்

ஸைய்யத் ஹுஸைன் நஸ்ர்

சுன்னத் ஜமாஅத் மத்ஹபுகளிடை காணப்படும் வித்தியாசங்களுடன் சற்று அதிகமாக, தொழுகைக்கான அழைப்பில் நிலையிலும், வாசகத்திலும் சில திருத்தங்களைத் தவிர ஷீஆக்களின் மதக் கிரியைகள் அத்தியாவசியமாய் சுன்னத் ஜமாஅத்தினருடையதைப் போன்றதேயாகும். சுன்னத் ஜமாஅத்தில் போலவே ஷீஆவிலும் பிரதான மதக்கிரியையாக அன்றாடத் தொழுகை (அரபியில் ஸலாத், பாரசீகத்திலும், உருதுவிலும் நமாஸ்) - சூரியோதயம், பகல், பிற்பகல், மாலை, இரவு ஆகிய வேளைகளில் இடம்பெறும் தொழுகைள் அடங்கும். சுபஹ்,ளுஹர், அஸர், ம.்.ரிப் இஷா ஆகியன முறையே 2, 4, 4, 3, 4, ரக்ஆத்துகள் என்றவாறு மொத்தம் பதினேழு ரக்அத்துகள். ஷீஆ நடைமுறையில் காணப்படும் ஒரே வித்தியாசம், அவர்கள் ஐவேளைத் தொழுகையையும் வெவ்வேறாகத் தொழுவதற்குப் பதில் மதியத் தொழுகை பிற்பகல் தொழுகை இரண்டையும் ஒன்றாகவும், மாலைத்தொழுகை இரவுத் தொழுகை இரண்டையும் ஒன்றாகவும் சேர்த்துத் தொழுவதாகும்.

சுன்னத் தொழுகைகளையும்,மகிழ்ச்சி அச்சம், நன்றி தெரிவித்தல் புனித யாத்திரைஸ் தலத்தையடைதல் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்படும் தொழுகை களையும் ஷீஆக்கள் தொழுவர். இந்நடைமுறையிலும் ஷீஆவுக்கும் சுன்னத் ஜமாஅத்திற்குமிடையே சிறிது வித்தியாசமுண்டு. வெள்ளிக் கிழமை ஜும்மாத் தொழுகையிலும் இவர்களிடையே வித்தியாசங் காணப்படுகிறது. இத்தொழுகை

சுன்னத் ஜமாஅத்தார் மத்தியில் அதிக சமூக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாய் விளங்குகிறது. ஷீஆக்களைப் பொருத்தவரை ஒவ்வொரு நகரத்தைச் சேர்ந்த ஒரு பள்ளியிலேனும் ஜும்மா நடத்தப்படினும், ஷீஆவின் படி இத்தொழுகையை நடத்தவேண்டியவர் இமாமேயாதலால், அவர் இல்லாத படியால் இதன் முக்கியத்துவம் சிறிது குறைந்துபோய், தனியாகத் தொழுவதற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படைக் கிரியையான நோன்பை ஷீஆக்கள் பெரும்பாலும் சுன்னத் ஜமாஅத்தினரைப் போலவே அநுஷ்டிக்கின்றனர். ஆனால் நோன்பு திறக்கும் விடயத்தில் சுன்னத் ஜமாஅத்தினரை விடவும் சற்றுத் தாமதித்து சூரியன் முழுமையாக மறைந்ததன் பின்னரே நோன்பு திறக்கின்றனர். நோன்பு பிடிக்கக் கூடிய பருவ வயதை யடைந்தோர் அனைவரும் ரமழான் மாதத்தில் வைகிறையிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரை ஊண், குடிப்பைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நோன்பைச் சார்ந்த அறவொழுக்கப்பண்புகள் இரு இஸ்லாமியப் பிரிவினர் மத்தியிலும் ஒரே விதமானதே.அதே போன்று அநேக ஷீஆக்கள் சுன்னத் ஜமாஅத்தார் போல், திரு நபியின் முன்மாதிரியைப் பின்பற்றி வருடத்தில் வேறு சில நாட்களிலும் நோன்பு நோற்பர், விசேடமாக தலைப்பிறை, நடுப்பிறை, கடைசிப் பிறைக் காலங்களில் நோன்பு நோற்பர்.

புனித ஹஜ் யாத்திரை விடயத்திலும் ஷீஆவுக்கும் சுன்னத் ஜமாஅத்தார்க்குமிடையே சிறு வித்தியாசங்களே காணப்படுகின்றன. இமாம்களதும், மெய்ஞ்ஞானிகளதும் ஸியாரத்களைத் தரிசிப்பது ஷீஆக்களது மத வாழ்வில் ஒன்றிணைந்த ஓர் அம்சமாகும். இது சுன்னத் ஜமா அத்தார் மத்தியில் காணப்படும், இறை ஞானிகளின் ஸியாரத்களைப் போய்த் தரிசிக்கும் வழக்கம் போன்றது. ஆயினும் இவ்வகைப் புனித யாத்திரைகள், தொழுகை, நோன்பு, ஹஜ் போன்று கடமையானவையல்ல. எனினும் இவை புறக்கணிக்க முடியாத அளவுக்கு முக்கியமான மதப் பங்கினை வகிக்கின்றன.

அடிப்படைக் கிரியைகளைத் தவிர விசேடமாக ஷீஆக்களுக்கேயுரிய சில மத நடைமுறைகள் இருக்கின்றன . என்றபோதிலும் சுன்னத் ஜமாஅத்தார் சிலர் மத்தியிலும் இவை காணப்படுவது விந்தையே. உபந்நியாசம், கவியரங்கம், திருக்குர்ஆன் ஓதல், பல்வேறு இமாம்களின் குறிப்பாக இமாம் ஹுசைனின்- சோகச்சரிதைகளைக் கூறும் நாடகங்கள் முதலிய நிகழ்ச்சிகளின் கதம்பமாக 'ரவ்ழா-கானி' இடம் பெறுகின்றது. ஸஃபாவித் அரசர்களின் ஆட்சிக்காலத்தில்பரவலாக இடம் பெற்று வந்த இந்நிகழ்ச்சி, ஷீ ஆக்கள் மத்தியில் மிகவும் பரவியுள்ள செல்வாக்கு மிக்க மதச் சடங்காக மாறிவிட்டது. 'ரவ்ழா-கானி' முழு சமூகத்தின் மீதும் ஆழமான பாதிப்பையுண்டு பண்ணக்கூடிய நிகழ்ச்சியாக விளங்குகிறது. பிரதானமாக, கர்பலாவின் சோகச் சம்பவமும் அதனையடுத்த நிகழ்வுகளும் இடம் பெற்ற முஹர்ரம், ஸஃபர் மாதங்களிலேயே 'ரவ்ழா' நிகழ்கின்றது. ஷீஆக்களிடையே வழங்கிவரும் அதே வடிவத்தில் இல்லாத போதிலும் சுன்னத் ஜமாஅத்தினர் மத்தியிலும் மராதி (ஒப்பாரி), கர்பலா சம்பவத்தைச் சித்தரிக்கும் நாடகம் போன்ற வடிவங்களில் மொராக்கோ போன்ற நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

முஹர்ரம் மாதத்தில் ரவ்ழாவுடன் தொடர்புடையதாய் நிகழும் வெறிக்கூத்து (தஃஸியாஹ்) பாரசீகத்திலும், இந்தோபாகிஸ்தான் உப-கண்டத்தில் வளர்ச்சியடைந்த கலையாய் விளங்குகிறது. தொழுகை போன்ற நேரடியான மதக் கிரியையாக இது இல்லாவிடினும், சமூகத்தின் ஆழ அகலங்களைத் தொடுவதால் மதவாழ்வின் பிரதான வெளிப்பாடாய்த் தோன்றுகிறது. இக்காலங்களில் பெரும் வீதி ஊர்வலங்களும் நடைபெறுவதுண்டு. இமாமின் வேட்கையில் பங்கு கொள்ளும் வகையில் மக்கள் பாடிக் கொண்டும் மாரடித்து அழுது கொண்டும் செல்வர். இதனையொத்த நிகழ்ச்சியாக அநேக முஸ்லிம் நாடுகளில் சமீபகாலங்களில் அருகிவரும் ஸூஃபி ஊர்வலங்களைக் குறிப்பிடலாம்.

சாதாரண மக்கள் மட்டத்தில் காணப்படும் பிரசித்தமான சில

நடைமுறைகளையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். ஷரீஅத் விதித்துள்ள மதவரி (ஸக்காத்) என்பதுடன் சேர்த்து மற்றும் தானதர்மங்கள், குடல்வாய் சனங்களுக்கு ஈவதன் மூலம் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்ளுமாறு இறைவனிடம் விண்ணப்பித்தல், ஏழைகளுக்கு ஆகாரமளிப்பதற்காக விசேட மதவிருந்துகளை யேற்பாடு செய்தல். இவை போன்ற மற்றும் அநேக நடைமுறைகள் மதத்தை அன்றாட வாழ்வின் அன்னியோன்யச் செயல்களுடன் இணைக்கின்றன.

திருக்குர்ஆனை ஓதுவது, சுன்னத் ஜமாஅத்தினர் மத்தியில் காணப்படுவது போன்றே, ஷீஆக்களிடையே மிகச் சிறந்ததோர் அடிப்படை நடைமுறையாக விளங்குகின்றது. திருமணம், மரணம் போன்ற விசேட நிகழ்ச்சிகளின்போதும், மற்றும் அன்றாட வாழ்வில் பகலிரவு வேளைகளிலும் திருக்குர்ஆன் ஓதப்பட்டு வருகின்றது. அத்துடன் நஹ்ஜ் அல்-பலாகாஹ் ஸாஹி.ஃபாஹ் ஸஜ்ஜாதியாஹ், உஸூல் அல்-கா.ஃபி போன்ற நூல்களில் காணப்படும் திரு நபியின் ஹதீஸிலிருந்தும், இமாம்களின் உபதேசங்களிலிருந்தும் அரபி மொழியில் அழகுறவமைந்த பிரார்த்தனைகளை ஓதிவருவதிலும் ஷீஆக்கள் முக்கிய கவனஞ் செலுத்துகின்றனர். இப்பிரார்த்தனைகளில் ஜவ்ஷானி கபீர், குமைல் போன்றவைகளை ஓதுவதற்கு மணிக்கணக்காக நீண்ட நேரமெடுக்கும். இறைபக்தி கொண்ட விசேட நல்லடியார்களால் மட்டுமே வாரத்தில் சில இரவுகளில், குறிப்பாக வியாழன் இரவிலும் ரமழான் இரவுகளிலும் இவை ஓதப்படும். மற்றையோர் சிறிய பிரார்த்தனைகளுடன் திருப்தியடைகின்றனர். ஆனால் ஷீஆக்கள் மத்தியிலும், சுன்னத் ஜமாஅத்தார் மத்தியிலும் ஒரே விதமாக பல்வேறு துஆக்களை பிரார்த்தனைகளை ஓதிவரும் வழக்கம் முக்கியமான மதக்கரியைகளில் ஒன்றாக விளங்குகின்றது. இருபிரிவாரிடையேயும் இம்மதப் பிரார்த்தனைகள் மத ஞானிகளின் நூல்களிலிருந்து பெறப்பட்டவையாகக் காணப்படுகின்றன. ஷீஆக்களுடைய பிரார்த்தனைகள் இமாம்களினதும், நபிகுடும்பத்தாரினதும் பாரம்பரியங்ளிலிருந்து பெறப்பட்டன வாகவும், சுன்னத் ஜமாஅத்தினரது பிரார்த்தனைகள் சூ.ஃபியத்திலிருந்து பெறப்பட்டன வாகவும் விளங்குகின்றன.

அனுபந்தம் 4

ஜின்களைப் பற்றி ஒரு குறிப்பு

ஸையத் ஹுஸைன் நஸ்ர்

நவீன உலகில் இஸ்லாமிய போதனைகளிலிருந்து மிகவும் குறைவாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ள அம்சங்களிலொன்று, திருமறையில் அநேக விடங்களில் குறிப்பிடப்படும் ஜின் வர்க்கம் சம்பந்தமானதாகும். பிரபஞ்சவியலின் பாரம்பரியத் திட்டத்தில் ஜின்களின் நுட்பமான சூட்சும உலகை மறுக்கும் பொருள்முதல்வாதச் சிந்தனையே இத்தவறான புரிந்துணர்வுக்குக் காரணம். எனவே ஜின் என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு (பாரம்பரிய சித்தாந்தங்களைப் புரிந்து கொள்ளும் சாத்தியப்பாட்டை செயலிழக்கச் செய்யும் இருமைகளான) பொருள், மனம் இரண்டையும் உள்ளடக்கிய யதார்த்தம் பற்றிய சிந்தனையைத் தாண்டி ஆன்மா, மனம், பொருள் ஆகிய மூவுலகங்களால் ஆன சிரேஷ்ட யதார்த்தம் பற்றிய பிரக்ஞையை நாடிச் செல்ல வேண்டும். அப்போது ஜின்களை, தூய ஆன்மாவுக்கும் இவ்வுலகுக்கும் இடைப்பட்ட (பர்ஸாக்) உலகை - மானத உலகைச் சேர்ந்ததாய் இனம் காணமுடியும்.

குர்ஆன் வாசகங்களிலும், ஹதீஸ் பிரயோகங்களிலும் ஜின் என்பதும் இன்ஸ் (மனித இனம்) என்பதும் வழக்கமாகச் சோடியாய் இணைத்துப் பேசப்படுகின்றது. இறைவனின் ஏவல்களும் விலக்கல்களும் ஆணையிடப்பட்டுள்ள படைப்பினங்களைக் குறிப்பதற்கு ''அல்-ஜின் வல்-இன்ஸ்'' ஜின்னும் மனிதரும் - என்ற தொடர் அடிக்கடி பிரயோகிக்கப்படுகின்றது. மனிதன் களிமண்ணால்

படைக்கப்பட்டு அதனுள் இறைவன் தன் ஆவியை ஊதினான். (ந.:.பாக்கா) இஸ்லாமிய கோட்பாடுகளின் படி ஜின்கள் களிமண்ணால் படைக்கப்பட்டவையன்று; அவை நெருப்பினால் படைக்கப்பட்டவை. அதனுள்ளும் இறைவன் தன் ஆவியை ஊதினான். எனவே அவற்றுக்கும் மனிதனைப் போன்று உயிரும் பிரக்ஞையும் உண்டு. அவற்றுக்கு இறைகட்டளைகள் வெளியாக்கப்பட்டுள்ளன. இவ்வுலகில் மனிதன் மையமாய் உள்ளதுபோல். ஜின்கள் அவற்றின் இருப்பு மட்டத்தில் மையமாய் உள்ளன. ஆனால் மனிதனுக்கு நேர் முரணாக அவை நிலையற்ற, நிர்ணயிக்கப்படாத புறத்தோற்றம் கொண்டவை; எனவே அவை பல வடிவங்களை எடுக்கக் கூடியவை. அவை பௌதீக உலகை யன்றி மானத உலகைச் சேர்ந்த பிறவிகள் என்பதும் மனிதர்களின் முன்னால் அவை பல்வேறு தோற்றங்களில் வடிவங்களில் தோன்ற முடியுமென்பதும் இதனால் அர்த்தமாகின்றது.

மனிதனைப் போன்று ஆவியைக் கொண்டுள்ள படியால் இறைவனின் முன்னால் அவற்றுக்குப் பொறுப்புகள் உண்டு. அவற்றுட்சில ''மத பக்தி'' வாய்ந்த முஸ்லிம்கள். மானத சக்திகளான இவற்றால் மனிதர்களைச் சடவுலகிலிருந்து இடைப்பட்ட (பர்ஸாக்) உலகினூடு ஆத்மீக உலகுக்கு இட்டுச் செல்ல முடியும். ஏனைய ஜின்கள் தீவினைபுரியும் சக்திகளாகும். சில மனிதர்களைப் போன்று இவையும் இறைவனுக்கு மாறு செய்தவை. இத்தகைய ஜின்கள் ஷைத்தானின் சைனியமாக (ஜுனூதல்-ஷைத்தான்) இனம் காணப்படுகின்றன. ஐயம் (வஹ்ம்) கற்பனை (கயாஸ்) ஆகிய ஆற்றலின் எதிர் மறைத் தன்மைகளைத் தூண்டி விடுவதன் மூலம் மனிதனை அவன் தன் உள்ளொளி கொண்டு அறிவால் காணும்சத்தியத்திலிருந்து-வழிகெடுக்கும் தீய சக்திகள் இவை. இறைவன் படைப்புகளான சட, மானத, ஆவியினங்கள் நிறைந்த சம்பிரதாய முஸ்லிமின் மதப் பிரபஞ்சத்தில் ஜின்கள் அவற்றிற்கேயுரிய குறிப்பான பாத்திரத்தை வகிக்கின்றன. சான்றோர்கள் இடைப்பட்ட உலகைச் சேர்ந்த இம்மானத சக்திகளை அதனதன் தன்மையறிந்து ஏற்கின்றனர். சாதாரணமட்டத்தில் ஜின்கள்

பருண்மையான பல்வேறு சடத்தோற்றங்களில் தோன்றுகின்றன. திருமறை வசனங்களை ஓதுவதன் மூலம் மக்கள் இவற்றின் தீயவிளைவுகளிலிருந்து பாதுகாப்புத் தேடுகின்றனர். இவ்வாறு ஜின்களும் அவற்றுடன் சம்பந்தப்பட்டவைகளும் பேய் பிசாசுகள், மந்திர சூனியங்கள் முதலியவற்றின் துறையைச் சார்ந்ததாய் சாதாரண மட்டத்தில் கருதப்படுகின்றன. பிரமாண்டமாய் விரிந்தமானத உலகின் மீது இன்னும் கூர்த்த பார்வை கொண்டிருப்போருக்கு இவை உயிர்ப்புள்ள யதார்த்தமாய்த் தென்படுகின்றன. இவ்வகையான மனப்பான்மை கொண்ட முஸ்லிம், இறைவனையும், நன்மையின் பிரதிநிதிகளான அமரத்துவ சக்திகளையும், தீமையின் பிரதிநிதிகளான பைசாச சக்திகளையும் பற்றிய பிரக்ஞை கொண்ட உலகில் வாழ்கிறார். தன் அகத்தேயும் புறத்தேயும் இவ்விரு சக்திகளுக்கிடையே நிகழும் போராட்டமாக அவர் தன் வாழ்வைக் காண்கிறார். ஜின்களில் நல்லவையும் தீயவையும் இருந்தபோதும் மனிதனை வழிகெடுக்கும் பைசாச சக்திகளாகவே அவர் சிந்தனையில் அவைபடுகின்றன. அவரது மனதினுள்ளும் ஆன்மாவினுள்ளும் செயல்படும் சக்திகளின் உருவ வெளிப்பாடுகளே அவை. இஸ்லாத்தின் மத, மெய்பொருளியல் மட்டத்தில் சிரேஷ்ட இருப்பு நிலையில் அத்தியாவசியமான ஓர் அம்சமாகவே ஜின்கள் புரிந்து கொள்ளப்படுகின்றன. முன்னர் குறிப்பிட்டதுபோல் இறைவனின் ஆவி அவற்றில் ஊதப்பட்டுள்ள படியால் ஜின்கள் மனிதர்களைப் போன்றனவே. திருமறை கூறுவதுபோல், சுலைமான் (அலை) போன்ற சில நபிமார்கள் மனிதர்கள் மீதும் ஜின்கள் மீதும் ஆட்சி செலுத்தினர்.

இஸ்லாத்ங்தக் கற்கும் மேலை மாணவனால், பாரம்பரிய மெய்ப்பொருளியல், பிரபஞ்சவியல், உளவியல் மூலமாகவன்றி ஜின்களைப்பற்றிய அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது. இப்புரிந்துணர்வின் மூலமாகவே இவற்றையும் இவற்றின் தொழிற்பாட்டினையும் அர்த்தமுள்ளதென அறிந்துகொள்ள முடியும். இதற்கு இசைவான கருத்துகள் பிறமதங்களிலும் உண்டு. இவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள

முடியாத காரணத்தால் ஜின்னைப் பற்றிய நம்பிக்கை வெறும் மூடநம்பிக்கையெனக் கூறிவிட முடியாது.

புலன் கடந்த அநீத உலகம், போதைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் மூலம் அதனை அறிய முயலும் பிரயத்தனங்கள் முதலியவை இந்நாளில் அதிகரித்து வரும் அதீத நிகழ்வுகள் பற்றியெல்லாம் பாரம்பரிய முஸ்லிம் ஒருவரிடம் கேட்கப்பட்டால் , இவைகளில் பெரும்பாலானவை, ஜின் என்று தாம் புரிந்து கொண்டுள்ளதோடு தொடர்புடையவை யென்றுதான் அவர் பதில் கூறுவார். இவ் விவகாரங்களில் சம்பந்தப்பட்ட ஜின்கள் பெரும்பாலும் தீயவை, பைசாசச் சக்திகளைச் சேர்ந்தவை. பரிசுத்த ஆவியிலிருந்து வெளியாகும் அருளாலன்றி இவற்றிலிருந்து பாதுகாப்பு கிடையாதென்று அவர் மேலும் விளக்கம் தருவார்.

நூல் விவரப் பட்டியல்

அல்லாமா தபாத்தபாயியின் ஆக்கங்கள்

அல்மீஸான் (தராசு). அல்லாமா தபாத்தபாயியின் தலைசிறந்த தனிப்படைப்பு, இம்மாபெரும் திருக்குர்ஆன் விளக்கவுரையின் திட்டமிடப்பட்ட இருபது வால்யூம்களில் பத்தொன்பது வால்யூம்கள் எழுதி முடிக்கப்பட்டு, பதினான்கு வால்யூம்கள் ஏலவே அரபி மூலத்திலும் பாரசீக மொழிபெயர்ப்பிலும் வெளியிடப்பட்டுள்ளன.

உஸூலி ஃபல்ஸபா வ றவிஷ் இ ரியலிஸம் (தத்துவ அடிப்படைகளும் யதார்த்த முறையும்) ஐந்து வால்யூம்களில் முர்தஸா முத்தஹ்ஹரியின் விளக்கத்துடன். இவற்றுள் மூன்று வல்யூம்கள் இருபதிப்புகளாக வெளியாகியுள்ளன. ஒரு வால்யூம் அரபியில் வெளியாகியுள்ளது.

ஹாஸிய்யாஹ் பர் அஸ்ஃபார் (**அஸ்ஃபார்** பற்றிய விளக்கம்) ஸத்ர் அல்-தீன் ஷிராஸி (முல்லா ஸத்ரா) யின் **அஸ்ஃபார்** புதிய பதிப்பு பற்றிய விளக்கம். அல்லாமா தபாத்தபாயியின் நெறியாள்கையில் வெளியானது. ஏழு வல்யூம்கள் வெளிவந்துள்ளன. இப்பதிப்பில் மூன்றாவது நூல் (அல்லது 'பயணம்') பொருள்களும் விபத்துகளும் (அல்-ஜவாஹிர் வல்-அ.:.ராத்) பற்றிய பகுதி - சேர்க்கப்படமாட்டா.

முஸாஹபாத் பா உஸ்தாத் குர்பான (பேராசிரியர் கொர்பினுடன் உரையாடல்). அல்லாமா தபாத்தபாயிக்கும் ஹென்ரி கொர்பினுக்கு மிடையே நிகழ்ந்த உரையாடலை அடிப்படையாகக் கொண்ட இரு வல்யூம்கள், முதல் வல்யூம் மக்தப் இ தஷய்யு (ஹஜ்ரா, 1339 (சூர்ய கணக்கு) வின் வருடாந்த நூலாய் வெளியிடப்பட்டுள்ளது.

ரிஸாலாஹ் தர் ஹுக்குமத்தி இஸ்லாமியா (இஸ்லாமிய அரசாங்கம் பற்றிய நூல்) பாரசீக மொழியிலும் அரபியிலும் வெளியிடப்பட்டது.

ஹாஸிய்யாஹ் இ கிஃபாயாஹ் (அல்-கி∴பாயாஹ் பற்றிய விளக்கம்)

ரிஸாலாஹ் தர் குவ்வாஹ் வ பிஃல் (இயன்றமையும் நிசப்பாடும் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் இத்திஹ்பாத் இ தாத (இறைவனது சுயத்தின் அத்தாட்சிபற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் ஷிபாத் (இறைபண்புகள் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் அஃப்ஆல் (தெய்வச் செயல்கள் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் வஸாயித் (சாதனங்கள் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் இன்ஸான் கப்ல் அல்-துன்யா (உலகின் முன் மனிதன் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் இன்ஸான் ஃபில்-துன்யா (உலகில் மனிதன் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் இன்ஸான் பஃத் அல்-துன்யா (உலகத்திற்குப் பின் மனிதன் நூல்)

ரிஸாலாஹ் தர் நுபுவ்வத் (நபித்துவம் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் வலாயத் (தீட்சை பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் முஷ்தக்காத் (சொல்மரபு விளக்கம் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் புர்ஹான் (மெய்ப்பித்தல் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் முக்ஹாலத்தஹ் (ஸோபிஸம் பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் தஹ்லீல் (பகுப்பாய்வு பற்றிய நூல்)

ரிஸால்ாஹ் தர் தர்கீப் (கூட்டினக்கலவை பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் இர்திபாரத் (மேல் நிகழ்வு பற்றிய நூல்)

ரிஸாலாஹ் தர் நுபுவ்வாத்வ மனாமாத் *(நபித்துவமும் கனவுகளும் பற்றிய நூல்)*

மன்ஷூமாஹ் தர் ரஸ்ம-இ-காத் இ நஸ்தஃலிக் *(நஸ்த.்.லிக் எழுதும் முறையும் எழுத்தணிமுறையும் பற்றிய கவிதை)*

அலீ வல்-ஃபல்ஸபா அல்-இலாஹிய்யாஹ் *(அலீயும் ஏகத்துவ தத்துவமும்)*

குர்ஆன் தர் இஸ்லாம் (இஸ்லாத்தில் குர்ஆன்) இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு இந் நூற் தொடரின் இரண்டாம் வல்யூமாக அமையும்.

ஷீ ஆ தர் இஸ்லாம் (ஷீஆ இஸ்லாம்) இந்நூல்.

அல்லாமா தபாத்தபாயி பல கட்டுரைகளின் ஆசிரியருமாவார். **மக்தப் இ தஷய்யு**, மத்கப் இ இஸ்லாம், ம.்.ரிப் இ - இஸ்லாமி போன்ற சஞ்சிகைகளில் அவை கடந்த இருபது வருடங்களாக இடம் பெற்று வந்துள்ளன. முல்லா ஸத்தரா நினைவு மலர் வல்யூம் (பதிப்பாசிரியர் எஸ். எச். நஸ்ர், தெஹ்ரான் 1340) மர்ஜா இயத் வ-ருஹானியத் (தெஹ்ரான், 1341) போன்ற கட்டுரைத் தொகுதிகளிலும் அல்லாமா தபாத்தபாயின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

பொது நூல் விவரப் பட்டியல்

அபகாத்: பார்க்கவும் அபகாத் அல் அன்வார்.

அபகாத் அல்: அன்வர் ஹமீத் ஹுசைன் மூசாவி இந்தியா, 1317.

அபுல்-ஃபிதா: பார்க்கவும் தாரிக் இ அபில் ஃபிதா

அல்-அக்ஹானி அபுல்- ஃபரஜ் இஸ்ஃபஹானி, கெய்ரோ, 1345-51.

அஹபார் அல்-ஹுக்கமா, இப்னு அல்-கிஃப்தி, வெய்ப்ஷிப், 1303.

அல்-அஷ்பாஹ் வல்-நஸாயிர், ஜலால் அல்தீன் அப்துல் ரஹ்மான் ஸுயூத்தி, ஹைதராபாத், 1359.

அஃயான் அல்-ஷீஆ, முஹ்ஸின் ஆமிலி, டமாஸ்கஸ், 1935ல் இருந்து.

அல்-பிதாயா வல்-நிஹாயா, இப்னு கதிர் குறைஷி, கெய்ரோ, 1358.

பிஹார் அல்-அன்வார், முஹம்மத் பாக்கிர் மஜ்லிஸி, தெஹ்ரான், 1301-15.

தலாயில் அல்-இமாமாஹ், முஹம்மத் இப்னு ஜரிர் தபரி, நஜஃப், 1369.

தக்ஹாயிர் அல்-உக்பா, முஹிப் அல்-தீன் அஹ்மத் இப்னு அப்துல்லாஹ் தபரி, கெய்ரோ, 1356

அல்-துர் அல்-மன்தூர், ஜலால் அல்-தீன் அப்துல் ரஹ்மான் ஸுயூத்தி, கெய்ரோ, 1313.

அல்-ஃபுஸூல் அல்-முஹம்மாஹ், இப்னு ஸப்பாக்ஹ், நஜ.ஃப், 1950

அல்-காதிர், மிர்ஸா அப்துல் ஹுஸைன் இப்னு அஹ்மத் தப்ரீஸி அமீனி, நஜா.ஃப், 1372.

காயத் அல்-மராம், ஸய்யித் ஹாஸிம் பஹ்ரானி தெஹ்ரான், 1272.

ஹபீப் அல்-ஸியார், கியாத் அல்-தீன் கவாந்த மீர், தெஹ்ரான், ஹிஜ்ரி (சூரியகணக்கு) 1333.

அல்-ஹதரத்தல் அல்-இஸ்லாமிய்யாஹ், அடம் மெஸ் என்பவரின்'டை ரெனெய்ஸான்ஸ் டே இஸ்லாம்' என்ற நூலின் அரபி மொழிபெயர்ப்பு- அப்துல்ஹாதி அபூ ரீதாஹ், கெய்ரோ, 1366.

ஹாதிர் அல்-ஆலம் அல்-இஸ்லாமிய, லொத்ரொப் ஸ்ட்டொடார்டுடைய 'த நியூ வர்ல்ட் ஆ.ஃப் இஸ்லாம் என்ற நூலின் மொழிபெயர்ப்பு - அஜ்ஜாஜ் நுவைஹித் கெய்ரோ, 1352.

ஹில்யத் அல்-அவ்லியா, அபூ நுஐம் இஸ்.ஃபஹானி, கெய்ரோ, 1351.

இப்னு அபில்- ஹதித்: பார்க்கவும், ஷரஹ் நஹ்ஜ் அல்-பலாக்ஹாஹ், இப்னு அபில் ஹதீதுடையது.

இப்னு மாஜா: பார்க்கவும், இப்னு மாஜாவின் ஸுனன்.

அல்-இமாமாஹ் வல் - ஸியாஸஹ், அப்துல்லாஹ் இப்னு முஸ்லிம் இப்னு குத்தைபாஹ் தினவரி, கெய்ரோ, 1327-31.

இர்ஷாத்: பார்க்கவும் கித்தாப் அல்-இர்ஷாத்

அல்-இஸாபஹ், இப்னு ஹஜர் அஸ்கலானி, கெய்ரோ, 1323.

இஸ் ஆ.ஃப் அல்-ராகிபின், முஹம்மத் அல்-ஸப்பான், கெய்ரோ, 1281.

இத்திபாத் அல்-ஹுதாத், முஹம்மத் இப்னு ஹசன் ஹுர்

அல்-ஆமிலி, கும், 1337-39.

இத்திபாத் அல்-வஸிய்யாஹ், அலி இப்னுஹூனூன் மசூதி, தெஹ்ரான், 1320.

இ∴திக்காதாத் (அல்-அக்காயித்) அபூ ஜ∴பர் முஹம்மத் இப்னு அலீ ஷைக்ஹ் ஸதூக் இப்னு பாபூயாஹ், தெஹ்ரான், 1308.

அல்-இத்கான் ∴பீய் உலூம் அல்-குர்ஆன், ஜலால் அல்-தீன் அப்துல் ரஹ்மான் ஸூயூத்தி, கெய்ரோ, 1342.

கமால் அல்-தீன் ஷைக்ஹ் ஸதூக், தெஹ்ரான், 1378-79.

அல்-காமில் (அல்-காமில் ∴பில்-தாரிக்), இஸ் அல்-தீன் அலீ இப்னு அல்-அதீர் ஜஸரீ, கெய்ரோ, 1348.

கன்ஸ் அல்-உம்மால், ஷைக்ஹ் அலா-அல்-தீன் அலீ அல்-முத்தகி ஹூசாம் அல்-தீன் அல்-புல்ஹான் பக்ஷரி, ஹைதராபாத், 1364-73.

கஸாயிஸ் (கித்தாப் அல்-கஸாயிஸ் ∴பி ∴பத்ல் அலீ இப்னு அபி தாலிப்), அபூ அப்துல் ரஹ்மான் அஹ்மத் இப்னு அலீ நஸாயி, நஜ∴ப், 1369.

அல்-கிஸால், ஷைக்ஹ் ஸதூக், தெஹ்ரான், 1302.

கி∴பாயத் அல்-தாலிப் கன்ஜீ ஷா∴பி, நஜ∴ப், 1356.

கித்தாப் அல்- இஹ்திஜாஜ், அஹ்மத் இப்னு அலீ- இப்னு தாலிப் அல்-தபர்ஸி, நஜ∴ப், 1385.

கித்தாப் அல்-பயான் ∴பீ அஹ்பார் ஸாஹிப் அல்-ஸமன், கன்ஜீ ஷா∴பீ, நஜ∴ப், 1380.

கித்தாப் அல்-∴பிஹ்ரிஸ்த், ஷைக்ஹ் அபூ ஜா∴பர் முஹம்மத் இப்னு ஹசன்தூஸி, கல்கத்தா, 1281.

கித்தாப் அல்-கைபா, முஹம்மத் இப்னு இப்ராஹீம் அல்-நு∴மானி, தெஹ்ரான், 1318.

கித்தாப் அல்-கைபா, ஷைக்ஹ் தூஸி, தெஹ்ரான், 1324.

கித்தாப் அல்-குரார் வல்-துரார், ஸய்யித் அப்துல் வாஹித் ஆமிதி, ஸிடொன், 1349.

கித்தாப் அல்-இர்ஷாத், ஷைக்ஹ் மு.∴பித் தெஹ்ரான், 1377.

கித்தாப் ரிஜால் அல்-கஷ்ஷி,முஹம்மத் இப்னு முஹம்மத் இப்னு அப்துல் அஸீஸ் அல்-கஷ்ஷி, பம்பாய், 1317.

கித்தாப் ரிஜால் அல்-தூஸி, ஷைக்ஹ் தூஸி, நஜ.∴ப், 1381.

மஆனி அல்-அஹ்பார், ஷைக்ஹ் ஸதூக், தெஹ்ரான், 1379.

முனாக்கிப் அல்-அபீதாலிப், முஹம்மத் இப்னு அலீ இப்னு ஷஹ்ராஷூப்கும்.

மனாக்கிப் வாரஸ்மி, நஜ.∴ப், 1385

மனாக்கிப் இப்னு ஷஹ்ராஷூப்: பார்க்கவும், மனாக்கிப் அல் அபிதாலிப் மக்காத்தில் அல்-தாலிபின், அபுல் ∴பராஜ் இஸ்.∴பஹானி, நஜ.∴ப், 1353.

அல்-மிலல் வல்-நிஹல், அப்துல் கரீம் ஷஹ்ரிஸ்தான்,கெய்ரோ, 1368.

மிஸ்காத் அல்-மஸாபிஹ், முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல்-கத்தீப், டமாஸ்கஸ், 1380-83.

முஜம் அல்-புல்தான், யாக்கூத் ஹமவி, பெய்ரூத், 1957.

முரூஜ் அல்-தஹப், அலீ இப்னு ஹுசைன் மசூதி, கெய்ரோ, 1367.

முஸ்னத் இ அஹ்மத், அஹ்மத் இப்னு ஹன்பல், கெய்ரோ, 1368.

நஹ்வ் (அல்-பிஹ்ஜத் அல்-மந்தியஹ் ∴பீ ஷாஹ் அல்-அல்.∴பியாஹ்).

ஜலால் அல்-தீன் அப்துல் ரஹ்மான் ஸுயூத்தி, தெஹ்ரான், 1281.

நஹ்ஜ் அல்-பலாக்ஹாஹ், அலீ இப்னு அபி தாலிப்,

தெஹ்ரான், 1302.

அல்-நஸாயிஹ் அல்-கா.்.பியாஹ், முஹம்மத் இப்னு அல்-அலவி, பக்தாத், 1368.

அல்-நபஸ் வல் - இஜ்திஹாத், ஷர.்.ப் அல்-தீன் மூசா, நஜ.்.ப், 1375.

நூர் அல்-அப்சார், ஷைக்ஹ் ஷிப்லான்ஜி, கெய்ரோ, 1312.

ரபிஅல்-அப்ரார், ஷமக்ஷாதி.

ரைஹானத் அல்-அதப், முஹம்மத் அலீ தப்ரீஸி, தெஹ்ரான், ஹிஜ்ரா 1326-32 (சூரிய கணக்கு)

ரவ்தத் அல்-ஸ.்.பா, மீர் கவாந், லக்னோ, 1332.

ரிஜால்: பார்க்கவும் தூஸியின் கித்தாப் அல்-ரிஜாஸ்.

ஸ.்.பினத் அல்-பிஹார், ஹாஜ் ஷைக்ஹ் அப்பாஸ் குமி, நஜ.்.ப், 1352-55.

ஸஹீஹ் அபூதாவூத்: பார்க்கவும், அபூதாவூதின் ஸுனன்.

ஸஹீஹ் இப்னு மாஜா: பார்க்கவும், இப்னு மாஜாவின் ஸுனன் ஸஹீஹ் புஹாரி, கெய்ரோ, 1315.

ஸஹீஹ் முஸ்லிம், கெய்ரோ, 1349.

ஸஹீஹ் திர்மிதி, கெய்ரோ, 1350-52.

அல்-ஸவாயிக் அல்-முஹ்ரிக்காஹ், இப்னு ஹஜர் மக்கி, கெய்ரோ, 1312.

ஷர்ஹ் இப்னு அபில் ஹதித்: பார்க்கவும், ஷர்ஹ் நஹ்ஜ் அல்-பலாக்ஹாஹ், இப்னு அபில்-ஹதித்.

ஷர்ஹ் நஹ்ஜ் அல்-பலாக்ஹாஹ், இப்னு அபில்-ஹதீத், கெய்ரோ, 1329.

ஷர்ஹ் நஹ்ஜ் அல்-பலாக்ஹாஹ், இப்னு மைத்தம்

அல்-பஹ்ரானி, தெஹ்ரான், 1276.

ஸீரா (இன்ஸான் அல்-உயூன் ஃபில் - ஆமின் அல்-மாமூன்). ஹலபி கெய்ரோ, 1320.

ஸீரா, இப்னு ஹஷாம், கெய்ரோ,1355-56.

ஸுனன், அபூ தாவூத், கெய்ரோ, 1348

ஸுனன், நஸாயி, கெய்ரோ, 1348.

தபகாத் (அல்-தபக்காத் அல்-குப்ரா) இப்னு ஸஅத், பெய்ருத், 1376.

தபரி: பார்க்கவும், தாரிக் இ தபரி

தத்கிரத் அல்-அவ்லியா, பரீத் அல்-தீன் அத்தார் நிஷாபூரி, தெஹ்ரான், ஹி 1321 (சூரிய கணக்கு).

தத்கிரத் அல்-கவாஸ், ஸிப்த் இப்னு ஜவ்ஸி, தெஹ்ரான், 1285.

தஃப்ஸிர் அல்- மீஸான், அல்லாமா தபாத்தபாயி, தெஹ்ரான், 1375ல் இருந்து தஃப்ஸீர் அல்-ஸாஃபி, முல்லாமஹ்ஸின் காஷானி, தெஹ்ரான், 1269.

தமத்துனி இஸ்லாம் வ அர்ப, கஸ்தேவ் லே பொன், பாரசீக மொழிபெயர்ப்பு ஃபக்ஹர் தா இ ஜீலானி, தெஹ்ரான், ஹிஜ்ரி 1334 (சூரிய கணக்கு).

தராயிக் அல்-ஹக்காயிக், மஃசூம் அலீ ஷாஹ், தெஹ்ரான், 1318.

அல்-தாரிக்: பார்க்கவும், தாரிக் இ அபுல் ஃபிதா, தாரிக் இ தபரி.

தாரிக் இ அபில் ஃபிதா (அல்-முஹ்தஸர்), இமாத் அல்-தீன் அபுல் ஃபிதாஸாஹிப் ஹமாத், கெய்ரோ, 1325.

தாரிக் இ ஆலம் ஆராயி அப்பாஸி, இஸ்கந்தர் பைக் முன்ஷி, தெஹ்ரான், ஹி. 1334 (சூரிய கணக்கு).

தாரிக் இ அகா கானிய்யாஹ் (ஃபீய் தாரிக் ஃபிர்கத் அல்-அகா

கானிய்யாஹ் வல்-புஹ்ரான்) முஹம்மத் ரிழாஅல்-மத்பி இ நஜ.·.ப், 1351.

தாரிக் அல்-குல.·.பா, ஜலால் அல்தீன் அப்துல் ரஹ்மான் ஸுயூத்தி, கெய்ரோ, 1952.

தாரிக்கி தபரி (அன்பார் அல்-ரூஸுல் வல்-முலூக்), முஹம்மத் இப்னு ஜரந் தபரி, கெய்ரோ, 1357.

தாரிக் இ யாக்கூபி, இப்னு வாஹத் யாக்கூபி, நஜ.·.ப், 1358.

தவ்ஹீத், ஷைக்ஹ் ஸதூக், தெஹ்ரான், 1375.

உஸ்த் அல்-காபஹ், இஸ் அல்-தீன் அலீ இப்னு அல்-அதீர் ஜஸரி, கெய்ரோ, 1280.

உஸூல் அல் கா.·.பி, முஹம்மத் இப்னு யாக்கூப் குலய்னி, தெஹ்ரான், 1375.

உயூன் அல்-அஹ்பார், இப்னுகுத்தைபாஹ், கெய்ரோ, 1925-35.

வ.·.பயாத் அல் அயான், இப்னு ஹல்லாக்கான், தெஹ்ரான், 1284.

அல்-வானபி, முல்லா முஹ்ஸின் .·.பைத் காஷானி, தெஹ்ரான், 1310-14.

யநாபி அல்-மவத்தாஹ், ஸுலைமான் .·.பைத் காஷானி, தெஹ்ரான், 1310-14.

யநாபி அல்-மவத்தாஹ், ஸுலைமான் இப்னு இப்ராஹீம் கந்தூஸி, தெஹ்ரான், 1308.

யாக்கூபி: பார்க்கவும், தாரிக் இ யாக்கூபி.